# சைவம்

## 1.சைவம், சிவம் என்பதன் பொருள்

- சைவம் என்பது - சிவ சம்பந்தமுடையது.
- கடவுள் என்பதன் பொருள் - யாவர் உணர்வையும் கடந்தவர்.
- இறைவன் என்பதன் பொருள் - எப்பொருளிலும் தங்குபவன்.
- முதல்வன் என்பதன் பொருள் - எப்பொருளுக்கும் முற்பட்டு அதனை தொழிற்படுத்துபவன்.
- சிவம் என்பது - செம்பொருள் என்ற சொல்லைக் குறிக்கும்.
- "பெண்ணாண் அலியெனும் பெற்றியன் காண்க" - திருவாசகம்.
- திருஞானசம்பந்தர் பௌத்தர்களை வாதில் வென்ற இடம் - திருதெளிச்சேரி
- "பாசமாம் பற்றறுக்கும் ஆரியனே" - திருவாதவூராரின் திருவாசகம்.
- "தெய்வமே சிவமே, சிவனருள் சைவம் சிவத்தொடு சம்பந்தம்" - திருச்சிற்றம்பலநாடிகள் வாய்மொழி.
- "ஓரல் நீழல் ஒன்கழல் இரண்டும்" - திருஞானசம்பந்தர் எழுதிய திருமொழிப்பாடல்.
- சிந்து சமவெளி நாகரிகம் இன்றிலிருந்து - சுமார் ஐந்தாயிரம்(5000) ஆண்டுகளுக்கு முற்பட்டது.
- ஹரப்பா என்னுமிடத்தில் முதன்முதலில் ஆராய்ச்சி செய்து அறிக்கை வெளியிட்டவர் - சர் ஜான் மார்ஷல்.
- "இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்" - காஞ்சிப்புராணம்
- சமட்டி நிலை என்பது - *முழுமுதல் இணைந்தது* எனப் பொருள்படும்.
- வியட்டி நிலை என்பது - பிரிவு நிலையைக் குறிக்கும்.
- "சத்" என்ற சொல் குறிப்பது - சிவபெருமான்.
- "சத்தாகிய ஒன்றே முதற்கண் உலகத் தோற்றத்தின் முன் அத்விதீயமாய் இருந்தது" - சாந்தோக்ய உபநிஷத்.
- "ஒருவன் உருத்திரனே, இரண்டாவதொன்றைக் கொள்வார் அல்லர்" - சுவாதாசுவர உபநிஷத்.
- "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" - மாணிக்கவாசகர்.
- "ஒளி மணிவண்ணன் என்கோ! நளிர்மதிச் சடையன் என்கோ!" - நம்மாழ்வாரின் திருவாய்மொழி.
- சக்தியும் சிவனும் *சத்* எனும் சொல்லின் பகுதி விகுதிகளாக ஓதப்படுகிறார்கள்.
- "தம்மலர் அடியொன்று அடியவர் பரவ" - திருஞானசம்பந்தர்.
- சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை தோன்றிய காலம் - சங்க காலத்தின் இறுதியில்.

- சுடலையாடி என அழைக்கப்படுபவர் - சிவபெருமான்.
- "உலகம் யாவும் யாண்டு ஒடுங்கும், அவை ஆண்டு நின்றே தோன்றும்" -கலித்தொகை.
- "ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்" - சிவஞானபோத முதற் சூத்திரம்.
- "மலர்தலை உலகத்து மரபு நன்கறியப் பலர்செலச் செல்லாக் காடு வாழ்த்து" - தொல்காப்பியரின் காஞ்சித்திணையின் பொருட்பகுதி.
- "ஊனக்கண் பாசம் உணராப் பதியை ஞானக்கண்ணினில் சிந்தை நாடி" - சிவஞான போத ஒன்பதாம் சூத்திரம்.
- தொல்காப்பியம், திருக்குறள் ஆகிய நூல்கள் - நான்கு வேத நெறியினையும், நான்மறை வழக்கையும் தழுவி அமைந்துள்ள நூல்களாகும்.
- "தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" - மாணிக்கவாசகர்.
- கங்கையும் யமுனையும் இணையுமிடம் - பிரயாகை.
- "தேவர் குறளும் திருநாள் மறைமுடியும்" - ஔவையாரின் நல்வழி.
- நான்கு வேதங்களின் முடிபு என அழைக்கப்படுவது - உபநிடதங்கள்.
- சைவ சமயத்தின் பழங்கால பெயர்கள் - திருநெறி, மெய்நெறி, முன்நெறி, சிவமாநெறி.
- ஆரியர்கள் சிந்து நதிக்கரையில் வசித்தபோது அவர்களை "இந்துக்கள்" என அழைத்தவர்கள் -- பாரசீகர்கள் மற்றும் கிரேக்கர்கள்.
- ஹிந்து என்பதன் பொருள் -- ஹிம்சையில் துக்கிக்கின்றவன்
- பிற உயிர் துன்புறும்போது அத்துன்பம் தமக்கு நேர்ந்தது போல் வருந்துபவன் - இந்து
- அன்பே சிவம் எனக் கூறுவது - இந்து மதம்
- இந்து மதத்தின் வேறுபெயர்கள் -- சநாதனதர்மம், திருநெறி, தவநெறி, அருள்நெறி, அன்புமதம் ஆகியன
- "சநாதனதர்மம்" என்பதன் பொருள் -- அழிவிலா அறம்.
- பழமையான மதம், உலக மதங்களுக்கு தாய் - இந்து மதம்
- ***"இந்து மத இணைப்பு விளக்கம்"*** எனும் நூலை எழுதியவர் - **மகாவித்துவான் ஆறுமுக நாவலர்.**

# 2.வேதங்கள் மற்றும் உபநிஷத்துகள்

- வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், புராணம், இதிகாசம் ஆகியன.
- வேதம் என்பது - அறிவுநூல், மறை, சுருதி எனப்படும்.
- வேதம், ரிக், யஜூர், சாமம், அதர்வணம் என நான்கு வகைப்படும்.
- அதர்வண வேதத்தில் கூறப்பட்டுள்ள வரிவிதிப்பு கோல் – 1/6 வரி வசூலிக்கப்பட்டது
- உபநிஷத்துகள் ஏற்காதது – சடங்குகள் மற்றும் வேள்விகள்
- வேதத்தின் மறுபெயர் – ஸ்ருதி, எழுதாக் கிளவி

- வேதத்தின் முக்கிய இலட்சியம் – தன்னைத்தானே அறிந்து கொள்ளல்
- வேதங்கள் வலியுறுத்தும் கடமைகளின் எண்ணிக்கை – ஐந்து
- வேத நன்னடத்தை விதிகள் - ஸ்மிருதிகள் எனப்பட்டன.
- வேதம் ஏற்றுக்கொள்ளும் அறக்கோட்பாட்டு தத்துவம் - ரிதா (இது தர்மநிலைக் கோட்பாட்டின் முன்வடிவம்)
- வேதத்தை அடிப்படையாக ஏற்றுக் கொண்டு நடக்கும் தர்சனங்களின் பெயர் - ஆத்தீகம் (அ) வைதீகம்

## ரிக் வேதம்

- ரிக் என்பதற்கு - துதித்தல் (அ) வழிபடல் எனப்பொருள்.
- வேதங்களில் பழமையானது – ரிக் (10 மண்டலங்கள், 1028 பாடல்கள்)
- முதல் 7 மண்டலங்களில் இறைவனை அக்னியாக குறிப்பிடுவது - ரிக்வேதம்.
- 10வது மண்டலத்தில் இறைவனை பிரமன், இந்திரன் என்ற பெயரில் குறிப்பிடுவது - ரிக்வேதம்
- 10வது மண்டலத்தில் உள்ளது - புருஷசூக்தம் என்ற பாடல் (வர்ணங்களை விளக்குகிறது)
- ரிக் வேதகால கடவுள்கள் – அக்னி, வருணன், இந்திரன்
- ரிக் வேதம் – கி.மு. 1200–க்கு முற்பட்டது.
- இறைவனை துதிப்பாடல் மூலம் வணங்க இவ்வேதம் வழிசெய்கிறது.

## யஜூர் வேதம்

- "யாஜ்" என்ற சொல்லின் பொருள் - யாகம் என்பதாகும்.
- யாகம், பலி, தானம் முதலிய கிரியைகளை செய்யவேண்டிய முறைகளைப் பற்றி குறிப்பிடுவது - யஜூர் வேதம்.
- அமாவாசை, பௌர்ணமிக்கு செய்யவேண்டிய வேள்விகள், பிதுர்கர்மம் பற்றி கூறுவது - யஜூர் வேதம்
- யஜூர் வேதத்திலுள்ள அடங்கியுள்ள சிறப்புவாய்ந்த பகுதி - ருத்ரம்
- யஜூர் வேதம் – வேள்வி, சடங்குகள் பற்றியது (சுக்ல யஜூர் வேதம், கிருஷ்ய யஜூர் வேதம் என இரு பிரிவுகளை உடையது)
- யஜூர் வேதத்தில் உள்ள அத்தியாயங்கள் – 18

## சாம வேதம்

- வக்கதர் என்ற குறிப்பிட்ட புரோகிதர்களால் பாடப்பட்ட பாடல் தொகுப்பு – சாம வேதம் (1459 பாடல்கள் உள்ளன)
- இறைவனை இசையுடன் பாடி துதிப்பது – சாம வேதம்
- பாபம் நீக்கி பலன் கொடுக்கும் பாடல்கள் அடங்கியது - சாம வேதம்

## அதர்வண வேதம்

- மந்திர உச்சரிப்பு முறை, விரோதி அழிவின் பொருட்டு செய்யப்படும் பில்லி, சூனியம் முறை, வேதசாரக்கிரியை, அனுஷ்டானங்களை பற்றிய தோத்திரங்கள் அடங்கியுள்ளது.
- பிரம்ம வேதம் எனப்படுவது – அதர்வண வேதம் (731 பாடல்கள், 20 பகுதிகள்)
- மந்திரம், பில்லி, சூனியம் பற்றியது – அதர்வண வேதம்

## வேத அங்கங்கள்

- பின்வேத காலத்தில் தோன்றிய வேத அங்கங்கள் – ஆறு
- சிட்சை – எழுத்திலக்கணம்/ஒலியியல்
- வியாகரணம் – சொல்லிலக்கணம்
- நிருத்தம் – பொருளிலக்கணம் /சொல்லாக்கம்
- கல்பம் – செயலிலக்கணம் /சமய சடங்கு ஒழுக்கம்
- சந்தஸ் – யாப்பிலக்கணம் /சீர்
- ஜ்யோதிஷம் – ஜோதிடம்

## உபவேதங்கள்

- உபவேதங்களின் எண்ணிக்கை – நான்கு
- ஆயுர்வேதம் – ரிக் வேதத்தின் உபவேதம் (மருத்துவ நூல்)
- தனுர் வேதம் – யஜுர் வேதத்தின் உபவேதம் ( போர்க்கலை பற்றியது)
- காந்தர்வ வேதம் – சாம வேதத்தின் உபவேதம் (இசை, நடனம் பற்றியது)
- சில்ப வேதம் – அதர்வண வேதத்தின் உபவேதம் (கட்டடக் கலைப் பற்றியது)

## உபநிஷத்துக்கள்

- நான்கு வேதப்பிரிவிலிருந்தும் சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம் போன்ற பாகங்களை சேர்ந்தவை - உபநிஷத்துக்கள்.
- "உபநிஷத்" என்பதன் பொருள் - ஆச்சார்யன்(குரு) அருகேயமர்ந்து ஞானம் பெறல்.
- உபநிஷத்துகளின் வேறுபெயர் - திருநான்மறைமுடிபு
- உபநிஷத்துகளின் எண்ணிக்கை மொத்தம் 108.
- உபநிஷத்துகளுக்கு முதலில் பாஷ்யம் செய்தவர் -- சங்கரர். அதன்பின் இராமானுஜர், வித்யாரண்யர், ஆனந்ததீர்த்தர் ஆகியோரும் பாஷ்யம் இயற்றியுள்ளனர்.

# 3.ஆகமங்கள்

- ஆகமம் என்பதன் பொருள் -ஆன்மாக்களின் பாசம் நீக்கி முக்தியருளல் என்பதாகும்.
- இறைவனின் 5 முகத்திலிருந்து 28 ஆகமங்கள் தோன்றின எனக் கூறுவது - காரணாகமம்.
- 28 ஆகமங்களில், 10 சிவபேதங்கள், 18 ருத்ரபேதங்களாகும்.
- உப ஆகமங்கள் மொத்தம் 207.
- திரிலோனசிவாசாரியார் இயற்றிய நூலின் பெயர் - சித்தாந்தசாராவளி (ஆகமங்களின் பொருட்களை வரிசைப்படுத்தி சுருக்கமாக கூறுகிறது).
- சித்தாந்தசாராவளியின் உரையாசிரியர் - அனந்த சிவாச்சாரியார்.

| இறைவனின் முகங்கள் | ஆகமங்களின் பெயர்கள் | | |
|---|---|---|---|
| சத்யோஜாத முகம் (படைப்பு) | காமிகம் | காரணம் | சிந்தியம் |
| | யோகஜம் | அஜிதம் | |
| வாமதேவ முகம் (காத்தல்) | தீப்தம் | சூக்ஷ்மம் | சஹஸ்ரம் |
| | அம்சுமான் | சுப்ரபேதம் | |
| அகோர முகம் (அழிப்பு) | விஜயம் | நிச்வாசம் | சுவாயம்புவம் |
| | அநலம் | வீரம் | |
| தத்புருஷ முகம் (மறைப்பு) | ரௌரவம் | மகுடம் | பிம்பம் |
| | விமலம் | சந்திரஞானம் | |
| ஈசான முகம் (அருளல்) | ப்ரோத்கீதம் | இலளிதம் | சித்தம் |
| | சந்தானம் | சர்வோக்தம் | பரமேஸ்வரம் |
| | கிரணம் | வாதுளம் | |

- விஷ்ணுவை பரதேவதையாக வைத்து கூறுவது - வைணவாகமங்கள்.
- வைணவாகமங்கள் இருவகைப்படும். 1)பஞ்சராத்ராகமம் 2)வைகானாஸாகமம்
- பலரிஷிகள் மூலம் உபதேசிக்கப்பட்டது - பஞ்சராத்ராகமம்
- மேலக்கோட்டை நாராயணபுரம், காஞ்சி, ஸ்ரீரங்கம் ஆகிய கோவில்களில் நடைபெறும் பூஜை முறை -- பஞ்சராத்ராகமம்.
- திருப்பதி கோவிலில் நடைபெறும் பூஜை முறை - வைகானாஸாகமம்
- வைகானாஸாகமத்தை உபதேசித்தவர் - விகனஸர்.
- ஆகமங்களில் சொல்லப்படுபவைகளில் முக்கியமானவை - மந்திரம், தந்திரம்
- சைவாகமங்களின் சரியை, கிரியை, யோக, ஞான பாதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியே தகவல்களை தருகின்றன.
- சரியை - பூஜைப்பொருள் சேகரித்தல், பூஜை முறைகள் பற்றி கூறுகிறது.
- கிரியை - பூஜை, திருவிழா, சமய விசேஷம் பற்றி கூறுகிறது
- யோகபாதம் - ஆன்ம சுத்தி, அந்தர்யாகம் பற்றி கூறுகிறது
- ஞான பாதம் - பதி, பாச லட்சணங்களைப் பற்றி கூறுகிறது.

## 4.தோத்திரங்கள்

- 12 திருமுறைகள் தோத்திரங்கள் எனப்படும்.
- திருமுறை என்பது தம்மை அடைந்தோரை சிவமேயாக்குதலாகும்.
- முதல் ஏழு திருமுறைகளையும் சேர்த்து "தேவாரம்" என்பர். இதன் பொருள் இறைவனுக்குரிய பாமாலை என்பதாகும்.
- முதல் ஏழு திருமுறைகளின் மறுபெயர் - அடங்கன் முறை, திருநெறித்தமிழ்
- திருநாவுக்கரசர் அருளிய 4-ம் திருமுறை நூல்கள் - திருநேரிசைப்பா, திருவிருத்தம்
- திருநாவுக்கரசர் அருளிய 5-ம் திருமுறை நூல்கள் - திருக்குறுந்தொகை
- திருநாவுக்கரசர் அருளிய 6-ம் திருமுறை நூல்கள் - திருத்தாண்டகம்.

| எழுதிய ஆசிரியர்கள் | திருமுறை |
|---|---|
| திருஞானசம்பந்தர் அருளிய தேவாரம் | 1,2,3 ம் திருமுறை |
| திருநாவுக்கரசர் | 4,5,6 ம் திருமுறை |
| நம்பிஆரூரர் (எ) சுந்தரர் | 7 ம் திருமுறை |
| மாணிக்கவாசகர் | 8 ம் திருமுறை |
| திருமாளிகைத்தேவர் முதலியோர் | 9 ம் திருமுறை |
| திருமூலர் | 10 ம் திருமுறை |
| திருவாலவாயுடையார், காரைக்கால் அம்மையார் முதலியோர் அருளியது | 11 ம் திருமுறை |
| சேக்கிழார் | 12 ம் திருமுறை |

- திருவாதவூரார் அருளிய 8-ம் திருமுறை நூல்கள் - திருவாசகம், திருக்கோவை.
- திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளிய 9-ம் திருமுறை நூல்கள் - திருவிசைப்பா, திருப்பல்லாண்டு.
- திருவாலவாயுடையார் என அழைக்கப்படுபவர் - சிவபெருமான்.
- பேயார் என அழைக்கப்படுபவர் - காரைக்காலம்மையார்.
- திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - ஜி.யு.போப்.
- திருமுறைகளின் சில பாடல்களை மொழிபெயர்த்தவர்கள் - இராமநாதன், பொன்னம்பலம் மற்றும் பிலிப்ஸ்.
- விஷ்ணுவை தமிழ்பாடல்கள் மூலம் வழிபட 12 ஆழ்வார்கள் அருளியது - நாலாயிர திவ்விய பிரபந்தம்.
- திருமூலர் எழுதிய "திருமந்திரமாலை"யின் வேறுபெயர் - தமிழ் மூவாயிரம்.
- நம்பியாரூரர் காலத்தில் வாழ்ந்த சேரமான்பெருமாள் நாயனாரின் வேறுபெயர் - கழறிற்றறிவார்.
- நம்பியாண்டார் நம்பி வாழ்ந்த காலம் - இராஜராஜசோழன் வாழ்ந்த கி.பி.10-ம் நூற்றாண்டு.
- "திருத்தொண்டர் திருவந்தாதி"யை எழுதியவர் - நம்பியாண்டார் நம்பி.
- 12-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் அநபாய சோழனின் வேண்டுகோளின்படி சேக்கிழார் அருளியது - பெரியபுராணம்.
- பெரிய புராணத்தின் வேறுபெயர் - திருத்தொண்டர்புராணம்
- திருத்தொண்டர்த்தொகையின் பேருரையாய் நின்றுநிலவும் நூல் - பெரியபுராணம்
- "தோடுடைய செவியன்" என்னும் பாடல் அமைந்த நூல் - பெரியபுராணம்.
- சிவநெறிக்கு தலையாய பிராமண நூல் இலக்கியங்களாக கருதப்படுவது - பன்னிரு திருமுறைகள்.
- சைவ சாத்திரங்களின் ஆதித்தமிழ் முதற்நூலாக கருதப்படுவது - பத்தாம் திருமுறையாக உள்ள திருமந்திரமாலை.

# 5.சைவ சாத்திரங்கள்

- சுருக்கமாக சொல்லப்பட்ட நன்னெறி வழிகாட்டி - சாத்திரங்கள் ஆகும்.
- சாத்திரங்கள் மொத்தம் 14 ஆகும்.

<table>
<tr><th>சாத்திரங்கள்</th><th>எழுதியவர்</th><th>சாத்திரங்கள்</th><th>எழுதியவர்</th></tr>
<tr><td>திருவுந்தியார்</td><td>திருவியலூர் உய்யவந்த தேவநாயானார்</td><td>சிவப்பிரகாசம்</td><td rowspan="7">உமாபதி சிவனார்</td></tr>
<tr><td>திருக்களிற்றுப்படியார்</td><td>திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார்</td><td>திருவருட்பயன்</td></tr>
<tr><td>சிவஞானபோதம்</td><td>மெய்கண்ட தேவநாயனார்</td><td>வினாவெண்பா</td></tr>
<tr><td>இருபா இருபது</td><td rowspan="2">அருணந்தி சிவாச்சாரியார்</td><td>போற்றப:றொடை</td></tr>
<tr><td>சிவஞானசித்தியார்</td><td>கொடிக்கவி</td></tr>
<tr><td>உண்மைவிளக்கம்</td><td>மனவாசகம் கடந்தார்</td><td>நெஞ்சுவிடுதூது</td></tr>
<tr><td>சங்கற்பநிராகரணம்</td><td>உமாபதி சிவனார்</td><td>உண்மைநெறி விளக்கம்</td></tr>
</table>

- மேற்கண்ட 14 நூல்களும் - மெய்கண்ட சாத்திரங்கள்(மெய்கண்டநூல்கள்) எனப்படும்.
- திருவுந்தியார் மற்றும் திருக்களிற்றுப்படியார் இயற்றப்பட்ட காலம் - 12-ம் நூற்றாண்டு. ஏனைய நூல்கள் தோன்றியது - 13-14ம் நூற்றாண்டு.

## சிவஞானபோதம்

- சாத்திரங்களில் தலைசிறந்த நூல் - சிவஞானபோதம்
- சிவஞானபோதத்தின் காப்புச் செய்யுளில் வணங்கப்படும் கடவுள் - சிவபிரான், விநாயகப் பெருமான்.
- சிவஞானபோதம் என்பதன் பொருள் - கடவுளை அறிந்து தெளிதலுக்குரிய நூல்.
- சிவஞானபோதத்திலுள்ள சூத்திரங்களின் எண்ணிக்கை -- 12

| சூத்திரம் | சூத்திரம் கூறும் கருத்துக்கள் |
|---|---|
| 1 | பதியின் உண்மையைக் குறிக்கிறது (பதி -இறைவன், முதல்வன்) |
| 2 | பதியின் பொது இலக்கணம் |
| 3 | பசுவின் உண்மை (பசு - உயிர், ஆன்மா) |
| 4 | பாசம் மற்றும் பசுவின் பொது இலக்கணம் |
| 5 | பாசத்தின் சிறப்பிலக்கணம்(இறைவன் உயிர்களை தொழிற்படுத்துதல்) |
| 6 | பதியின் சிறப்பிலக்கணம் |
| 7 | பசுவின் சிறப்பிலக்கணம் |
| 8 | ஞானத்தை உணரும் முறை |
| 9 | ஆன்ம சுத்தி |
| 10 | பாச நீக்கம் |
| 11 | சிவப்பேற்றினை விளக்குகிறது |
| 12 | அணைந்தோர் தன்மை எனப்படும் ஜீவன்முத்தர் இயல்பைக் குறிக்கும் |

- சிவஞானபோதத்தின் உரைநூல்கள் -- பாண்டிபெருமாள் விருத்தி, சிவஞானபோதச் சிற்றுரை, சிவஞானபோதமாபாடியம் (அ) திராவிட மாபாடியம் ஆகியன.
- திராவிடமாபாடியம் உரைநூலை எழுதியவர் - அப்பாடியம் விக்கிரமசிங்கபுரத்தில் உதித்தவரும், திருவாவடுதுறை ஆதீனத்தை சேர்ந்தவருமான மாதவ சிவஞான சுவாமிகள்.
- சிவஞானபோதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் - ஹாய்சிங்டன், பையட்பாதிரியார், கார்டன்மாத்யூஸ், நல்லசாமிப்பிள்ளை, டேவிட்நவமணிநாடார், சிவபாத சுந்தரம் முதலியானோர்.
- உடம்பை "சூன்யம்" என அழைத்தவர்கள் - பௌத்த மதத்தினர்.
- உடம்பை "ஆன்மா" என அழைத்தவர்கள் - உலகவாதிகள்.
- சிவஞானபோதத்தின் 4-ம் சூத்திரத்தில் மறுக்கப்படுவது - மதம்.
- சிவஞானபோதத்தின் 3-ம் சூத்திரத்தின் பொருள்கள் - 1)ஆன்மா சூன்யமன்று 2)ஆன்மா பருவுடலன்று 3)ஐம்பொறிகள் ஆன்மா அல்ல 4)கனவுடலாக நுண்ணுடம்பு ஆன்மாஅன்று 5)பிராண வாயு ஆன்மா அன்று 6)பிரம்மம் ஆன்மா அன்று 7)உடம்பு முதலான கருவிகளின் கூட்டம் ஆன்மா அன்று
- "கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுபவர், மற்றீண்டு வாராநெறி" என 8-ம் சூத்திரப் பொருளை விளக்கும் நூல் - திருக்குறள்.
- "ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு" என 9-ம் சூத்திரப்பொருளை விளக்கும் நூல் - திருக்குறள்.
- "சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்து சார்தரா சார்தரு நோய்" - என 10-ம் சூத்திரப்பொருளை விளக்கும் நூல் - திருக்குறள்.
- "தம்மை உணரார் உணரார், உடங்கியைந்து தம்மில் புணராமை கேளாம்புறன்" - சிவஞானபோதம்.

## சிவஞானசித்தியார்

- சிவஞானபோதத்தை தழுவி எழுதப்பட்ட நூல் - சிவஞானசித்தியார்.
- சிவஞானசித்தியாருக்கு உரைஎழுதியவர்கள் - சிவஞானயோகியர், திருவாவடுதுறை ஆதீனத்தின் 16-ம் பட்டம்பெற்ற ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஆகியோர்.
- சிவஞானசித்தியர் இரு பிரிவுகளை உடையது. அவை 1)சுபக்கம் 2)பரபக்கம்
- சுபக்கம் என்பதன் பொருள் - தன் கொள்கை
- சுபக்கம் விளக்குவது - சிவஞானபோதத்தின் பொருள்நிலை.
- **சுபக்கம் 328** விருத்தங்களால் ஆகியது.
- சுபக்கத்திற்கு உரை எழுதியவர்கள் -- நிரம்ப அழகியதேசிகர், மறைஞானதேசிகர், சிவாக்கியயோகி, ஞானப்பிரகாசர்.

- பரபக்கம் என்பதன் பொருள் - பிற கொள்கைகளை மறுக்கும் கருத்து.
- **பரபக்கம்** 301 விருத்தங்களால் ஆகியது.
- பரபக்கத்திற்கு உரை எழுதியவர் -- தத்துவப்பிரகாச தம்பிரான் சுவாமிகள்.
- சிவஞானசித்தியாரை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்கள் - டாக்டர் கிராண்ட், நல்லசாமிப்பிள்ளை, சிவராமன்.
- சிவஞானசித்தியாரை இந்தியில் மொழிபெயர்த்தவர் - B.D .ஜெயின்.
- "சிவஞானசித்தி சிவாகமர்த்தங்களுக்கெல்லாம் உரையாணி என செயப்பட்டு நிலவுவது" எனக் கூறியவர் - திராவிடமாபாடிய ஆசிரியர் சிவஞானசுவாமிகள்.
- "பாரில் உள்ள நூலெல்லாம் பார்த்தரிய சித்தியிலே ஓர் விருத்தபாதி போதும்" என சிவஞானசித்தியாரைப் பற்றி அருளியவர் - குருஞானசம்பந்தர்.

## இருபா இருபது

- குரு, மாணக்கனின் உரையாடல் முறையில் சைவ சித்தாந்த கருத்துக்களை கூறும் நூல் - இருபாஇருபது
- இந்நூல் 20 செய்யுட்களாலானது. வெண்பா, ஆசிரியப்பா கலந்து அந்தாதி தொடை அமையப் பாடப்பட்டது.
- இந்நூல் மெய்கண்டதேவரை வினவும் முகமாக பாடப்பட்டு உள்ளது.

## திருவுந்தியார்

- இந்நூல் கி.பி.1147-ல் திருவியலூர் உய்யவந்ததேவநாயனாரால் இயற்றப்பட்டது.
- இந்நூல் 45 கலித்தாழிசைகளால் ஆகியது.
- இதில் முக்திமார்க்கம் பற்றி நன்கு விளக்கப்படுகிறது.
- கேட்டல் ஞானம் அனுபவஞானமாய் முதிர்வதற்கு தேவையான இருவகை யோகப் பயிற்சிகள் 1)ஆதாரயோகம் 2)நிராதாரயோகம்.

## திருக்களிற்றுப்படியார்

- திருவுந்தியாரை தழுவி வந்த வழிநூல் - திருக்களிற்றுப்படியார்
- இந்நூலை எழுதியவர் - திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் (திருவியலூர் உய்யவந்ததேவநாயனாரின் மாணக்கர்) காலம் கி.பி.1177.
- இந்நூல் 100 வெண்பாக்களால் ஆகியது.
- உபநிடதம், பிராமணங்கள், பகவத்கீதை ஆகிய மூன்றும் முதன்மையான பிராமண நூல்கள் என இந்நூல் கூறுகிறது.

## உண்மைவிளக்கம்

- சிந்தாந்த உண்மையை விளக்குவது - உண்மைவிளக்கம்
- இந்நூல் **53** வெண்பாக்களால் ஆனது.
- "மெய்க்கண்ட சந்தான அனுபவத்திரட்டு " எனப்படுவது - உண்மைவிளக்கம்.
- மெய்கண்டதேவரை அவரது மாணக்கர் வினவ அவர் விடை கூறி வருவது போல் வைத்து ஆக்கப்பட்ட நூலாகும்.
- சைவ சாத்திரங்களை கற்றுணர விரும்புவோர் இந்நூலை முதற்கண் ஓதி உணர்தல் வேண்டும்.

## சிவப்பிரகாசம்

- சிவஞானபோதத்தின் சார்புநூல் -- சிவப்பிரகாசம்
- இதில் சைவநூல்களின் இயல்பும், தீட்சை வகைகளும் கூறப்பட்டுள்ளது.
- இது பொது, சிறப்பு என இருவகைப்படும்.
- இந்நூல் **100** விருத்தங்களை கொண்டது.
- இது பதி, பசு, பாச இலக்கணம் பற்றி விளக்குகிறது.
- "புறச்சமயத்தவருக்கு இருளாய்" "தொன்மைய ஆம் எனும் எவையும் நன்றாக" "நூலெனும் எவையும் தீதாகா" ஆகிய பாடல்வரிகள் உள்ள நூல் - சிவப்பிரகாசம்.

## திருவருட்பயன்

- "செந்தமிழ் பொதுமறையாகிய திருக்குறளுக்கு ஒழிபு" என கொள்ளத்தக்க நூல் - திருவருட்பயன். இது பத்து அதிகாரங்களும், 100 பாடல்களும் கொண்டது.

## வினா வெண்பா

- இந்நூல் **13** வெண்பாக்களால் ஆகியது.
- உமாபதி சிவனார் தம் ஆசியராகிய மறைஞானசம்பந்தரிடம் சாத்திர உண்மைகளை கேட்கும் விதமாக இந்நூல் அமைந்துள்ளது.

## போற்றிப:.றொடை

- தமக்கு சிவஞானம் நல்கிய குருமூர்த்தியை வாழ்த்தி பாடிய பாடல்கள் அடங்கியது.
- உயிர்களுக்கு திருவருள் தொன்றுதொட்டு செய்துவரும் உபகாரங்களை எடுத்துக் கூறும் நூல் - போற்றிப:.றொடை
- ஞானதீக்கையின் பயனையும், திருவைந்தெழுந்தின் ஓதும் முறையையும் இந்நூல் உரைக்கிறது.

## கொடிக்கவி

- ஒரு கட்டளை கலித்துறை மற்றும் நான்கு வெண்பாக்களும் அடங்கியது.
- ஏறாத தில்லைக்கொடியை ஏற்றிய பாடல்கள்.(மொத்தம் - 5 பாடல்கள்)

## நெஞ்சுவிடுதூது

- ஆசிரியர் உமாபதிசிவனார் தம் குருவான மறைஞானசம்பந்தரிடம் மாலை வாங்கி வரும்படி தனது நெஞ்சை தூது விடும் முறையில் அமைய பெற்ற நூல்.

## உண்மைநெறி விளக்கம்

- தசகாரியங்களை விளக்குகிறது. முதலில் இதை எழுதியவர் உமாபதிசிவம் என கூறப்பட்டது. ஆராய்ச்சி முடிவில் இதை எழுதியவர் - சீர்காழிதத்துவநாதர் என்று அறியப்பட்டது.
- இதனுடைய மூலநூல் - துகளறுபோதம்.
- துகளறுபோதத்தை இயற்றியவர் - சீர்காழிச் சிற்றம்பலநாடிகள்
- பரமுத்தி நிலையை எய்தும் நிலைகளை "பூதப்பழிப்பு" முதலாக "பரமானந்த அவசம்" வரை 30 அவதாரம் எனக் கூறுவது - துகளறுபோதம்
- இதில் முதல் ஏழு பாச அவதாரம், பின் 15 பசு அவதாரம், இறுதி 8 பதி அவதாரம் எனவும் வகை செய்யப்பட்டு உள்ளது.
- மெய்கண்ட நூல்களுடன் சேர்த்து அச்சிட்டு வழங்கும் நூல் - துகளறுபோதம்.

## சங்கற்ப நிராகரணம்

- வேற்று சமயங்களின் சந்தேக கருத்துக்களை சங்கற்பம் எனக் கூறி நிராகரிக்கிறது.
- பரமுத்தி நிலையை அடையத் தலைப்படும் உயிர் மேற்கொள்ள வேண்டிய ஞான செய்திகளை விளக்குகிறது.
- இந்நூல் **13** அகவற்பாக்களையும், **ஒரு** வெண்பாவையும் உடையது.
- மெய்கண்ட நூல்களுள் இறுதி 8 நூல்களை எழுதியவர் - கொற்றவன்குடி உமாபதி சிவனார். இவருடைய ஆசிரியரான கடந்தை மறைஞான சம்பந்தர் எழுதியதாக கூறப்படும் நூல் -- சதமணிக்கோவை.
- சாலிவாகன ஆண்டு - 1235 (கி.பி.1313)
- "சிவப்பிரகாசத்தின் பரபக்கம்" என அழைக்கப்படுவது - சங்கற்பநிராகரணம்.
- "சிவாத்துவித சைவம்" என அழைக்கப்படுவது - காரண பரிணாமவாதம்.
- "சுத்த சைவம்" என அழைக்கப்படுவது - சைவ வாதம்.

# 6.இதிகாசங்கள் மற்றும் புராணங்கள்

- இதிகாசம் என்பதன் பொருள் - ஐதீகத்தை நிரூபணம் செய்யும் வரலாறு.
- இதிகாசத்திற்கு எ.கா. இராமாயணம், மகாபாரதம்.
- ஐந்தாம் வேதம் எனப்படுவது -- மகாபாரதம்.
- புராணம் என்பதன் பொருள் -- பழைய வரலாறு.
- புராணங்களை எழுதியவர் - வேதவியாஸர். உலகிற்கு அளித்தவர் - சூதபுராணிகர்.
- புராணங்கள் மொத்தம் 18.

| புராணங்கள் | எண்ணிக்கை | பெயர்கள் |
|---|---|---|
| சிவபுராணங்கள் | 10 | சைவம், இலிங்கம், ஸ்காந்தம், பவிஷ்யம், மார்க்கண்டேயம், வராகம், வாமனம், மச்சம், கூர்மம், பிர்மாண்டம் |
| விஷ்ணு புராணங்கள் | 4 | காருடம், நாரதீயம், வைஷ்ணவம், பாகவதம் |
| பிரம்ம புராணங்கள் | 2 | பிர்மம், பதுமம் |
| அக்கினிபுராணம் | 1 | ஆக்னேயம் |
| சூரிய புராணம் | 1 | பிரம கைவர்த்தம் |
| ***மொத்தம்*** | ***18*** | |

- (தர்மம் சர -- தர்மத்தைச் செய் ) ( ஸத்யம்வத -- உண்மையைப் பேசு)
- இந்து மத உட்பிரிவுகள் நான்கு வகைப்படும். அவை 1)புறச்சமயங்கள் 2)அகச்சமயங்கள் 3)அகப்புறச்சமயங்கள் 3)புறப்புறச் சமயங்கள்.
- கடவுள் இல்லை எனக் கூறும் சமயங்கள் -- சமணம், உலகாயதம், புத்தம், சாங்கியம், மீமாம்சம்.
- புராணக் காலம் – கி.பி.300 –கி.பி. 1000 என்பது – யு.எஸ். சர்மா கூற்று
- புராணங்களில் பழமையானது – வாயு புராணம்
- புராணத்தில் இடம்பெற்றுள்ள கருத்து – ஐந்து
- மகாபுராணங்களின் எண்ணிக்கை – பதினெட்டு
- உப புராணங்களின் எண்ணிக்கை – பதினெட்டு
- பதுமம் எனப்படுவது – பத்ம புராணம் எனப்படும் பிரம்மபுராணமே

# 7.மதங்கள்

- கி.மு.6--ஆம் நூற்றாண்டில் பாரசீகத்தைச் சேர்ந்த ஜெராஸ்டரும், சீனாவில் கன்பூஷியஸூம் புதிய கருத்துக்களை போதித்தனர்.
- புத்த, சமண, மதங்கள் தோன்ற காரணம்.-- சமயச் சடங்குகளைக் களைய, சாதி ஏற்றத் தாழ்வை ஒழிக்க, மிருகவதையை தடுக்க

**சமண சமயம்: ( கி.மு.540 - கி.மு.467 )**

- கி.மு.6--ஆம் நூற்றாண்டில் தோன்றியது.
- இதன் வேறுபெயர் - ஆருகதம், ஜைனம், நிகண்டவாதம், ஆசீவகம்.
- இதில் கூறப்பெறும் பொருள் ஏழு. அவை 1.சீவன் 2.அசீவன் 3.ஆச்சிரவம் 4.சமுவரம் 5.பந்தம் 6.வீடு 7.நிர்ச்சவரம்.

சீவன்

அநாதிசித்தன் (அருகக்கடவுள்) | முத்தன் (ஆசாபாசங்கடந்தவன்) | பௌத்தன் (ஆசையில் கட்டுண்டவன்)

- சீவன் ஆசாபாசங்களை கடந்து ஆனந்த ஞானம் முதலிய 8 குணங்களைப் பெற்று ஆகாயத்தில் மேல்நோக்கிச் சென்று மேலிடத்தில் இருப்பதே முக்தி ஆகும்.
- சிலரின் கருத்துக்கள் -- ரிஷபதேவரால் (முதல் தீர்த்தங்கரர்) சமணசமயம் தோற்றுவிக்கப்பட்டது.
- 23–வது தீர்த்தங்கரர் – பர்சவ நாதர்
- தீர்த்தங்கரர் என்பது – பிறவிப் பெருங்கடலை கடந்த ஞானி எனப்பொருள்.
- சமண சமயத்தை தோற்றுவித்தவர் -- வர்த்தமான மகாவீரர் (24-வது தீர்த்தங்கரர்)
- கி.மு. 540 - ல் பீகாரில் வைசாலிக்கு அருகே **குந்தக்** கிராமத்தில் மகாவீரர் பிறந்தார்.
- தந்தை -- சித்தார்த்தர். தாயார் -- திரிசலா(லிச்சாவி மரபைச் சேர்ந்த இளவரசி).
- மனைவி -- யசோதா. மகள் – பிரியதர்சனா
- 30 வயதில் துறவு பூண்டார்.
- 42 வயதில் கைவல்ய நிலையாகிய ஆன்மீக அறிவு பெற்றார்.
- ஜீனர் (தன்னை வென்றவர்) என்றும் அழைக்கப்பட்டார்.
- இராஜகிரிக்கு அருகேயுள்ள பவபுரியில் கி.மு.467–ல் தனது 72-வது வயதில் இறந்தார்.
- கடவுள் நம்பிக்கை இல்லை. மனிதனின் ஆத்ம ஒளியே கடவுள் என போதித்தார். மறுபிறவி மீது நம்பிக்கை கொண்டனர்.
- இவரது போதனைகள் திரிரத்தினங்கள்(நன்னம்பிக்கை, நல்லறிவு, நன்னடத்தை) எனப்படும்.
- அஹிம்சை நெறிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

- சீடர்களுக்கு ஐந்து கொள்கைகளை(விரதங்கள்) போதித்தார்.
    1. அஹிம்சை ------- உயிர்களுக்கு தீங்கு செய்யாமை.
    2. சத்தியம் -------- உண்மை பேசுதல்.
    3. அஸ்தேயம்-------- திருடாமை.
    4. தியாகம் -------- செல்வம் துறத்தல்.
    5. பிரம்மசரியம் ---- தூய வாழ்க்கை.
- கர்மா என்ற தத்துவத்தை நம்பினார்.
- சமண சமயம் கூறும் பாவங்களின் எண்ணிக்கை – 13
- சமண சமயத்தின் உயர்ந்த நோக்கம்--- மேலான அறிவினை பெறுதல்
- சமண சமயத்தை பின்பற்றுபவர்கள் -- திகம்பரர்(ஆடை துறந்தவர், ஆகாயத்தை ஆடையாக அணிந்தவர்) ஸ்வேதாம்பரர் (வெள்ளை ஆடை அணிந்தவர்).
- பிராக்ருத மொழியில் கொள்கைகளை பரப்பினார்.
- சமண சமயத்தை ஆதரித்த மன்னர்கள் -- பிம்பிசாரர், அஜாதசத்ரு, கூன்பாண்டியன், முதலாம் மகேந்திரவர்மன், கலிங்க மன்னன் காரவேலன், சந்திரகுப்த மௌரியர் (தனது இறுதிகாலத்தில் ஆதரித்தார்), களப்பிரர்கள்.
- சமண சமய நூல்கள் -- சீவகசிந்தாமணி (திருத்தக்கதேவர்), நன்னூல்(பவணந்தி முனிவர்).
- திருவள்ளுவர் சமண சமயத்தை சார்ந்தவர்.
- குஜராத்தின் வரலாறு, யோகசூத்திரம் ஆகிய நூல்களை எழுதியவர்-- சமணசமயத்தை தழுவிய ஹேமச்சந்திரர்.
- சமண சமய கட்டிடக்கலைக்கு எடுத்துகாட்டு -- இராஜஸ்தானில் உள்ள அபுமலையில் காணப்படும் தில்வாரா கோயில், கஜூராஹோ கோயில், சித்தூர், ரனக்பூர் கோயில்.
- சமணர்களின் சிற்ப வேலைப்பாடுகள் காணப்படுமிடங்கள் -- உதயகிரி, கதிகும்பா, எல்லோரா, கிர்னார்.
- மைசூருக்கு அருகேயுள்ள சரவணபெலகொலா எனுமிடத்தில் உள்ள கோமதீஸ்வரர் சிலை சமணர்களின் நினைவு சின்னமாகும்.
- கி.மு. 300–ம் ஆண்டில் பாடலிபுத்திரத்தில் முதல் சமண அவை நடைபெற்றது. (மகாவீரரின் கோட்பாடுகள் 12 அங்கங்களாக பிரிக்கப்பட்டது)
- கி.பி. 512–ல் வல்லபியில் 2–ம் மாநாடு கூடியது.
- சமண சமயம் வீழ்ச்சியுறக் காரணம் – அது தெரிவித்த கொல்லாமை எனும் கொள்கை.
- அநேகாந்தவாத கோட்பாடு பற்றி விளக்குவது - மகாவீரரின் சமண சமயக் கொள்கை.
- அநேகாந்தவாதம் - பல்நிலைக்கோட்பாடு: ஏகாந்தவாம் - ஒருநிலைக்கோட்பாடு
- யாக்ஞவல்கிய முனிவரால் எழுதப்பட்ட பண்டைய சமயச் சட்டநூலாகவும், சொத்துரிமை குற்றவியல் பற்றியும் எடுத்துரைக்கும் நூல் - யாக்ஞவல்கிய சுமிருதி

- சமண முனிவர்களின் நடத்தை விதிகள் கொண்ட நூல் - 6 சேய சூட்டங்கள்.
- எளிய வாழ்க்கையைப் பற்றிய மூலத்தத்துவங்கள் அடங்கிய நூல் - 4 மூல சூட்டங்கள்
- சமண மதத்தின் வேறுபெயர்கள் - அருகமதம், நிகண்டமதம், அநேகாந்தவாதமதம், சியாத்வாத மதம்
- 23-வது தீர்த்தங்கரான பார்ச்சுவ நாதரைப் பின்பற்றியவர்கள் - **ஸ்வேதாம்பரர்கள்**
- 24-வது தீர்த்தங்கரான வர்த்தமானரைப் பின்பற்றியவர்கள் - **திகம்பரர்கள்**
- வர்த்தமான மகாவீரர் உண்மையறிவை பெற்ற இடம் - ரிஜுபாலிகா
- கோசலமால்கி புத்திரா என்பவரை 24-வது தீர்த்தங்கராக ஏற்றுக் கொண்ட சமணர்கள் - **அஜுவிக்ரர்கள்** எனப்பட்டனர்.
- அஜுவிக்ரர்கள் பின்பற்றாத சமண சமய கருத்துகள் - மறுபிறப்பு, கருமவினை
- உருவ வழிபாடு செய்ய மறுத்த சமணர்கள் - **ஸ்தானகவாசி** எனப்பட்டனர்.
- வாய் வழியாக பின்பற்றப்பட்ட சமணசமய அறிவுரைகளை தொகுத்தவர் - வாலிநாட்டு துருவசேனர்
- துருவசேனரும், பத்திரபாகுவும் தொகுத்த நெறிகள் - பதினான்கு பர்வாங்கங்கள்
- பாடலிபுத்திரத்தில் முதல் சமண மாநாடு கூட்டியவர் - லபத்ரா
- முதல் சமண மாநாட்டில் தொகுக்கப்பட்டவை - பன்னிரு அங்கங்கள்
- கி.பி.5-ம் நூற்றாண்டில் வல்லபியில் கூடிய 2-வது சமண அவையில் தொகுக்கப் பட்டவை - 12 உப அங்கங்கள்.
- கி.பி.12-ம் நூற்றாண்டில் சமண வேதாகமங்களை திருத்தியவர் - ஹேமச்சந்திரர்
- **சமண சமய நூல்கள்** - சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், வளையாபதி, நீலகேசி, உதயணன் காதை, நாககுமாரகாவியம், மேருமந்திர புராணம், நரிவிருத்தம், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி, திணைமாலைநூற்றம்பது, சத்தியசிந்தாமணி, யாப்பருங்கலக்காரிகை, யாப்பருங்காலவிருத்தி, நேமநாதம், நன்னூல், அகப்பொருள் விளக்கம், தமிழ்நிகண்டு, சூடாமணிநிகண்டு, நெல்லிலக்க வாய்ப்பாடு, சிறுகுழி வாய்ப்பாடு, கணிதமாலை, ஜிதேந்திரமாலை.
- ரிஷப தேவர் - காளை : பர்சவநாதர் - நாகம் : மகாவீரர் - சிங்கம்

## புத்த சமயம்: ( கி.மு.567 - கி.மு.487 )

- தோற்றுவித்தவர்: -- புத்தர்.
- இயற்பெயர் -- சித்தார்த்தர்.
- நேபாளத்திலுள்ள கபிலவஸ்து என்ற இடத்திற்கு அருகே லும்பினி வனத்தில் கி.மு.567 பிறந்தார்.
- தந்தை: -- சுத்தோதனர்(சாக்கிய குல தலைவர்).
- தாயார் -- மாயாதேவி (கோலியா குல இளவரசி)
- சிற்றன்னை -- பிராஜாபதி கௌதமி (இவரால் வளர்க்கப்பட்டதால் கௌதமபுத்தர் என அழைக்கப்பட்டார்.
- மனைவி – யசோதரை மகன் -- இராகுல்.
- 29-ல் துறவறம்.
- புத்தரின் முதல் குரு -- அரதகலமா. 2--வது குரு -- ருத்ரகா.
- புத்தமதம் நான்கு வகைப்படும். அவை 1)யோகாசாரம் 2)சௌந்திராந்திகம் 3)வைபாடிகம் 4)மாத்மிகம்
- கொள்கை: எல்லா பொருளும் சூன்யம், கடவுள் இல்லை. ஞானமே ஆன்மா. வினையும் மறுபிறப்பும் உண்டு. வினையூட்டி வேண்டாம் அது தானே சென்று பற்றும்.
- புத்தம் கூறும் நற்குணங்கள் பத்து. தீயகுணங்கள் பத்து.
- துன்ப விடுதலை - நிர்வாணம் (அ) சமாதி நிலை என்பர்.
- கயை நகரில் போதி மரத்தின்(அரசமரம்) அடியில் ஞானோதயம்(மெய்ஞான அறிவு) பெற்றார். அது முதல் புத்தர் என்றும், சாக்கியமுனி என்றும் அழைக்கப்பட்டார்.
- வாரணாசிக்கருகே சாரநாத் மான் பூங்காவில் முதன்முதலில் சமயக்கருத்துக்களை போதித்தார்.
- 80--வது வயதில் மல்லர்களின் தலைநகரான **குசி** நகரில் இறந்தார்.
- போதனைகள்: அஹிம்சையையும், அன்புகாட்டுதலையும் அடிப்படையாக கொண்டது.
- இவரது போதனைகளில் நான்கு பெரும் உண்மைகளும், எண் வகை(அஷ்டாங்கி) மார்க்கங்களும், முக்கியமானதாகும்.
- நான்கு பெரும் உண்மைகள் – துக்கம் , சமுதாயம் , நிரோதம்(ஆசையை ஒழிப்பதின் மூலம் துன்பத்திலிருந்து விடுதலை) , மார்க்கம்.
- சீடர்களுக்கு ஐந்தொழுக்க நெறிகளைப் போதித்தார்.
- கொல்லாமை கொள்கையை வலியுறுத்தினார். கர்மா கொள்கை, மறுபிறப்புக் கொள்கையில் நம்பிக்கை வைத்திருத்தார். கடவுள் நம்பிக்கை இல்லை.
- போதனைகளின் தொகுப்பு -- திரிபீடகங்கள்(மூன்று கூடைகள் - சுத்த, வினய, அபிதம்ம பீடகங்கள்).

- புத்த சமயத்தின் அடிப்படைக்கொள்கை -- நிர்வாண நிலையை எய்துவது அல்லாது அறியாமையை அகற்றுவது.
- புத்த மதத்தை ஆதரித்த மன்னர்கள் அசோகர், கனிஷ்கர், பிம்பிசாரர், அஜாதசத்ரு.
- சாக்கிய முனி, ஆசியாவின் ஒளி என புத்தர் அழைக்கப்பட்டார்.
- அசோகர் தன் மகன் மகேந்திரனையும், மகள் சங்கமித்திரையையும், புத்த மதத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பினார்.
- கனிஷ்கர் காலத்தில் பர்மா, ஜப்பான், திபெத், மத்தியஆசியா,சீனா ஆகிய நாடுகளில் புத்த மதம் பரவியது,
- கனிஷ்கர் காலத்தில் புத்தமதம் மஹாயானம், ஹீனயானம் என இரு பிரிவுகளாக பிரிந்தது.
- புத்த ஸ்தூபிகள் காணப்படும் இடம் -- சாஞ்சி, வல்லபி, நலந்தா.
- புத்த ஜாதக கதைகள் என்பது - புத்தரின் முற்பிறவி பற்றிக் கூறுவது.
- காந்தாரச்சிற்பம், அஜந்தா, எல்லோரா, ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் புத்த சமயத்தின் நன்கொடையாகும்.
- புத்த சமயத்தின் பிரார்த்தனைக்கூடங்கள் ***சைத்தியங்கள்*** என்றும், மடாலயங்கள் ***விகாரங்கள்*** என்றும் அழைக்கப்படும்.

## புத்த சமய மாநாடுகள்

| மாநாடு | ஆண்டு | மாநாடு கூட்டப்பட்ட இடம் | மன்னர் | தலைவர் |
|---|---|---|---|---|
| 1 –வது | கி.மு. 483 | இராஜகிருகமருகே உள்ள சப்தபாணக் குகை | அஜாதசத்ரு | மகா கசபா |
| 2–வது | கி.மு. 383 | வைசாலி | காகவர்மன் | சபகமி |
| 3–வது | கி.மு.251 | பாடலிபுத்திரம் | அசோகர் | மொகாலிபுத்ததிசா |
| 4–வது | கி.பி.100 | காஷ்மீர் குந்தல்கண்ட் | கனிஷ்கர் | அசுவகோஷர் |

- முதல் மாநாட்டில் புத்தரின் போதனைகளாகிய வினய பீடகம், சுத்த பீடகம் ஆகியவற்றை தொகுக்கும் பணியில் உபாலியும் , ஆனந்தரும் முக்கியப் பங்கு வகித்தனர்.
- 2–வது மாநாட்டில் கருத்துவேறுபாட்டின் விளைவாக பழமைவிரும்பிகள் ஸ்தாபரவாதிகள் (அ) தோர்கள் என்றும், மாற்றங்களை விரும்பியவர்கள் – மகாசாங்கியர்கள் என்றும் பிரிந்தனர்.
- 3–வது மாநாட்டில் அபிதம்ம பீடகம் தொகுக்கப்பட்டது.
- மூன்று பீடகங்களின் தொகுப்பு – மூன்று இரத்தினங்கள் (அ) மூன்று கூடைகள் எனப்படும்.
- மூன்று பீடகங்களுக்கான உரைகளின் பெயர் – விபாஷங்கள்
- புத்தமதம் வீழ்ச்சியுற காரணம் -- குப்தர் கால இந்து மறுமலர்ச்சி, அரசரின் ஆதரவின்மை.
- உருவ வழிபாடு அறிமுகமான புத்த சமயப் பிரிவு – மகாயானம்
- ‘இந்து சமயத்தின் புரட்சிக்கார பெண்கள்‘ என அழைக்கப்பட்ட மதங்கள் – சமணம், புத்தம்.

## உலகாயதம்

- இம்மதத்தை தோற்றுவித்தவர் - பிரகஸ்பதி
- இதன் வேறுபெயர்கள் - சாருவாகம், காட்சிவாதம், நாத்திகவாதம் என்பர்.
- ஐம்பூதங்களில் நிலம், நீர், காற்று, தீ ஆகிய நான்கு மட்டுமே உண்டு என்பர்.
- நல்ல பெண்ணை மணந்து இன்பம் நுகர்வதே முக்தி எனக் கூறும் மதத்தவர் - உலகாயத மதத்தவர்
- இம்மை வாழ்க்கை ஒன்றினையே குறிக்கோளாக கொண்டு வாழ்க்கை நடத்துவோர் - உலகாயத மதத்தவர்

## சாங்கியம்

- அறவொழுக்கத்தோடு ஆன்ம உணர்வையும் பொருளாகக் கொண்டு உணர்த்தும் சமயங்கள் - சாங்கியம், யோகம், வேதாந்தம்
- தோற்றுவித்தவர் -- கபிலர். தத்துவம் 24.
- 25-வது தத்துவம் -- புருடன்.
- புருடன் பெத்தநிலையிலும், முக்திநிலையிலும் ஒரே தன்மையாய் தாமரையிலை தண்ணீர் போல பற்றற்று இருப்பான்.
- மூலப்பகுதியின் பரிமாணம் புத்தியாகும். அதுவே காரணமுமாகும். மூலப்பகுதி, புருடனை பகுத்துரைப்பதால் அவிச்சை நீங்குவதே முக்தி.

## மீமாம்சம்

- தோற்றுவித்தவர் -- ஜைமினி. இவர் வேதவியாசரின் சீடராவார்.
- "உலகம் நிலைபெற்றது. தோன்றியழியாது" என்பர்.
- மீமாம்சம் இருவகைப்படும். 1)பட்டாச்சரியன் மதம் 2)பிரபாகரன் மதம்
- பட்டாசாரியன் மதம் -- தர்மம் பயன்கொடுக்கும். வேத வேள்விகள் தத்துவ ஞானம் தரும். சொர்க்க முக்தியே முக்தி. இதில் ஒரு ஆனந்தமுண்டு.
- பிரபாகரன் மதம் -- ஞானம் கெட்டபோது கல் போல் கிடப்பதே முக்தி.

# 8.தர்சனங்கள்

- அனுபவித்து அறிவதற்குரிய சாத்திரம் எனப் பொருள்படும்.
- இது வைசேடிகம், நியாயம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸை, உத்திரமீமாம்ஸை என ஆறுவகைப்படும்.

## வைசேடிகம்

- இயற்றியவர் -- கணாதர்.
- வைசேடிக பொருள்கள் -- பிராமாணம் முதல் நிக்கிரகம் வரை பதினாறாம்.
- இதன் அளவைகள் - காண்டல், கருதல், உரை, உவமானம் என நான்காகும்.

- வைசேடிகத்தின் பிரமேயம், ஆன்மா முதல் முக்தி வரை பன்னிரெண்டாகும்.
- இதன் நித்திய பொருள்கள் -- ஆறு. அவை நான்கு பூதங்களின் பராமாணுக்களும், ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம்.
- உலகிற்கு முதற்காரணம் - அணுக்களே. படைத்தல் என்பது பரமாத்மா முக்குணத்தோடு கூடி நின்று செய்வதாகும்.

## நியாயம்

- இயற்றியவர் -- அக்கபாதர்.
- இம்மதத்தின் வேறுபெயர் - நையாயிகம்.
- யுக்தியே இதன் அடிப்படை.
- பொருள்கள் - ஏழு. அவை திரவியம், குணம், கர்மம், சாமான்யம், விசேடம், ஸமவாயம், அபாவம்.
- வைசேடிகம், நியாயம் இரண்டையும் "தருக்கம்" எனக் கூறுவர்.

## யோகம்

- இயற்றியவர் - பதஞ்சலி முனிவர்.
- இதன் அங்கங்கள் - இயமம், நியமம், ஆசனம், பிரணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன.
- 26-ம் தத்துவமாக இறைவன் உளன். சாத்திரம் அருளியவன்.
- அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிராப்தி, பிராகாம்யம், ஈசத்வம், வசித்துவம் முதலிய அட்டமாசித்திகள். இதனை பெறுவதே முக்தி.

## உத்திரமீமாம்ஸை

- இது வேதத்தில் உள்ள ஞான காண்டமாகும்.

## ஏகான்மவாதம்

- இது நான்கு வகைப்படும். அவை 1)சத்தப் பிரம்மவாதம் 2)கிரீடாப் பிரம்ம வாதம் 3)பாற்கரிய வாதம் 4)மாயாவாதம்.

# 9.சித்தாந்தங்கள்

- வடஇந்தியாவில் பக்தி இயக்கம் தீவிரமாகக் காரணம் - இஸ்லாமியர் படையெடுப்பு.
- பக்தி என்பதன் பொருள் – வழிபாடு
- பஞ்சாப்பில் சீக்கிய சமயம் தோன்றக்காரணம் – பக்தி இயக்கம்
- தமிழகத்தில் வைதீக ஒழுக்க நெறி, சமயம், கலை இலக்கியம், பண்பாடு ஆகியவற்றில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலம் - கி.பி.7-ம் நூற்றாண்டின் பிற்பகுதி.
- 8-ம் நூற்றாண்டில் தோன்றிய ஆழ்வார்கள் - ஆண்டாள், நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார்.

## அத்வைதம்

- தோற்றுவித்தவர் -- சங்கரர்.
- கி.பி. 788ல் கேரளாவில் காலடியில்(வடதிருவாங்கூர்) பிறந்தவர்.
- புத்த, சமணக்கொள்கைகளை எதிர்த்தார்.
- இதற்கு வேதாந்த மதம் என்று பெயர்.
- இதனை பின்பற்றுவோர் -- வேதாந்திகள்.
- வேதவியாசர் இயற்றிய பிரம்மசூத்தித்திற்கும், பகவத்கீதைக்கும், தசோபநிஷத்துகளுக்கும் அத்வைத சித்தாந்தப்படி பாஷ்யம் செய்துள்ளார்.
- இம்மூன்றையும் " பிரஸ்தானதிரயம்" எனக் கூறுவர்.
- சைவ, வைணவ பேதமற்றவர். விஷ்ணு சஹஸ்ரநாமத்திற்கு பாஷ்யம் இயற்றியுள்ளார்.
- தமது 32-வது வயதில் முக்தி பெற்றார். கேட்டல், சிந்தித்தல் , தெளிதல், நிஷ்டை, கூடல் முதலியவற்றால் நிலைபெற்ற பேரின்பத்தை அடைந்து பிரம்ம மயமாவதே முக்தி.
- அ + த்வைதம். அ - இல்லை. த்வைதம் - இரண்டு. அத்வைதம் -- இரண்டற்ற ஒன்று.
- அகம்பிர்மாஸ்மி -- நான் பிரம்மமாயிருக்கின்றேன்.
- அத்வைதம் (அ) அத்விதீயம் - இதன் வேறுபெயர் - கேவலாத்து விதம்.
- "முக்கிய உபநிஷத்துகளின் முடிவு பிரம்மம் ஒன்றே, உள்பொருள் உலகம் பிரம்மத்தின் தோற்றமே" என்பது இவரின் கொள்கையாகும்.

## விசிஷ்டாத்வைதம்

- தோற்றுவித்தவர் -- **இராமானுஜர்.** ஸ்ரீபெரும்புதூரில் 1017-ல் பிறப்பு.
- 18-வயதில் ஸ்ரீரங்கம் சென்று பெரியநம்பியை சந்தித்து கொள்கை கற்று துறவு பூண்டார்.
- பிரமசூத்திரம், பகவத்கீதைக்கு பாஷ்யம் இயற்றியுள்ளார்.
- சங்கரர் கொள்கையினை மறுத்தார்.
- சித்து, அசித்து, பரமபிரமம் ஆகியவை ஒன்றாகவே உள்ளன.
- பக்தி இயக்கத்தின் முன்னோடி.**வைணவ முனி** என அழைக்கப்பட்டார்
- திருகோட்டியூர் என்ற இடத்தில் நமோ நாராயணா என்ற மந்திரத்தை போதித்தார்.
- கடவுளை அன்புக்கடல், அழகின் இருப்பிடம் எனக் கருதினார்.
- இவரின் போதனைகள் கீதை, உபநிடதத்தை அடிப்படையாக கொண்டவை.
- ஆலய நுழைவு இயக்கத்துக்கு முன்னோடி என அழைக்கப்பட்டார்.
- பேரின்பத்தை அடைய பக்தியே சிறந்த நெறி என்றார்
- நீலகண்டசிவாச்சாரியார் - கோகர்ணத்தில் பிறந்த தெலுங்கர்.
- பிரமசூத்திரத்திலுள்ள பாஷ்யத்திற்கு சைவ விசிஷ்டாத்வைத முறைப்படி பாஷ்யம் எழுதியவர் - நீலகண்டசிவாச்சாரியார். இதற்கு "நீலகண்டபாஷ்யம்" எனப்பெயர்.

## துவைதம்(பேதாவாதம்)

- தோற்றுவித்தவர் - மத்துவர் எனும் ஆனந்ததீர்த்தர்.
- இயற்பெயர் - வாசுதேவன்.
- இவர் துளுவநாட்டில் உடுப்பிக்கருகில் அநந்தேசுவர கிராமத்தில் பிறந்தார்.
- காலம் 1238 - 1318. 9 வயதில் அச்சுதபிரகாசரின் சீடராகி துறவியானார்.
- பிரமசூத்திரம், கீதை, தசோபநிஷத் போன்றவற்றிற்கு துவைத முறைப்படி பாஷ்யம் இயற்றியுள்ளார்.
- 37 பெரிய கிரந்தங்களை இயற்றியுள்ளார்.
- **துவி** என்றால் இரண்டு எனப்பொருள். ஜீவாத்மாவும், பரமாத்மாவும் வேறுவேறு.
- பிரம்மா முதலிய தேவர்கள் ஜீவர்களே. பிறப்பு, இறப்பு உண்டு. ஸ்தூலதேகம் உண்டு.
- கர்மம் தீர்ந்தால் மோட்சம் உண்டாகும்.
- திருமாலே உயர்ந்த தெய்வம், அவருக்கு செய்யும் பக்தியே முக்திக்கு சாதனம் என்றார்.
- மத்துவர் கொள்கைகளின் சுருக்கம் - உயிர்களின் அடிப்படைக் குணங்களாகிய சத்துவம், ராசசம், தாமசம் என்ற வகையிலே அவை பெறும் முக்திநிலைகள் 1) இன்பமே உள்ள முக்தி 2)இன்பம் மற்றும் துன்பம் கலந்த முக்தி 3)துன்பமே உள்ள முக்தி
- துறவு, பக்தி, தியானத்தின் மூலம் வீடு பேறு அடையலாம் என்பது இவர் கோட்பாடு

## இராமானந்தர்

- இராமனுஜரின் சீடர்.
- இந்தியில் இராமனுஜரின் போதனைகளை வட இந்தியபகுதிகளில் பரப்பியவர்.
- இந்தியில் கருத்துக்களை போதித்த முதல் சீர்திருத்தவாதி.
- கடவுள் பார்வையில் அனைவரும் சமம். உயர்வு, தாழ்வு என்ற பேதம் கிடையாது - இராமானந்தரின் கூற்று.
- சீடர்கள் - 12 பேர் (முக்கியமானோர் -- கபீர்தாசர், பத்மாவதி)

## வல்லபாச்சாரியார்

- பிறப்பு – கி.பி 1479ல் வாராணாசி
- இறுதியாக தங்கிய இடம் – பனாரஸ்(வாரணாசி)
- இவர் போதித்த தத்துவம் – சுத்த அத்வைதக் கோட்பாடு ( தூய ஒரு பொருள் கோட்பாடு)
- இவர் போதித்த கோட்பாடு – புஸ்டி மார்க்கம்
- இவரின் சீடர்களில் அஷ்டசாப் என்ற எட்டு கவிஞர்கள் இருந்தனர்.
- ‘கிருஷ்ணனே பிரம்மம், பக்தியுடன் முக்தியடைந்து பரமாத்மாவுடன் ஆத்மா கலந்து கொள்ளலாம் ‘ என்பது இவரின் கொள்கையாகும்.

## நாமதேவர்

- பிறப்பு – மஹாராஷ்டிராவிலுள்ள பண்டரிபுரம்
- இவரின் கொள்கை – உண்மை பக்தி, கடவுள் வழிபாடு
- சலவைத் தொழிலாளியின் மகன்.
- விஷ்ணுவை ”வித்தோபா” என அழைத்தவர்.
- உருவ வழிபாடு புரோகித சடங்குகளை எதிர்த்தார்
- உன்னையே உற்றுப் பார்த்து ஹரியின் பெயரை நாடு என்றார்
- இவரின் பாடல்கள் சீக்கியரின் குருகிரந்தசாஹிப் என்ற புனித நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

## சைதன்யர்

- பிறப்பு – வங்காளத்தில் உள்ள நாடியா என்ற இடம் (கி.பி 1485)
- வங்காளத்தைச் சேர்ந்த இவர் தீவிர கிருஷ்ண பக்தர்.
- 24 - ம் வயதில் துறவு பூண்டார்.
- இவரின் சீடர்கள் இவரை விஷ்ணுவின் அவதாரமாக கருதினர். மகாபிரபு என அழைத்தனர்.
- கடவுளின் புகழை பொது இடங்களில் பாடும் சங்கீர்த்தனம் என்ற முறையை கொண்டு வந்தார்.

## துளசிதாசர்

- ”கோசாமி” என்று அழைக்கப்பட்ட இவர் இராமபக்தர்.
- இராமாயணத்தை இந்தியில் மொழிபெயர்த்தார். இந்நூலின் பெயர் -இராமசரிதமனஸ்.
- ஹிந்தி மொழியில் ஜானகிமங்கள், பார்வதி மங்கள் என்ற நூல்களை எழுதினார்.
- இவர் எழுதிய மற்றொரு நூல் - அனுமன் சாலீஸா (40 பாடல்கள்)

## மீராபாய்

- இராஜபுத்திர இளவரசி
- தீவிர கிருஷ்ணபக்தரான இவர் இராஜஸ்தானி மொழியில் பக்தி பாடல்கள் பாடினார்.
- வாழ்நாளின் பெரும்பகுதியை கிருஷ்ணன் பிறந்த இடமான மதுராவிலும், வளர்ந்த இடமான பிருந்தாவனத்திலும் கழித்தார்.
- மேவார் தலைநகர் சித்தூரில் இவருக்கு கோயில் கட்டப்பட்டுள்ளது.
- பிறப்பு – இறப்பு சுழற்சியிலிருந்து விடுபட்டு பேரின்ப நிலையை அடைய கிருஷ்ணபக்தி அவசியம் என்பது இவர் கருத்து
- எளிய பக்தியும், நம்பிக்கையுமே வீடு பேறு அடைய வழி என்றார்

## குரு இராமதாசர்

- சத்ரபதி சிவாஜியின் குரு.
- கடவுள் முன் அனைவரும் சமம் என்பது இவர் கருத்து.
- சமயக் கொள்கை உபதேசித்ததுடன், சிவாஜி மூலம் ஒரு தேசம் உருவாக காரணமாகயிருந்தவர்.

## துர்க்காராம்

- மகாராஷ்டிர துறவி.
- கிருஷ்ணனை பாண்டுரங்கன் என அழைத்தார்.
- இவரின் பக்திபாடல்கள் -- **அபங்கங்கள்** எனப்படும்.

## ஞானேஸ்வரர்

- மகராஷ்டிராவில் பிறந்த இவர் விஷ்ணுவை கிருஷ்ணன் வடிவிலும், லித்தோபா வடிவிலும் வணங்கியவர்.
- பகவத் கீதையை மராட்டிய மொழியில் மொழி பெயர்த்தார். இதன் பெயர் ஞானேஸ்வரி.

## நிம்பர்கர்

- கோதவரி நதிக்கரையில் பிறந்து மதுராவிற்கருகே பிரஜா என்ற இடத்தில் வாழ்ந்தார்
- ராதா – கிருஷ்ண வழிபாடு செய்தார். இவரின் கொள்கை **– பேதாபேதம்**
- தத்துவம் - **துவைதாத்வைதம்:** இராமனுஜரின் சமகாலத்தவர்.
- சத்-வைணவம் என அழைக்கப்படுவது - நிம்பர்கரின் வைணவம்.

## ஏகநாதர்

- பிறப்பு – மகாராஷ்டிராவிலுள்ள பைத்தான் என்ற ஊர்
- கண்ணனின் தீவிர பக்தர் , பெரிய பாகவத புருஷர்

## சூர்தாசர்

- இவர் எழுதிய சூர்சாகர் என்ற நூல் கண்ணனை குழந்தையாக கருதி சித்தரிக்கிறது
- ‘‘வாழ்வு ஒரு விளையாட்டு, வீர தீரச் செயல், ஆனால் போராட்டம் அன்று’’ எனக்கூறினார்

## பசவர்

- கன்னடத்தில் வசித்த ”லிங்காயத்” என்ற வீர சைவ வகுப்பை சேர்ந்தவர்.
- சிவனே உயர்ந்த கடவுள் என்றார்.
- இவரை பின்பற்றுவோர்கள் லிங்காயத்துக்கள் எனப்படுகின்றனர்

# சைவ சமயம்

## 10.சைவ அகப்புறச் சமயங்கள்

- சிவபெருமானை ஆன்மாவானது அடைய பரிசுத்த அறிவு, அருள் ஆகியவற்றைக் கொண்டு பேரின்பத்தை தரும் மதம் - சைவ மதமாகும்.
- உட்பிரிவுகள் பல. முக்கியமானது - சித்தாந்த சைவம்.
- முப்பொருள் உண்மைகள் - பதி, பசு, பாசம். பதி - கடவுள் (அ) சிவம். இவருக்கும் ருத்ரன், பிரம்மா, விஷ்ணுவுக்கும் வேறுபாடு உண்டு.
- மூவருக்கும் முழுமுதல் கடவுள் சிவனே. கடவுளை சகுணர் (அ) நிர்குணர் எனக் கூறுவர்.
- அகளம் -- நிர்க்குணம். குறியும்,குணமும், தொழிலும், உருவமும் இல்லாமல் எல்லாவற்றிற்கும் புறம்பாக நிற்பதை அகளர் எனக் கூறுவர்.
- அகளமாய் நின்ற அறிவரும் அப்பொருளே சகுணமாகும்போது எட்டு குணங்களுடையதாய் ஐந்தொழில் இயற்றுகின்றது.
- முதல்வனை "எண்குணத்தான்" எனக்கூறும் நூல் - திருக்குறள்.
- தூய அறுகுணன்(சுத்த ஷாட்குண்ணியன்) என அழைக்கப்படுபவன் - முதல்வன்.
- "நிர்குணன்" என அழைக்கப்படுபவன் - முதல்வன்
- எண் வகை குணங்கள் :

  1)தன்வயத்தானாதல் ----------- சுவதந்திரதை

  2)தூய உடம்பினனாதல்--------- விசுத்ததேகம்

  3)இயற்கை உணர்வினனாதல் - அநாதிபோதம்

  4)முற்றும் உணர்தல் ------------- சர்வஞ்ஞதை


  5)இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்குதல் - அநாதிமுத்தத்துவம்

  6)பேரருள் உடைமை -------------அலுப்த சக்தி

  7)முடிவில் ஆற்றலுடைமை

  8)வரம்பிலின்பமுடைமை.
- அநாதி முத்தத்துவத்தின் வேறுபொருள் - நிராமயம் (பிணியின்மை), நித்தியதிருப்தி.
- "ஏவர்தம் பாலும் இன்றி எல்லை தீர் அமலற்குள்ள மூவிருகுணனும் சேய்க்கு முகங்களாய் உற்ற தென்ன" - கந்தபுராணம்
- இறைவன் செய்யும் தொழில்கள் ஐந்து வகைப்படும். அவை - சிருஷ்டி - படைத்தல்: சம்ஹாரம் - அழித்தல்: ஸ்திதி - காத்தல் : த்ரோபவம் - மறைத்தல்: அனுக்கிரகம் - அருளல்.
- "பாசமாம் பற்றறுத்து பாரிக்கும் ஆரியனே" - திருவாசகம்(மாணிக்கவாசகர்)

- "சேர்வார் தாமே தானாகச் செய்யும் அவன்" - ஆளுடையபிள்ளை என அழைக்கப்படும் திருஞானசம்பந்தர் எழுதிய திருப்பாட்டு.
- "படைத்தும் காத்தும் கரந்தும் விளையாடி" - திருவாசகம்.
- "மூன்று மூர்த்தியுள் நின்றிய லுந்தொழில் - மூன்றும் ஆயின மூவிலை சூழத்தான்" - திருநாவுக்கரசர்.
- "இரண்டும் ஆமவர்க்கு உள்ளன செய்தொழில்" - திருநாவுக்கரசர்.
- "பந்தம் வீடு தரு பரமன்" - பெரியபுராணம்.
- முதல்வனை "விச்சுவாதிகன், விச்சுவகாரணன், விச்சுவரூபி, விச்சுவாந்தரியாமி" என அழைப்பது -- வேதங்கள்.
- விச்சுவம் என்பதற்கு உலகம் என்று பொருள்
- இத்தொழில்புரிய இச்சை, கிரியை, ஞானம் ஆகிய சக்திகள் உதவி புரிகின்றன.
- "ஸத்காரியம்" என்பது - "உள்ளது போகாது : இல்லாது வாராது" .
- சைவ சமய அளவைகள் 6. அவை காண்டல், கருதல், உரை, ஒப்பு, பொருள், சுபாவம்.
- சைவ சமயம் கூறும் இறைவனின் இரு பெருநிலை - சொரூபநிலை, தடத்தநிலை.
- சைவ சமயம் இறைவனை சச்சிதானந்தம் என்கிறது.
- **சைவசமய கிளைகள்:**




- **அகப்புறச்சமயங்கள்** மொத்தம் 6. அவைகளாவன:
- 1.பாசுபதம் - ஆன்மா இல்லை. இன்பதுன்பம் வெறுப்பு, தோன்றுகையில் ஆன்மா இறையருளைப் பெறுகிறது.
- 2.மாவிரதம் - ஆன்மா பந்தமுற்று இன்பதுன்பத்தை அனுபவிக்கும். எலும்புமாலை அணிந்து சரியை தொண்டு செய்தால் முக்தி கிட்டும்.
- 3. கபாலம் - தலையோட்டில் ஐயம் ஏற்று உண்டு பச்சை கொடி ஏந்தி சிவனை வழிபட்டால் உயிர் இறைவனிடம் கலக்கும்.
- 4. வாமம் - சக்தியை வழிபட்டு அதில் லயிப்பதே முக்தியை இயம்பும்.
- 5. வயிரவம் - வைரவக் கடவுளை சாருவதே முக்தி.
- 6. ஐக்கிய வாதம் - ஆணவ மலமில்லை. பாவ, புண்ணியம் நீக்கின் மாய, கன்மங்கள் அழியும்.

- **சைவ அகச்சமயங்கள்** 6. அவையாவன:
- 1.பாடாணவாதம் - முக்தியிலும் ஆன்மா நீங்காது. கல்போல் கிடப்பதே முக்தி. ஆன்மா இறையிடம் கூடுவதில்லை.
- 2. பேதவாதம் - ஆன்மா மூன்று மலம் நீங்கபெறின் பெறுவானும், பேறுமாய் நிற்கும் அதுவே முக்தி.
- 3.சிவசமயவாதம் - உயிர் நீங்கப் பெறின் இறைவனின் எண்குணம் பெற்று, முதல்வனோடு அத்துவிதமாகும்.
- 4.சிவசங்கிரானந்தவாதம் - உப்பிலிட்டவை உப்பாவது போல ஆன்மா சிவமேயாகி, சிவகரணம் பெறும்.
- 5.ஈஸ்வர அவிகார வாதம் - குடத்தில் ஏற்றிய விளக்கு போல ஆன்மா உடம்பில் பிரகாசிக்கும். அது மலபரிபாகம், சந்நிதிபாதம், தேர்ந்த போது இறைவனடி அடையும்.
- 6. சிவாத்துவித சைவம் - பசு, பதி, பாசம் சித்தாந்த சைவத்தோடு ஒப்பக்கூறி மரத்தின் கொம்புகளும் மரமாவது போல அனைத்து ஸத்தே எனவும், ஆன்மாவிடமிருந்து அறியும் ஸத்து சிவமே எனவும் கூறும்.
- சைவத்தை அறுவகையாக பகுத்து கூறுவதும் உண்டு. அவையாவன:

| பெயர் | வழிபடப்படும் கடவுள் |
|---|---|
| காணாபத்தியம் | கணபதி |
| கௌமாரம் | முருகன் |
| ஸௌரம் | சூரியன் |
| வைணவம் | விஷ்ணு |
| சாக்தேயம் | சக்தி |
| சைவம் | சிவன் |

- "ஒன்றது பேரூர் வழி ஆறு அதற்குள்" -- திருமூலர்.
- "அறுவகை சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்" - சிவஞானசித்தியார்.

# 11.பதி, பசு, பாசம்

- முடிவுநிலை உண்மைப்பொருட்கள் இறை,உயிர்,தளை என மூன்று வகைப்படும். அவை முறையே பதி, பசு, பாசம் எனவும் வேறுபெயரிட்டு அழைக்கப்படும்.
- தளை (அ) பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என மூன்று வகைப்படும்.
- உயிர்களின் நிலைகள் - 2. அவை பிறப்பு நிலை, வீட்டு நிலை.
- "பந்தமும் வீடும் ஆய பதபதார்த்தங்கள் அல்லான்" - சிவஞானசித்தியார்.
- "அனாதிமுத்த சித்துருவாகிய எந்தை, கட்டு வீடு எனும் பதங்களையுடைய பசு பாச பதார்த்தங்களது இயல்புடையன் அல்லன்" - சிவஞானசித்தியார்.
- "பதம் அவ்வச் செவ்வி" - சிவஞானசித்தியார்

- முதல்வனது சக்தி திருவருள் எனவும், திருவடி எனவும், சிவஞானம் எனவும், அம்மை எனவும் அழைக்கப்படுகிறது.
- முதல்வனானவன் - தேவசவிதா, சிவசூரியன் எனவும் அழைக்கப்படுகின்றான்.
- இறைவனின் திருவுருவங்கள் மூன்று வகைப்படும். அவை 1)போகவடிவம் 2)கோரவடிவம் 3)யோக வடிவம்.

**பசு**

- உயிர் (அ) ஆன்மா எனப்படும் பல என்றும் அவை உள்ளவை.
- கடவுள் உயிரை உண்டாக்குவதில்லை. உடம்பையே படைக்கின்றார். அதனுள் பொறி, புலன், கரணம் அமைக்கின்றார். அவை கருவி (அ) தத்துவம் எனப்படும்.
- உள்நிலை கருவிகள் 36. புறநிலைக் கருவிகள் 60. மொத்தம் 96.
- ஆன்மாவின் அவஸ்தைகள் - ஐந்து. அவை 1)ஜாக்ரம் 2)சொப்னம் 3)சுஷுப்தி 4)துரியம் 5)துரியாதீதம்.
- ஆன்மா 3 வகைப்படும். 1)விஞ்ஞானகலர் - ஆணவமலம் பற்றி நிற்கும் 2)பிரளயாகலர் -- ஆணவ, கன்ம மலம் பற்றி நிற்கும் சகலர் - ஆணவ, கன்ம, மாயை மலம் பற்றி நிற்கும்.
- ஆன்மா ஸதஸத்து (சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது)

## பாசம் (அ) தளை (அ) தடை

- ஆன்மாவை பற்றி நிற்பது - பாசமாகும். பற்றறுத்தால் அது பதியுடன் கலக்கும்.
- தளை(அ) பாசம் ஐந்து வகைப்படும். அவை 1)ஆணவம் 2)கன்மம் 3)திரோதயி 4)சுத்தமாயை 5)அசுத்தமாயை.
- உயிர்களின் தூய்மையை மாற்றி துன்புறுத்தும் மாசு எனப்படுவது - ஆணவம், கன்மம், மாயை எனும் மூன்றும்.
- பசுவை கட்டி நின்று இறைவனை அடையவிடாமல் தடைசெய்வது - பாசம்

## ஆணவம்

- ஆணவ மலம் - உயிர்களின் அறிவாற்றலை இல்லை எனும்படி மறைத்து நிற்பது. இது உயிர்தோறும் செம்பில் களிம்பு போலவும், நெல்லுக்கு உமியாகவும் காணப்படும்.
- ஆணவ மலத்தின் வேறுபெயர்கள் - மூலமலம், சகஜமலம், இருள், அவித்தை, அறியாமை.
- "ஆணவத்தை நீக்கிக் கொள்ள உலகத்தார் முந்துவது இல்லை" - உமாபதிசிவனார்.
- அறியாமைக்கு காரணம் - ஆணவம் ஆகும்.
- ஆணவத்தால் முழுவதும் அறிவிழந்து நின்ற உயிர்களுக்கு சிற்றறிவும் சிறுசெயலும் விளங்குதற்பொருட்டு இறைவன் மாயையின் சம்பந்தத்தை உண்டுபண்ணுவது - "உலகுசிருஷ்டி" எனப்படும்.

- கனவு, உறக்கங்களில் அறிவாற்றலை மறைப்பதும், நனவு நிலையில் தன்னை நோக்காது புறப்பொருளை நோக்கி ஓடுமாறு நம் அறிவை திசைதிருப்புவது ஆணவ மலத்தின் செயலாகும்.
- ஆவாரகம் - மறைப்பு: அதோநியாமிகாசக்தி - கீழ்வீழ்க்கும் சக்தி (அ) இருள்.
- நியாமிகாசக்தி - மருள், மாசு, செருக்கு எனவும் பொருள்படும்.


## கன்மம்

- கன்மம் -- உயிர்கள் உடம்பிலிருக்கும்போது மன,மொழி, மெய்களால் செய்யும் நல்லனவும், தீயவும் ஆகிய செயல்களே கன்மமாகும். இதை "**வினை**" எனக்கூறுவர்.
- இது 1)சஞ்சிதம் 2)பிராரப்தம் 3)ஆகாமியம் என மூவகைப்படும்.
- ஆகாமியம் - எதிர்வினை: பழக்க ரூபமாய் புத்தியில் நுண்ணிய நிலையில் பற்றி நிற்கும்போது "கிடைவினை" (சஞ்சிதம்) எனப்படும்.
- கிடைவினையில் பக்குவப்பட்ட பாகம் இன்ப, துன்ப நுகர்ச்சியை பயப்பதாய் வெளிப்படும் நிலையில் "நுகர்வினை" ( பிராரப்தம்) எனப்படும்.
- கிடைவினை பயன்படும்போது அது மூன்று வகைப்படும். அவை 1)ஆதித்தைவிகம் - தெய்வத்தால் வருவது 2)ஆத்தியான்மிகம் - அறிவியல் பொருளோடு கூடிய உயிர்கள் வாயிலாக வருவது 3)ஆதிபௌதிகம் - அறிவியல் பொருள் வாயிலாக வருவது.
- வாழ்க்கை சூழ்நிலைக்கு காரணமான கிடைவினை - சனகம் எனப்படும்
- ஆயுளுக்கு காரணமான கிடைவினை -- தாரகம் எனப்படும்.
- பிறவற்றிற்கு காரணமான கிடைவினை - போக்கியம் எனப்படும்

## மாயை

- மாயை -- சுத்த மாயை, அசுத்தமாயை என இருவகைப்படும்.
- இன்பம் ஒன்றே பயப்பது - சுத்தமாயை
- இன்ப, துன்ப, மயக்கம் என்ற மூன்றையும் தருவது - அசுத்தமாயை
- தனு, கரண, புவன, போகம் என நான்கும் ஒன்றாக இணைந்து நிற்கும்போது அதன் பொருள் - மாயேயம்
- காணப்படும் பொருள்கள் எல்லாவற்றுக்கும் முடிந்த முதற்காரணமாக உள்ள பொருள் - மாயை ஆகும்.
- மாயையிலேயே தோன்றி மாயையிலேயே மறைவன - தனு, கரண, புவன, போகம்
- பிரளயா மற்றும் விஞ்ஞானகலருக்கு தனு, புவன, கரண, போகம் முதலியவற்றை கொடுப்பது - சுத்த மாயை.
- அசுத்தமாயையும் - மேலே சொன்னவற்றை கொடுக்கும். ஆனால் திரோதாயி ஆன்மாவை இதில் அழுந்தி கிடக்கச் செய்யும்.
- அசுத்தமாயையின் முதற்காரியம் - மாயை.

- அசுத்தமாயை - மோகினி, அதோமாயை என வேறுபெயராலும் அழைக்கப்படும்.
- "விடிவாம் அளவும் விளக்கணைய மாயை, வடிவாதி கன்மத்து வந்து" - திருவருட்பயன்.
- சுத்தமாயை, சொல் மற்றும் பொருள் என இருவகைப்படும்.
- சொல் - உயிருக்கு, உலகப்பொருள்களை இஃது இன்னது என வேறுபடுத்தி உணரும் சவிகற்ப உணர்வை பயக்கும்.
- மொழி - எழுத்து, சொல், மந்திரம் என 3 வகைப்படும்.




| சுத்தமாயை ஐந்து வகைப்படும் அவை: | |
|---|---|
| நாதம் | சிவம் |
| விந்து | சக்தி |
| சாதாக்கியம் | சதாசிவன் |
| ஈஸ்வரம் | மகேஸ்வரன் |
| சுத்தவித்தை | உருத்திரன் |

- படைப்புக் காலம் முதல் ஊழிக்காலம் வரை தன் தன்மை மாறாது நிலைத்துள்ள பொருட்கள் - தத்துவங்கள் எனப்படும்
- உயிரை உலகபோகத்தில் அழுந்தும்படி செய்வது - தத்துவங்கள்
- அசுத்தமாயை வித்தியாதத்துவம், ஆன்மதத்துவம் என இருவகைப்படும்.
- **வித்தியா தத்துவம்** -- மாயை, காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன் என வழங்கும்.
- **ஆன்மதத்துவங்கள்** -- பிராக்ருதி, புத்தி, அகங்காரம், மனம் எனும் அந்தகரணம் என நான்கு. மெய், வாய், கண்,மூக்கு, செவி எனும் அறிவுப்பொறி (ஞானேந்திரியங்கள்) ஐந்து. வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம் என்னும் தொழில்பொறி(கன்மேந்திரியம்)

ஐந்து. சுவை, ஒளி,ஊறு, ஓசை,நாற்றம் என்னும் தன்மாத்திரை(சூக்குமபூதம்) ஐந்து. வான், வளி, அனல், புனல், மண் எனும் பூதங்கள் ஐந்து. ஆக மொத்தம் 24.

- புறக்கருவிகளின் எண்ணிக்கை - 20
- ஐம்பூதங்களின் நுண்ணிய நிலை - தன்மாத்திரை
- நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை ஆகிய ஐந்தும் சிவதத்துவங்களாகும்.
- எனவே சிவதத்துவம் - 5, வித்தியாதத்துவம் - 7, ஆன்மதத்துவம் - 24. ஆக மொத்தம் சைவத்தில் கூறப்படும் தத்துவங்கள் 36.
- 24 தத்துவங்களையும் அடக்கும் மூவகை குணங்கள் - சத்துவம், ராசதம், தாமசம்
- சத்துவம், ராசதம், தாமசம் எனப்படும் மூவகை குணங்கள் பிரியாமல் அடங்கி நின்ற நிலையே -- மூலப்பகுதி எனப்படும்.
- ஆனந்த மயகோசம் எனப்படுவது - "காரியமாயை" என தைத்தீரிய உபநிஷத் கூறுகிறது
- கலை, வித்தை, அராகம் இம்மூன்றினால் உயிர் தன் செயல், இச்சை, அறிவு என்னும் மூவகை ஆற்றலும் விளங்கி உலகப்பொருட்களால் வரும் இன்பதுன்ப மயக்க நுகர்ச்சியை பெறும் தகுதியுடையதாய் நிற்கும் நிலை - புருடன்.
- உயிர்க்கு புருடனாகும் தன்மையை எய்துவிப்பவை - வித்தியாதத்துவங்கள்.
- புருடனை போகியாய் நின்று மயங்கச் செய்வது - ஆன்ம தத்துவங்கள்.
- காலம், நியதி, கலை, வித்தை, அராகம் எனும் 5 தத்துவங்களின் தொகுதியே - விஞ்ஞானமயகோசம் என தைத்தீரிய உபநிஷத் குறிக்கிறது.
- சிவதத்துவம் ஐந்தும் செலுத்தும் கருவிகள் பற்றி கூறுவது - பிரேரக காண்டம் எனப்படும்.

## 12.உடம்பின் வகைகள்

- தத்துவங்களுள் மாயையானது உயிரின் காரண சரீரம் எனப்படும்.
- காலம், நியதி, கலை, வித்தை, அராகம் எனும் ஐந்தின் தொகுதி - கஞ்சுக சரீரம் (கஞ்சுகம் - சட்டை) எனப்படும்.
- மூலப்பிரக்ருதியின் முக்குணங்களும் விளங்கி நிற்கும் நிலை - குணசரீரம் ஆகும்.
- காரண, கஞ்சுக, குண ஆகிய மூன்று சரீரமும் சேர்ந்து உயிருக்கு மிக நெருக்கமாய் அமைந்த நிலை - பரசரீரம்
- பரசரீரத்திற்கு மேல் சூக்கும பூதம் எனப்படும் தன்மாத்திரை ஐந்து, மனம், புத்தி, அகங்காரம் ஆகியவையும் சேர்ந்து அமைவது - அகக்கரணசரீரம்
- 8 தத்துவங்களால் அகக்கரணசரீரம் அமைந்த நிலை - புரியட்டகம்.

- கனவு நிலையில் நமது உணர்வும், போக நுகர்ச்சியும் உண்டாக காரணமான சரீரத்தின் பெயர் - அகக்கரணசரீரம்
- ஆயுள் முடிவில் உடலை உயிர்நீத்தபின் பிரிதோர் உடலை எடுக்க காரணமான சரீரம் - அகக்கரணசரீரம்.
- நனவு நிலையில் போக நுகர்ச்சிக்கு காரணமாக அமையும் பருவுடம்பின் பெயர் - ஸ்தூலசரீரம்

  காரணசரீரம் - ஆனந்தமயகோசம்

  கஞ்சுக சரீரம் - விஞ்ஞானமயகோசம்

  குணசரீரம் - மனோமயகோசம்

  அகக்கரணசரீரம்(சூட்சும உடல்) - பிராணமயகோசம்

  ஸ்தூல சரீரம் (உயிர்) - அன்னமயகோசம்

- பாசங்கள் நீங்கி நிற்றல் - முதல்வன் இலக்கணம்.
- பாசங்களில் கட்டுண்டு நிற்றல் - உயிர்களின் இலக்கணம்.
- "மீளா அடிமை உனக்கே" - என்றுரைத்தவர் நம்பியாரூரர்(சுந்தரர்)
- "என்று நீ அன்று நான் உன்னடிமையல்லவோ!" - தாயுமானவர்.

## ஆன்மாக்கள்

- உயிர்களின் தோற்றம் நான்கு. பிறப்பு ஏழு வகை. உருவவேற்றுமை (பேதம்) 84 லட்சம்
- நான்கு வகை தோற்றம்

| | |
|---|---|
| அண்டஜம் | முட்டையில் தோன்றுவன. எ.கா. பறவை, ஊர்வன, நீர்வாழ்வன |
| ஸ்வேதஜம் | வேர்வையில் தோன்றுவன. எ.கா. கிருமி, பேன் |
| உத்பிஜ்ஜம் | வித்து, வேர், கொடி, கிழங்கிலிருந்து தோன்றுவது (தாவரங்கள்) |
| சராயுஜம் | கருப்பையில் தோன்றுவன எ.கா. மனிதரும், விலங்குகளும் |

## எழுவகை பிறப்புக்களாவன:

| பிறப்பு | உருவவேற்றுமை | பிறப்பு | உருவவேற்றுமை |
|---|---|---|---|
| தேவர் | பதினோரு இலட்சம் | பறவை | பத்து இலட்சம் |
| மனிதர் | ஒன்பது இலட்சம் | ஊர்வன | பதினைந்து லட்சம் |
| விலங்குகள் | பத்து இலட்சம் | நீர்வாழ்வன | பத்து லட்சம் |
| தாவரம் | பத்தொன்பது லட்சம் | | |

- தாவரம் என்பது - அசரம் எனவும், நிலையியல் பொருள் எனவும் அழைக்கப்படும்.
- மேற்காணும் ஏனைய பிறப்புப் பொருட்கள்அனைத்தும் சங்கமம் எனவும், சரம் எனவும் அழைக்கப்படும்.
- "உறங்குவது போலும் சாக்காடு, உறங்கி விழிப்பது போல பிறப்பு" - திருக்குறள்.
- "வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" - திருக்குறள்

# 13.கடவுளும் உயிரும்

- கடவுளால் ஆன்மாக்களுக்கு தனு, கரண, புவன, போகம் அளிக்கப்படுகிறது.
- உலகை தனு, கரண, புவன, போகம் என நான்கு வகைப்பட விளக்குவது - சைவநூல்
- தனு - 84 லட்சம் பேதத்திற்கும் கொடுக்கப்படும் உடம்புகள்.
- கரணம் - 36 தத்துவங்களை கொண்ட மனம் என்னும் அகக்கருவிகளாகவும், புறக்கருவிகளாக 60 தத்துவங்களையும் கொண்டது.
- உடம்புக்கு ஆதாரமாக உள்ள நிலம் - புவனம்
- போகம் - உயிர்கள், ஐந்து இந்திரியங்கள் மூலம் நுகர விரும்பும் இன்பமாகும்.
- அசுவத்தம் என்ற மரத்தின் இரு பறவைகள் - ஜீவாத்மா மற்றும் பரமாத்மா -- முண்டக உபநிஷத்.
- "கேவல சகல சுத்தமென்று மூன்றவத்தை ஆன்மா" --- சிவஞானசித்தியார்.
- உயிரின் மூன்று அடிப்படை உணர்வு நிலைகள் - 1)கேவலம் 2)சகலம் 3)சுத்தம்
- கேவலம்(இரவு) - அறியாமையில் அழுந்தும் நிலை
- சகலம் (பகல்) - உலகப்பொருட்களின் தன்மையில் அழுந்தும் நிலை.
- சுத்தம்(இரவு பகலற்ற இடம்) - முதல்வனின் திருவருளில் அழுந்தும் நிலை.
- கேவலாவத்தை : இறைவன் உலகைப் படைக்கும் முன் எவ்வித உடம்பும் இல்லாமல் ஆன்மா அஞ்ஞானத்தில் சூழப்பட்டு கிடக்கும்.
- சகலாவத்தை : தனு, கரண, போகத்தில் திளைக்கும் ஆன்மா.
- சுத்தாவத்தை : ஆன்மா விருப்பு, வெறுப்பற்ற நிலையிலிருக்கும். கன்மம், மாயை, அகன்று ஞானம் அருளும்.
- சித்தியாரின் கூற்றுப்படி, ஆன்மாவிற்கு வேறொரு வகையில் 5 அவத்தை உண்டு.

| ஐந்து அவஸ்தைகள் | இடம் | கருவி |
|---|---|---|
| ஜாக்ரம் | புருவநடு | 35 |
| சொப்பனம் | கழுத்து | 25 |
| சுஷுப்தி | இதயம் | 3 |
| துரியம் | நாபி | 2 |
| துரியாதீதம் | மூலாதாரம் | 1 |

- உயிரானது அன்னமயகோசத்தைப் பற்றி தொழில்பட்டு வினைப்பயனை நுகரும் நிலை - நனவு(ஜாக்ரம்)
- உயிரானது பிராணமயகோசத்தைப் பற்றி நினைவு உணர்வுகளோடு கூடி வினைப்பயன்களை நுகரும் நிலை - கனவு (சொப்பனம்)

- உயிரானது மனோமயகோசத்தை பற்றி நின்று ஒடுக்கமுறும் நிலை - உறக்கம் (சுழுத்தி (அ) சுஷுப்தி)
- உயிரானது விஞ்ஞானமயகோசத்தைப் பற்றி நிற்கும் நிலை - பேருறக்கம் (துரியம்)
- உயிரானது ஆனந்தமயகோசத்தைப் பற்றி நிற்கும் நிலை - உயிர்ப்படக்கம்(துரியாதீதம்)
- சுஷுப்தியில் -- பிராணவாயு, சித்தம், புருடத்துவம் ஆகியவை காணப்படுகிறது.
- துரியத்தில் -- பிராணவாயு, புருடத்துவம் ஆகியவை காணப்படுகிறது.
- துரியாதீதத்தில் -- புருடத்துவம் மட்டும் காணப்படுகிறது.
- நம் உடலினுள் உள்ள நுண்ணுடல் சூக்கும சரீரம் (அ) யாதனா சரீரம் (அ) ஆவி (அ) உள்ளுடம்பு என அழைக்கப்படுகிறது.
- ஸ்தூலத்திலிருந்து சூக்குமம் பிரிந்து செல்வதை படம்பிடித்தவர் - பாடரக்
- ஸ்தூலசரீரத்தினுள் சூக்குமசரீரமும், சூக்குமசரீரத்தினுள் குணசரீரமும், குணசரீரத்தினுள் கஞ்சுக சரீரமும், கஞ்சுகசரீரத்தினுள் காரண சரீரமும் உள்ளன.
- கனவு காணும் சரீரம் -- சூக்கும சரீரம்
- ஸ்தூல உடலைவிட்டு உயிர் பிரியும் நிலை - மரணம்

# 14.முக்தி மார்க்கங்கள்

- ஆணவம், கன்மம், மாயை எனப்படும் மூன்று தளைகளை நீக்கி முதல்வனை தலைப்படுவது - வீடுபேறு (அ) மோட்சம் (அ) சிவத்துவ அபிவியக்தி
- பரமபதம் -- எல்லாவற்றிலும் உயர்ந்த கதியாய் காண்பானும், காட்டுவதும் தோன்றாது அனுபவித்து அறிவது.
- "பாசத்தை பசுக்கள் விட்டு பதியினை அடைவதே முக்தி" - சிவஞானசித்தியார்.
- "சேர்வார் தாமே தானாகச் செய்யும் அவன்" - திருஞானசம்பந்தர்
- சிவனோடு இரண்டற கலந்து பிரியாது அவனை பற்றும் நிலை - சாயுஜ்ஜியம்
- சோபானக்கிரமம் என்பதன் பொருள் - படிவழிமுறை
- வீடுபேறு (அ) முக்தி அடைவதற்குரிய மார்க்கங்கள் எண்ணிக்கை - 4

| முக்தி மார்க்கம் | வேறுபெயர் | ஆன்மாக்கள் அடையும் பதவி | முக்தி அடைந்தவர்கள் | அடையும் நிலை | உவமை |
|---|---|---|---|---|---|
| சரியை | தாஸ மார்க்கம் | சாலோகம் | திருநாவுக்கரசர் | பத முத்தி | அரும்பு |
| கிரியை | சற்புத்திரமார்க்கம் (மகன்மைநெறி) | சாமீபம் | ஞானசம்பந்தர் | பத முத்தி | மலர் |
| யோகம் | சக மார்க்கம் | சாரூபம் | சுந்தரர் | பத முத்தி | காய் |
| ஞானம் | சன்மார்க்கம் | சாயுஜ்ஜியம் | மாணிக்கவாசகர் | பர முத்தி | கனி |

- நால்வகை மார்க்கங்களையும் , அரும்பு,மலர்,காய், கனிக்கு ஒப்பிட்டு விளக்கியவர் - தாயுமானவர்.
- "பற்றுக பற்றற்றான் பற்றினை" - திருக்குறள்.

## சரியை மற்றும் கிரியை

- இறைவனின் உருவடிவம் ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு - சரியை
- இறைவனின் அருவுருவம் (அ) லிங்கம் ஒன்றினையே பொருள் என உணர்ந்து அகம்புறம் இரண்டாலும் இயற்றப்படும் வழிபாடு - கிரியை (சிவபூஜை, சிவதன்மம்)
- சிவபூஜைக்கு செய்யப்படும் சுத்திகளின் எண்ணிக்கை - 5 (பூத, தான, திரவிய, மந்திர மற்றும் லிங்க சுத்திகள்)
- "அன்பினில் விளைந்த ஆரமுதே" "ஈறிலா பதங்கள் யாவையும் கடந்த இன்பமே என்னுடைய அன்பே" "அன்பே சிவமாவதாரும் அருகிலர்" "அன்பில் ஊன்ற உள்ளெழும் சோதியாய் நின்றனன்" -- திருமுறைகள்.
- "விரும்பும் சரியை முதல் மெய்ஞானம் நான்கும் அரும்புமலர் காய்கனிபோல் அன்றோ" - தாயுமானவர்.
- "இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" - திருக்குறள்.
- இறையுலகத்தில் உள்ள இன்பங்களை நுகர்ந்து வாழுதல் - சாலோகம்.
- இன்பத்தோடு ஒரு புதல்வனை போல இறைவன் அருகில் அமரும் நிலை - சாமீபம்
- இறைவன் உருவம் போன்று உருவந்தாங்கி இன்பம் நுகரும் நிலை - சாரூபம்
- இறைவனோடு நித்தியானந்தம் அனுபவித்து பிறவியை அறுத்து நீடூழி காலம் வாழும் நிலை - சாயுஜ்ஜியம்.


## யோகம்

- பக்தன் தன் வெளித்தோற்றம் துறந்து உள்ளடங்கி இறைவனோடு ஒன்றும் நிலை -- யோகம்.
- இறைவனின் அருவம் ஒன்றினையே பொருள் என உணர்ந்து இயற்றப்படும் வழிபாடு - யோகம்.
- யோகியர் அடையும் சித்திகளின் எண்ணிக்கை - 8
- யோகத்தின் அங்கங்களின் எண்ணிக்கை - 8
- யோகத்தின் வகைகள்: 1)இயமம் 2)நியமம் 3)ஆசனம் 4)பிராணயாமம் 5)பிரத்தியாகாரம் 6)தாரணை 7)தியானம் 8)சமாதி
- இயமம் - தன்னை அடக்குதல் (10 வகைப்படும்)
- பொதுவொழுக்கத்தில் அடங்குவது - இயமம், நியமம்.
- நியமம் -- தன்னை நிச்சயித்து கொள்ளுதல் (10 வகைப்படும்)
- ஆசனம்(இருக்கை) -- யோகத்தை ஒழுங்காக நடத்த உடம்பை அமரச் செய்தல்
- பிராணாயாமம் (வளிநிலை) - (பிராணவாயுவை மந்திர ஜபத்தோடு (அ) எதுவுமின்றி அடக்குவது)

- பிரத்தியாகரம்(தொகைநிலை) - மனதை ஐம்புலவழி செல்லவிடாமல் ஒருமுகப்படுத்துதல்
- தாரணை(பொறைநிலை) - முதலில் உபதேசம் பெற்று நிம்மதியான தியானத்தில் இருக்கும் நிலை.
- தியானம்(நினைதல்) -- மனதை சலனமின்றி இறைவனுடன் நிறுத்துதல்
- சமாதி(அதுவாதல்) - மனம், சுயபோகத்தை இழந்து இறையருளில் தோய்ந்து நிற்பது.

## ஞானம்

- இறைவனின் அருள்வழிநிற்றல் - ஞானம்
- ஞானத்தின் மூலமாக கிடைக்கும் நிலை - வீடுபேறு (அ) பரமுத்தி (அ) சாயுஜ்ஜியம் (அ) பரமலட்சியம்.
- "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர்" - பெரியபுராணம்
- சாத்திரம் ஆராய்ந்து அவற்றின் சாரத்தை குருவினிடம் கேட்டு, கேட்டவற்றை சிந்தித்து தெளிந்து, தெளிந்ததை மேற்கொண்டு, ஞானம் (அறிவு) ஞாதிரு(அறிபவன்), ஞேயம் (அறிபடுபொருள்) இவற்றை கடந்து பரம்பொருளின் நிர்விகற்ப ஞானத்தால் செய்யும் ஆராதனை.




- பசுஞானம் - தற்சொரூபமறியாது சந்தேகப்பட்டு நிற்கும்
- பாசஞானம் - உலகப்பொருளை ஒருவாறு அறியும் எனலாம்
- பதிஞானமே உண்மையானது. அதுவே பிரம்மஞானமாகும்.
- ஞானமானது கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிஷ்டை என நால்வகைப்படும்.
- இவற்றை கடைபிடிக்க பரமுத்தி கிடைக்கும்.
- சிவபுண்ணியத்தின் பயனாய் அறிவின்கண் "இருவினையொப்பு" எனும் குறிதோன்றும்.
- அதாவது நல்வினை,தீவினை இரண்டையும் சமமாக பாவிக்கும் பண்பு.
- இருவினையொப்பின்கண் நிகழ்வன: 1)மலபரிபாகம் 2)சத்திநிபாதம்
- மலபரிபாகம் - மலசக்திகள் தேய்ந்து அகலுதற்குரிய பருவம் எய்துதல்.
- சத்திநிபாதம் - மலபரிபாகம் நிகழும்போது இறைவன் அருள் உயிரின்கண் பதியும். இப்பதிவு சத்திநிபாதம். இதில் நிகழ்வது மெய்யுணர்வு.
- குரு = கு + ர்+ உ: கு - மலம்: ரு - நீக்குபவர்:
- "குருட்டினை நீக்கும் குருவினை கொள்ளார்" - திருமூலர்.

# 15.தீட்சை

- உயிருக்கு பாசத்தைக் கெடுத்து ஞானத்தை (அ) மெய்யுணர்வை ஏற்றுக்கொண்டு நன்மை பயப்பது - தீட்சை எனப்படும்.
- முதல்வனது சந்நிதியில் தீட்சை எனப்படுவது - தொழிற்பாடு ஆகும்.
- முதல்வன் செய்யும் ஐந்தொழில்களுள் அருளல் எனப்பொருள்படுவது - தீட்சை
- சைவத் திருமுறைகளை ஓதுவதற்கும், சைவ நெறியை ஒழுகுவதற்கும் தகுதியை உண்டு பண்ணுவது - சிவதீட்சை எனப்படும்.
- முதல்வனால் தரப்படும் தீட்சையின் வகைகள் - 2, அவை 1)நிராதாரம், 2)சாதாரம்
- முதல்வன் தானே செய்யும் அருட்செயல் - நிராதார தீட்சை
- அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகியயோருக்கு அளித்தது - நிராதார தீட்சை
- விஞ்ஞானகலருக்கும், பிரளயாகலருக்கும் இறைவன் அளித்த தீட்சை - நிராதார தீட்சை
- சகலருக்கு முதல்வன் அளிக்கும் தீட்சை - சாதார தீட்சை
- மாணிக்கவாசகருக்கு அளிக்கப்பட்ட தீட்சை வகை - சாதார தீட்சை
- சாதார தீட்சை பொதுவாக தீட்சை என அழைக்கப்படுகிறது.
- தீட்சையின் வகைகள்:- 3, அவை 1)சமயதீக்கை 2)விசேடதீக்கை 3)நிர்வாண தீக்கை
- சரியை தொடங்குமுன் செய்யப்படுவது - சமயதீக்கை.
- கிரியை தொடங்குமுன் செய்யப்படுவது - விசேஷதீக்கை
- யோகம், ஞானம் தொடங்குமுன் செய்யப்படுவது - நிர்வாண தீக்கை
- தீட்சை செய்யும் முறைகள் - 7 வகைப்படும். அவை: 1)ஸ்பரிசதீட்சை 2)நயனதீட்சை(திருநோக்கு) 3)மானததீட்சை(பாவனை) 4)வாசகதீட்சை(உரை) 5)மந்திரதீட்சை(சாத்திரம்) 6)யோகதீட்சை 7)ஔத்திரிதீட்சை
- கோழி தன் முட்டையை அடைகாத்து குஞ்சை வெளிவரச் செய்வது போல் குரு தன் கரத்தால் சீடனை தொட்டு சீடனுக்கு கர்மபாசம் நீங்கச் செய்து பக்குவப்படுத்துவது - ஸ்பரிச தீக்கை.
- மீன் தன் சினையிலிருந்து குஞ்சை வெளிவர செய்வதுபோல ஆசிரியன் தன் அருள்நோக்கால் பாச பந்தத்திலிருந்து மாணக்கனை விடுவித்தல் - நயன தீட்சை(திருநோக்கு).
- ஆமை தன் முட்டையை மனத்தால் நினைத்து உதவுவதுபோல குரு தன் மாணவனது மனதை தன்வயப்படுத்தி அவனது கர்மத்தின் வலிமையை குறைய வைத்தல் - மானத தீட்சை(பாவனை).
- குரு உபதேசித்து மாணவன் தெளிதல் - வாசகதீட்சை(உரை).
- "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே" - என்று மருதவாணரின் உபதேசத்தால் துறவு பூண்டவர் - பட்டினத்தார். இது வாசகதீட்சைக்கு எ.கா. ஆகும்.

- "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று மதுரகவியாழ்வார் கேட்டதற்கு "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று உரைத்தவர் - நம்மாழ்வார். இதுவும் வாசகதீட்சைக்கு எ.கா. ஆகும்.
- குருவானவர் மந்திரத்தை உபதேசித்து, அதை சீடர்கள் உச்சரிப்பதன் மூலம் அவர்களது மலங்களை அழியச்செய்வது - மந்திர தீட்சை
- யோகம் என்பது - சேர்க்கை என பொருள்படும்.
- குரு மாணக்கனை இறைவனோடு ஒன்ற வைப்பது - யோக தீட்சை
- ஹோமா அக்னி மூலம் சீடனின் மலங்களை நீக்கச் செய்வது - ஔத்திரி தீக்கை.
- ஔத்திரி தீக்கை செய்யும் முறைகள் - 2 வகை. அவை 1)கிரியாவிதி 2)ஞானவழி
- குண்டமண்டலங்களை ஹோமத்தோடு செய்வது - கிரியாவிதி எனப்படும்.
- குண்டமண்டலங்கள் இன்றி ஹோமத்தை மனதால் செய்வது - ஞான வழி.
- ஔத்திரி தீக்கையின் வகைகள் - 3, அவை சமயதீக்கை, விசேடதீக்கை, நிருவாண தீக்கை
- ஔத்திரியின் வகை மூன்றும் தனித்தனியே நிர்பீசம், சபீசம் என இருவகைப்படும்.
- உபதேசிக்கும் மந்திரங்களை பீச அக்கரங்களின்றி உணர்த்துவது - நிர்ப்பீசம். அதாவது இது சமய ஆசாரங்களை ஓம்பி ஒழுக முடியாதவர்களுக்கு செய்யப்படுவது.
- நிர்பீசத்தின் வேறுபெயர் - நிரதிகாரை.
- மந்திரங்களை பீசங்களுடன் உணர்த்துவது - சபீசம்.
- சபீசத்தின் வேறுபெயர் - சாதிகாரை
- வேள்விச்சாலை அமைத்து, தீயுருவாய் விளங்கும் இறைவனை மாணக்கன் வழிபடும்படி செய்து ஹோமத்தால் தூய்மைப்படுத்துவது - சமயதீக்கை
- சமயதீக்கையின் வேறுபெயர் - மந்திராதிகாரை
- சமயதீக்கை பெற்ற மாணக்கனை சிவபுத்திரன் ஆகசெய்வது - விசேடதீக்கை
- விசேடதீக்கையின் வேறுபெயர்கள் - அர்ச்சனாதிகாரை, யோகாதிகாரை
- மாணக்கனின் சஞ்சித கன்மத்தை வலுவிழக்கச் செய்து, மூல மலத்தின் வலியை நீக்கி, முப்பொருள் பற்றிய மெய்யுணர்வை பொதுவகையால் விளங்கச்செய்வது - நிர்வாணதீக்கை.
- நிர்வாண தீக்கை பெற்றோர் மேற்கொள்ளும் நெறி - ஞானநெறி.

## 16.பூஜை செய்தல்

- பூஜையின் வகைகள் - 2, அவை ஆத்மார்த்தம், பரார்த்தம்
- ஆத்மார்த்தம் -- தன்பொருட்டு பூஜை செய்தல்
- பரார்த்தம் -- பிறர் பொருட்டு பூஜை செய்தல்
- பரார்த்தம் (அ) சமயவழிபாடு 1)நித்தியம் 2)நைமித்திகம் 3)காமிகம் என மூவகைப்படும்.
- அன்றாடம் மாறாமல் செய்துவரும் சமயவழிபாட்டு பூஜை - நித்தியம்

- விசேட காலங்களில் செய்யப்படும் சிறப்பு வழிபாடு - நைமித்திகம்
- சிற்சில பயன்களை கருதி நூல்களில் விதித்தப்படி அவ்வப்போது செய்யப்படும் வழிபாடு - காமியம்
- நிர்பீசதீக்கை பெற்றவர் - நித்திய வழிபாடு ஒன்றிற்கே உரியவர்.
- சபீசதீக்கை பெற்றவர் அனைத்து வித வழிபாடு செய்வதற்குரியவர்.
- **ஜீவன் முத்தர்கள் :** ஜீவனோடு இறைவன் திருவருளை நுகர்ந்து இவ்வுலகில் வாழ்பவர்கள். இவர்களிடம் மும்மலமழிந்தும் அதனை எஞ்சிய வாசனை மலம் இருக்கும். எ.கா. விஸ்வாமித்திரர், காசிபமுனிவர்.
- வாசனை மலம் நீங்க - அடியார்களையும், ஆலயங்களையும் இறைவனாக கருதி வழிபட வேண்டும்.

# 17.ஆலய நிர்மாணம்

- சிவாகமங்கள் - 28, சைவ உபாகமங்கள் - 116, சத்தேய உபாகமங்கள் - 64, பஞ்சராத்ராகமங்கள் - 108.
- எந்த ஆகமத்தை ஒட்டி ஆலயம் நிறுவப்படுகிறதோ அந்த ஆகமத்தை ஆதாரமாகக் கொண்டே பூஜை முதலியவை நடைபெறும்.
- ஆலய நிர்மாணம் - 1)ஆவர்த்தம் 2)அநாவர்த்தனம் 3)புனராவர்த்தனம் 4)அந்தரிதம் என நான்கு வகைப்படும்.
- ஆவர்த்தம் - புதிதாக ஆலயங்கட்டி முதன்முதலில் விக்ரகம் நிறுவி அனுக்ஞை முதல் கும்பாபிஷேகம் வரை முடிப்பது.
- அநாவர்த்தம் - மழை, புவியதிர்ச்சி முதலிய இயற்கைசீற்றத்தின் பேரில் ஆலயமழிந்து போனால் மீண்டும் புதுப்பித்தல்.
- புனராவர்த்தனம் (அ) ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன கும்பாபிஷேகம் - ஆலயத்தில் காலப்போக்கில் சில பாகம் சிதைந்து போனால் மீண்டும் புதுப்பித்தல். எட்டு சக்தியோடு இறைவனை இணைப்பது - அஷ்டபந்தனம்.
- அந்தரிதம் - அசுத்தப் பொருளோடு திருடர் புகுந்ததனால் ஆலயத்தை சுத்தம் செய்யும் பொருட்டு செய்யப்படும் சம்ப்ரோட்சனம் அந்தரிதம் எனப்படும்.
- பிரதிட்டைக்குரிய கிரியைகள் மொத்தம் 64.
- **அனுஞ்ஞை** - ஆகம நூல்களை ஆராய்ந்து, கிரியைகளை ஒழுங்குப்படசெய்யும் ஆற்றல் வந்த ஓர் ஆச்சரியனை தேர்ந்தெடுத்து, இவ்வரிய செயலை செய்வதற்கு இறைவன் அனுமதி பெற்று நியமனம் செய்வதாகும்.
- **கணபதி பூஜை** - எடுத்த காரியம் இனிது நிறைவேற

- வாஸ்து சாந்தி - தேவர்களை பூஜித்து இடையூறு நேராவண்ணம் கும்பாபிஷேக பணி செய்வோர், கலந்து கொள்வோருக்கு இன்னல் வராமலும், அசுர தொந்தரவு நேராமலும் இருக்க செய்யும் கிரியை.
- **மண் எடுத்தல்** - இந்திரன் முதலிய **8** காவலரிடம் அனுமதி பெற்று, சுத்த பூமியிலிருந்து மண் எடுத்து பள்ளத்தில் அபிசேகம் செய்தல்.
- **முளையீடு** - பாலிகை என்ற மண்பாத்திரத்தில் விதையிட்டு உலக சிருஷ்டியை உணர்வித்தல்.
- **காப்புகட்டு** - கிரியை நடத்துவோருக்கு இடையூறு நேராவண்ணம் மந்திர கயிற்றை கையில் கட்டுதல்.
- **கும்பதானம்** - குடத்தை உடலாக பாவித்து, ஜீவனாக மந்திரங் கூறிய வித்யாதேகமாக பாவித்தல்.
- **கலாகர்ஷணம்** - எந்த மூர்த்தியை எக்குடத்தில் ஆவாகனம் செய்கிறோமோ அக்குடத்தில் மூர்த்தி இருப்பதாக நினைத்து வழிபடல்.
- **யாகசாலை** - கும்பாபிஷேகத்திற்கு முன் யாகசாலை 1,3,5,9 குண்டவிதானமாக அமைக்கப்படும். பின் அதனை 81 பாகமாக செய்து நடுவில் பிரமபதத்தினை அமைப்பர். அதனை சுற்றி 16, 24, 32 என பல பதங்களை அமைப்பர். அதில் தீ வளர்த்து, பூஜை பொருட்களை எரிப்பர். அது இறைவனுக்கு "ஹவிஸ்" எனும் பொருளாக மாறி அவரிடம் சேர்கின்றது.
- **பிம்பசுத்தி** - விக்ரகத்திலுள்ள அழுக்கு நீங்குதற்பொருட்டு பட்டை, தளிர், மண் இவைகளைக் கொண்டு தேய்த்து அபிடேகம் செய்தல்.
- **ஸ்பர்சாகுதி** - யாகசாலை குடத்திற்கும், மூல விக்ரகத்திற்கும் தர்ப்பைக் கயிறு,தங்கக் கம்பி, வெள்ளிக்கம்பி இவற்றால் இணைப்பு ஏற்படுத்தலாம்.
- **அஷ்டபந்தனம்** - இது மூலஸ்தான மூர்த்திக்கு செய்யப்படும் முக்கிய கிரியையாகும். மூர்த்தியையும், பீடத்தையும் ஒன்றுசேர்த்தல் (அ) பதித்தல் ஆகும். இவ்வாறு சேர்த்தலுக்கு மருந்துசாத்தல் எனக் கூறுவர்.
- மருந்து பொருட்கள் - சுக்கான், கற்பொடி, குங்கிலியம், கொம்பரக்கு, காவிக்கல், செம்பஞ்சு, இலிங்கம், வெள்ளை மெழுகு, வெண்ணெய் என எட்டு ஆகும்.
- **குடமுழுக்கு** - யாகசாலையில் எந்த மூர்த்திக்கு எந்த குடம் வைத்து பூஜிக்கப் படுகிறதோ அக்குடநீரை மூர்த்திக்கு அபிடேகம் செய்தல்.
- **மகாபிஷேகம்** - கும்பாபிஷேகம் கழிந்தபின் இறைவனின் எழுந்தருளிக்கும் விக்ரகத்தில் இருந்து முறைப்படி அபிஷேக, அலங்கார நிவேதனம் செய்தல்
- **மண்டல அபிஷேகம்** - மகாகும்பாபிஷேகம் முடிந்து மூன்றுபட்சம் கழித்து செய்யும் அபிஷேக ஆராதனை.
- **பஞ்ச சுத்தி** - பூஜிப்பவர் உடல் உள்ளம் சுத்தமாக இருக்கச் செய்வது.

## ஐவகை சுத்திகள்

- ஆத்மசுத்தி - ஆச்சாரியன் தன் உடலை கோவில் உள்ளிருக்கும் திருமேனி போல சுத்தமாக வைத்தல்.
- ஸ்தான சுத்தி - அர்க்கிய நீரை பூமியில் தெளித்து ஆலயத்தின் அனைத்து இடங்களையும் சுத்தமாக வைத்தல்
- திரவிய சுத்தி - பூஜை பொருட்களை (பாத்திரம்) நன்கு கழுவி சங்கு நீரால் பூஜை பதார்த்தத்தை அர்க்கிய நீர்கொண்டு தெளித்தல்.
- மந்திர சுத்தி - பீஜாட்சர மந்திரத்தை சுஷூம்னை நாடியில் அடக்கி அந்தந்த மூர்த்திக்கு உரிய மூலமந்திரத்தை பத்து முறை ஜபிக்க வேண்டும்.
- இலிங்க சுத்தி - அபிடேக பாத்திரத்தில் நீர் நிரப்பி கங்கை முதலிய 9 தீர்த்தங்களை ஆவாகனம் செய்து இலிங்கத்தில் அபிடேகம் செய்ய வேண்டும். விக்ரகங்களில் ஒட்டி கிடக்கும் மெழுகினை கலைந்து சுத்த ஆடை கட்டவேண்டும்.

## சோடசோபசாரங்கள்

- இது இறைவனுக்குரிய பூஜையில் செய்யப்படும் 16 உபசாரங்கள்.
- **1.ஆவாகனம்** - இறைவனை வரவழைத்து நேர்முகப்படுத்தி விக்ரகத்தல் சேர்ப்பதற்கு ஆவாகனம் என்று பெயர். இது மூலாதாரத்திலுள்ள ஜீவசைதன்யத்தை எடுத்து சுஷூம்னை வழியாக மேலேற்றி கொண்டு வந்ததாக சங்கற்பம் செய்தல்.
- **2. ஸ்தாபனம்** - இறைவனை விக்ரகத்தில் எழுந்தருள வேண்டுமென பிரார்த்தித்து பீடத்தலுள்ள விக்ரகத்தில் இறைவனை அமர்த்துதல்.
- **3.சந்நிதானம்** - இது பூஜிக்கப்படும் மூர்த்தி நமக்கு அனுக்கிரகம் செய்யும் முறையும், பூஜகன் அருள்பெறும் முறையுமாகும்.
- **4.சந்நிரோதனம்** - இறைவா அடியேனிடம் என்றும் கருணையோடு இருக்கவேண்டும் என வேண்டி பூஜை முடிவு வரை சாநித்யம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுதல்
- **5.அவகுண்டனம்** - விக்ரகத்தைச் சுற்றி கவச மந்திரத்தால் மூன்று அகழ் உண்டாக்கி தடைகள் வராமல் அம்மந்திரத்தாலேயே அதனை மூட வேண்டும்.
- **6.அபிஷேகம்** - எண்ணெய், மாப்பொடி, நெல்லிமுள்ளி, மஞ்சள்பொடி, பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், பால், தயிர், தேன், கரும்பு, வாழைப்பழம், எலுமிச்சைபழச்சாறு, இளநீர், அன்னம், விபூதி, சந்தனம், பத்ரோதகம், கும்போதகம் இவற்றை வரிசைப்படி அபிடேகம் செய்ய வேண்டும். அபிடேகத்திற்குப்பின் தேனுமுத்திரை காட்டவேண்டும்.
- தேனு முத்திரை என்பது பசுவின் அகடு போன்ற முத்திரை ஆகும்.
- **7.பாத்யம்** - சந்தனம், வெண்கடுகு, விலாமிச்சை இந்த நான்கு பொருட்களையும் பாத்ய நீரில் கரைத்து மூலமந்திரத்தை "நம" என முடியுமாறு கூறி பாதத்தில் விடவேண்டும்.

- **8.ஆசமநீயம்** - நீரில் ஏலக்காய், கிராம்பு, பச்சைக்கற்பூரம், நாவற்பழம், சாதிக்காய், குங்குமப்பூ என்ற பொருட்களை இட்டு சம்கிதா மந்திரம் மும்முறை சொல்லி பாதத்தின் அடியில் வைக்க வேண்டும்.
- **9.அர்க்கியம்** - இறைவனுக்கு மூலமந்திரம் கூறி எள், யவநெல், தர்பூசணி, பால், அரிசி, புஷ்பம், வெண்கடுகு முதலியன கலந்தநீரால் சிரசில் சமர்ப்பித்து அர்க்கியம் கொடுக்க வேண்டும்.
- **10. மாலை சாத்துதல்** - அழகிய புஷ்பங்களால் இறைவனை அலங்கரித்தல்.
- **11. தூபம்** - சந்நிதியில் சாம்பிராணி புகைத்தல் ஆகும். இது கிரியா சக்தியைக் கொண்டு ஆணவமலத்தை அகற்றலாம் என்பது தத்துவம். அகில், கீழாநெல்லி, சாம்பிராணி, குங்கிலியம் முதலியன தூப பொருட்களாம்.
- **12. தீபம்** - ஆத்மாவின் மலத்தை போக்கி, ஞானத்தை கொடுக்கிறது. திரி, கற்பூரம், துணி, நூல், பஞ்சு இவற்றில் எதையாவது பயன்படுத்தலாம். தீபமேற்றி மணியடித்து மந்திரம் கூறி கீரிடம் முதல் பாதம் வரை காட்டவேண்டும்.
- **13. நைவேத்யம்** - இதற்கு நெல்லரிசி, கோதுமை, முளையரிசி இவை உத்தமம். வெள்ளை அரிசியை விட சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு உத்தமம். நெல், கல், உமி, ரோமம் இவை அரிசியில் இருக்கக் கூடாது.
- சுத்த அன்னம், பாயாசம், பொங்கல் முதலியன சித்ரான்னங்கள். நிவேதனத்துக்கு உகந்தவை.
- ஆத்மா குணமாகிய அகங்காரம், சங்கற்பம், கோபம், மோகம் இவைகளை அன்னமாக வேகவைத்து இறைவனுக்கு சமர்பிப்பதை நிவேதனம் குறிக்கிறது.
- **14. பாநீயம்** - வாசனையுள்ள தீர்த்தத்தை ஈஸ்வர ப்ரீதிக்காக சமர்ப்பித்தல்.
- **15. ஜபசமர்ப்பணம்** - மூலமந்திரத்தை 108 முறை உரு ஜபித்து அதை ஈஸ்வரனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஜபம், பூஜை, ஹோமம் முதலிய எல்லா புண்ணிய செயல்களையும் அர்ச்சகர் ஈஸ்வரனுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- **16. தீபாராதனை** - பல வித தீபங்களை ஈஸ்வர சந்நிதியில் காட்டி செய்வதற்கு தீபாராதனை என்று பெயர். இவ்வேளையில் ஏற்படும் மேளதாளங்கள், மணியொலிகளும் சங்கநாதமும் அரக்க பிசாசர், பிரம்மராட்சசர் முதலியோரை வெகுதொலைவில் விரட்டுகின்றன.
- தீபராதனை 16 வகைப்படும். தூபம், புஷ்பதீபம், நாகதீபம், விருட்சதீபம், மேருதீபம், புருஷாமிருகதீபம், கும்பதீபம், ஆராத்திரிகம், நட்சத்திரதீபம், கற்பூரதீபம், பஸ்மோபசாரம், கண்ணாடிகாட்டுதல், குடைப்பிடித்தல், கொடிகாட்டுதல், சாமரம் வீசுதல், விசிறி வீசுதல்.
- தத்துவம் - பஞ்சபூதம் ஒன்றிலொன்று ஒடுங்கி இறுதியில் கற்பூரதீபம் போல் எரிந்து எவ்வித மிச்சமின்றி இறைவனோடு ஒன்றுகிறது.

- திருநீறின்(விபூதி) வேறுபெயர்கள் - பஷிதம், பஸ்பம், சூட்சாரம், ரட்சை, பூதி, நீறு.
- விசேஷமான ஐஸ்வர்யம் - விபூதி
- ஒளியைத் தருவது,சிவதத்துவத்தை விளக்குவது - பஷிதம்
- பாவங்களை நீக்குவது - பஸ்பம்
- ஆபத்தை (அ) மலத்தை நீக்குவது - சூட்சாரம்
- அச்சம் நீக்கி காப்பது - ரட்சை
- புல்வெளியில் மேய்ந்த இளம்பசுவின் சாணத்தை அக்கினியில் நீற்றி எடுக்கும் பொடியே -- விபூதி ஆகும். அதனை பட்டுப்பை, சம்புடத்தில் வைத்தல் நலம்.
- "மந்திரமாவது(பாராவணம்) நீறு" - திருஞானசம்பந்தரின் திருநீற்றுப்பதிகம்
- வடக்கு (அ) கிழக்கு முகமாக நின்று 3 விரல்களால் எடுத்து சிவசிவ என சிவனை தியானித்து திருநீற்றைப் பூசுதல் வேண்டும்.
- **விபூதியை நீரில் கரைத்து உடலில் பாகத்தில் பூசும்போது கூறவேண்டிய மந்திரங்கள் :**

| மந்திரங்கள் | விபூதியை பூச வேண்டிய உடல் உறுப்பு |
|---|---|
| ஈசான மூர்த்தியே நம | சிரசு(தலை) |
| தத்புருஷ வகத்ராய நம | நெற்றி |
| அகோர ஹிருதாய நம | மார்பு |
| வாமதேவ குஹயாய நம | கொப்பூழ் |
| சத்யோஜாத மூர்த்தியே நம | புஜங்கள்,மணிக்கட்டு,இடுப்பு கை,கால்மூட்டுகள் |

- கண்டிகை என அழைக்கப்படுவது - உருத்திராக்கம்
- சிவபெருமானது 3 திருக்கண்களிலிருந்து பொழிந்த நீரால் தோன்றியதாக எண்ணி சிவனடியார்கள் அணிந்து கொள்வது - உருத்திராக்கம்
- நீரில் மூழ்கும்போது உருத்திராக்கத்தில்பட்டு உடலில் விழும் நீர் கங்கை நதியின் புனிதநீருக்கு சமமாக கருதப்படுகிறது.
- விநாயகருக்கு முன் தோப்புகரணமும், தலைக்குட்டுதலையும் நன்றியுணர்வுடன் செய்ய காரணம் - கயமுகசூரனை விநாயகர் அழித்ததால்.
- தேவார பாடல்கள் பாடப்பட்ட ஆலயங்கள் "தலங்கள்" என்றும், திவ்வியபிரபந்தபாடல்கள் பாடப்பட்ட ஆலயங்கள் "திவ்வியதேசம்" எனவும் அழைக்கப்படுகின்றன.
- ஆழ்வார் பாடல்களை "மங்களாசாசனம்" எனவும் கூறுவர்
- சைவசமயச்சாரியார்களால் பாடல்பெற்ற தலங்கள் மொத்தம் 274. அவையாவன:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சோழநாடு | 190 | தொண்டைநாடு | 32 | நடுநாடு | 22 | மொத்தம் 274 தலங்கள் |
| பாண்டிநாடு | 14 | மலைநாடு | 1 | துளுவம் | 1 | |
| ஈழநாடு | 2 | கொங்கு நாடு | 7 | வடநாடு | 5 | |

- ஆழ்வார்களால் மங்காளசாசனம் செய்யப்பட்ட திருப்பதிகள் 108 ஆகும். அவையாவன:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| சோழநாடு | 40 | பாண்டிநாடு | 18 | மலைநாடு | 13 | பரமபதம் ஒன்று. |
| நடு நாடு | 2 | தொண்டைநாடு | 22 | வட நாடு | 12 | மொத்தம் 108. |

- திருக்காளத்தி, திருச்சி, திருக்கோணமலை இவற்றை தென்திசை கயிலை எனக் கூறுவர்.
- அட்ட வீரட்டங்கள் -- சிவபிரான் புரிந்த எட்டு வீரசெயல்களை கொண்ட தலங்களை "அட்டவீரட்டங்கள்" என்பர். அவை: திருக்கண்டியூர், திருக்கோவிலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர்.
- சில மூர்த்தி விசேஷ தலங்களாவன:

| | | | |
|---|---|---|---|
| விநாயகர் | வலஞ்சுழி | திருக்குமரன் | திருவேரகம் |
| தட்சிணாமூர்த்தி | ஆலங்குடி | சண்டேசர் | சேய்ஞலூர் |
| நந்தி | திருவாவடுதுறை | வடுகன்(பைரவர்) | சீர்காழி |
| சபாபதி | தில்லை | தியாகராஜர் | திருவாரூர் |

- காசிக்கு சமமான தலங்களாவன: திருவெண்காடு, திருவையாறு, திருமயிலாடுதுறை, திருவிடைமருதூர், திருச்சாய்க்காடு, திருமுதுகுன்றம்(விருத்தாசலம்), திருவாஞ்சியம்.
- நவதிருப்பதிகள் - 1)ஸ்ரீவைகுண்டம் 2)ஆழ்வார்திருநகரி 3)தென்திருப்பேரை 4)திருக்குளத்தை 5)புளியங்குடி 6)திருக்கோளூர் 7)வரகுணமங்கை 8)தொலைவில்லிமங்கலம் 9)தொலைவில்லிமங்கலத்தில் அரவிந்தலோசனன் சன்னிதி தனியாக உள்ளது. அதைச் சேர்த்து ஒன்பது திருப்பதிகள் ஆகும்.

## 18.கடவுள்

- கடவுள் என்பதன் பொருள் - எல்லாம் கடந்தவர்.
- கடவுளை காண பயன்படுத்தும் 3 அளவைகள். 1)காண்டல் 2)கருதல் 3)நூலளவை.
- காண்டல் - கடவுளை கண்ணால் காணுதல்.
- கருதல் - அனுமானத்தால் உண்டென உணர்தல்
- நூலளவை - கடவுள் உண்டென நூல்கள் மூலம் அறிதல்.
- கடவுளின் 3 ரூபங்கள் (அ) திருமேனிகள் (அ) நிலைகள் - அரூபம், ரூபாரூபம், ரூபம்.
- அரூபத் திருமேனியைக் குறித்து இறைவன் - சத்தன், இலயசிவன், சிவன், சக்தி, நாதம், விந்து எனவும் அழைக்கப்படுகிறான்.
- ரூபாரூபம் - சதாசிவம், உத்தியுக்தன்
- ரூபம் - மகேஸ்வரன், உருத்திரன், மால், அயன், பிரவிருத்தன்
- சிவன் அரூபத்தில் நாதாமாயிருக்கையில் சக்தி விந்துவாகிறாள்.
- சிவன் ரூபாரூபத்தில் சதாசிவமாகையில் சக்தி மனோன்மணியாகிறாள்.
- சிவன் ரூபத்தில் மகேஸ்வரனாகையில் சக்தி மகேசை ஆகிறாள்.

- சிவன் ரூபத்தில் உருத்திரனாகையில் சக்தி உமையாகிறாள்.
- சிவன் ரூபத்தில் திருமாலாகையில் சக்தி லட்சுமியாகிறாள்.
- சிவன் ரூபத்தில் பிரம்மாவாகையில் சக்தி சரஸ்வதியாகிறாள்.
- "வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டற்று" - திருக்குறள்.

# 19.ஆலயம்

- கடவுள் திருவடியில் ஆன்மா இலயிக்கும். கோவில் கடவுள் தங்குமிடம்.
- ஆலயம் மூலமே இறைவன் அருளை பொழிகின்றான்.
- கோவில் மனித வடிவம் (ஷேத்திரம் சரீர பிரஸ்தானம்)

| | | | |
|---|---|---|---|
| பாதம் | கோபுரம் | முழங்கால் | ஆஸ்தான மண்டபம் |
| கொப்பூள் | பலிபீடம் | தொடை | நிருத்த மண்டபம் |
| மார்பு | மகாமண்டபம் | கழுத்து | அர்த்த மண்டபம் |
| சிரம் | கர்ப்பகிரகம் | மார்பில் | நடராஜர் |
| வலது செவி | தட்சிணாமூர்த்தி | இடது செவி | சண்டிகேஸ்வரர் |
| கழுத்தில் | நந்தி | வாய் | ஸ்நபன மண்டபவாசல் |
| மூக்கு | ஸ்நபன மண்டபம் | புருவமத்தி | இலிங்கம் |
| தலையுச்சி | விமானம் | | |

**கோபுரம்**

- இது ஸ்தூல லிங்கமாகும். இறைவனது விராடஸ்வரூபமே கோபுரம்.
- கும்பம் ஷோடசாந்தமாகும்.
- கோபுர தரிசனம் இறைவனது பாத தரிசனமாகும்.

**பிரகாரங்கள்**

- 3 பிரகாரம் - அன்ன, பிராண, மனோமய கோசங்களை உணர்த்தும்.
- 5 பிரகாரம் - மேலும் விஞ்ஞான, ஆனந்த மய கோசங்களை உணர்த்தும்.
- 7 பிரகாரம் - மேலும் ஸ்தூல, சூட்சுமங்களை விளக்கும்.
- பல முறை பிரகாரத்தை சுற்றி வலம் வருதல் கோசங்களை கடந்து இறைவன் விளங்குதலைக் குறிக்கும்.

**விமானம்**

- விமானம் 3 வகைப்படும்.
- பீடம் முதல் அனைத்தும் சதுரம் - நாகரம் (ஆண் விமானம்)
- கண்டம் முதல் வட்ட வடிவம் - வேசரம் (அலி விமானம்)
- கண்டம் முதல் எண்கோண வடிவம் - திராவிடம் (பெண் விமானம்)
- விமானமும் ஸ்தூல லிங்கமாகும். இதன் கீழ்ப்புறம் - முருகன், மேற்புறம் - விஷ்ணு, தென்புறம் - தெட்சிணாமூர்த்தி , வடபுறம் - பிரமன் உருவமும் இருக்கும்.

## கொடிமரம்

- இது சூட்சும லிங்கமாகும். சதுர அடிப்பாகம் - பிரமனைக்(படைத்தல்) குறிக்கும்.
- அதன்மேல் எண்கோணம் - விஷ்ணுவைக்(காத்தல்) குறிக்கும்.
- மேல் உருண்டு நீண்ட பாகம் - உருத்திரனைக் (அழித்தல்) குறிக்கும்.
- அசுரரை அகற்றவும், தேவரை வரவழைக்கவும், ஆலயத்தை இரட்சிக்கவும், பக்தர்களை காக்கவுமே - கொடிமரம் பிரதிஷ்டை செய்யப்படுகிறது.
- கொடி மரத்தின் மேல்பாகத்தில் அமைக்கப்பட்டிருப்பது - அந்தந்த மூர்த்தியின் வாகனம். எ.கா. விநாயகர் - மூஷிகம், சாஸ்தா - குதிரை.
- மூலலிங்கத்துக்கு செய்யும் அனைத்து மரியாதைகளும் - கொடிமரத்திற்கு உண்டு.
- கொடிமரத்திற்கு உகந்த மரங்கள் - முகில், சந்தனம், தேவதரு, செண்பகம், வில்வம்.
- கொடிமரத்திற்கு மத்திமமான மரங்கள் - மா, பலா.
- கொடிமரத்திற்கு அதமமான மரங்கள் - கமுகு, தென்னை, பனை.
- கொடிமரத்தில் **36** கணுக்கள் இருப்பின் சிறப்பு. நீளம் ஆலய அளவிற்கு ஏற்றவாறு இருத்தல் நலம்.
- கொடிமரமீன் தத்துவம் - யோகநிலைக்கு ஒப்பிடப்படுகிறது.
- கொடிமரத்தை யோகியின் முதுகெலும்பு (அ) மேருதண்டத்திற்கு ஒப்பிடுவர்.

## கர்ப்பகிரகம் (மூலஸ்தானம்)

- இது எல்லா உலகங்களையும் படைத்தற்கு காரணமான மூலப்பிரகிருதியின் இடமாகும்.
- மூர்த்திக்கெதிரே மூர்த்தியின் வாகனமும், பின் ஒரு பலிபீடமும் அமைப்பர்.
- இது (பதி - இறை - மூர்த்தி), (பசு - உயிர் - வாகனம்), (பாசம் - தளை - பலிபீடம்) ஆகியவற்றை உணர்த்தும்.

## சிவலிங்கம்

- லிங்கம் - குறி என்று பெயர்.
- எல்லாம் ஒடுங்கி மீண்டும் வெளிப்படுவதெனப் பொருள்.
- சிவலிங்கத்தின் அடிப்பாகம் நாற்கரம் - பிரம்மா. நடுப்பாகம் எண்கோணம் - விஷ்ணு, மேல் - நீண்ட வட்டவடிவம் - சிவன்.
- மும்மூர்த்திகளின் அடக்கமே சிவலிங்கம்.
- லிங்கம் 3 வகைப்படும். 1)நிஷ்களம் (அ) அவ்யக்தம் (அ) அரூபம் 2)சகலநிஷ்களம் (அ) வயக்தம் (அ) ரூபாரூபம் 3)சகளம் (அ) வயக்தம் (அ) ரூபம் (64 உருவம்)
- 64 ரூபத்தில் 24 ரூபம் முக்கியமானது என காரணகாமம் கூறுகிறது.
- சைலஜம் -- கல்லால் செய்யப்படும் லிங்கம்.
- ரத்னஜம் -- மாணிக்கம், மரகதத்தாலான லிங்கம்
- லோகஜம் -- பொன், வெள்ளியாலான லிங்கம்

- க்ஷணிகம் - அரிசி, மணல், கோமியம், விபூதி, சந்தனத்தாலான லிங்கம். சிறிது நேரத்திற்கு பின் அழிந்துவிடும் எனப்பொருள்.
- லிங்கம் அது உண்டான காரணத்தை வைத்து ஆறு வகையாக பிரிக்கலாம். அவை 1)தேவிகம், 2)திவ்யம் 3)ஆர்ஷம் 4)மானுஷம் 5)இராட்சஷம் 6)பாணம்.

## திருநந்திதேவர்

- நந்தி - எப்போதும் ஆனந்தத்திலிருப்பவர்.
- சைவ சமயத்தின் முதல் குரு - நந்தி
- உயிர்களை மஹாசம்ஹாரம் செய்யும் உரிமை நந்திக்கு உண்டு.
- நந்தி சிவசந்நிதியில் காவல் புரிகிறார். இவர் அனுமதிபெற்றே சிவதரிசனம் செய்யமுடியும்.
- நந்தியின் வேறுபெயர்கள் - தூயவன், சைலாதி, இடபதேவர்.
- தப்பு செய்தோரை தண்டிக்கும் அதிகாரம் இவருக்குண்டு.
- தட்ச யாகத்தில் சிவனை பழித்து பேசிய தட்சன், தேவர்களை சபித்தார்.
- நந்தியிடமிருந்து உபதேசம் பெற்றவர் → சநத்குமாரர் → சத்யஞானிதரிசினி → பரஞ்சோதி → மெய்கண்டார். இப்பரம்பரை திருக்கைலாய பரம்பரை எனப்படும்.

## பலிபீடம்

- ஸ்ரீ பலி நாதர் எனப்படும். இது எட்டு மூலையிலும் ஒவ்வொன்று உள்ளது.
- தலைமை பலிபீடம் - நந்திக்குப் பின் உள்ளது.

## தெட்சிணாமூர்த்தி

- சிவனின் குரு வடிவே இவர்.
- வேறுபெயர் - தென்முகக்கடவுள் (கர்ப்பகிரகத்தின் தென்பகுதியில் உள்ளதால்)
- கல்லால மரத்தடியில் சனகாதி முனிவர் 4 பேருக்கு உபதேசிப்பது போல், ஒரு கால் முயல் மிதித்தும், மற்றொன்று வீராஸனம் இட்டும், 4 கைகளோடு உள்ளார்.
- வலது கை 1 - சின் முத்திரை காட்டுகிறது.
- வலது கை 2 - ருத்ராட்ச மணிவடம் உள்ளது.
- இடது கை 1 - அமிர்த கலசம் உள்ளது
- இடது கை 2 - வேகம்.
- சின் முத்திரை என்பது - சுட்டு விரலால், பெருவிரல் அடியைச் சேர்த்து மற்ற 3 விரல்களை ஒதுக்கி காட்டுவதேயாகும்.
- யோகநிலையிலிருப்பதால் - யோகதட்சிணாமூர்த்தி
- தும்புரு மற்றும் நாரதருக்கு வீணை இலக்கணம் உணர்த்தியதால் வீணாதட்சிணாமூர்த்தி என வேறுபெயர்கள் உண்டு.
- தட்சிணாமூர்த்தியை "**Silent Watcher**" என அழைத்தவர் - பிளாவட்ஸ்கி அம்மையார்.

## நடராஜர்

- நடராஜரின் வலக்காலில் மிதிபட்டுள்ள முயல் - அபஸ்மாரம்.
- **பஞ்சலிங்க தலங்கள்**

  பிருத்வி ( நிலம் ) -- திருவாரூர்

  அப்பு ( நீர் ) - திருவானைக்காவல்

  தேயு ( தீ ) - திருவண்ணாமலை

  வாயு (காற்று) - காளஹஸ்தி

  ஆகாயம் - சிதம்பரம்
- ஆண்கள் ஆடும் கூத்து - தாண்டவம் எனப்படும்
- பெண்கள் ஆடும் கூத்து - இலாஸ்யம் எனப்படும்
- நடராசர் ஆடும் கூத்துகள் - கொடுகட்டி, பிண்டரங்கம், காபாலம் என மூன்றாகும்.
- மொத்தம் உள்ள தாண்டவங்கள் -- 108 ஆகும்.
- திருநடன தத்துவம் - மாயையை ஓட்டி, கன்மம் சுட்டு, ஆணவத்தை அமுக்கி அருளால் ஆன்மாவை மேலே எடுத்து ஆனந்தக்கடலில் மூழ்கச் செய்வது.

| இடம் | சபை | தாண்டவம் |
|---|---|---|
| சிதம்பரம் | பொன்னம்பலம் | ஆனந்த தாண்டவம் |
| மதுரை | வெள்ளியம்பலம் | சந்தியா தாண்டவம் |
| திருவாலங்காடு | ரத்தின சபை | ஊர்த்துவ தாண்டவம் |
| திருநெல்வேலி | தாமிர சபை | காளிகா(முனி)தாண்டவம் |
| குற்றாலம் | சித்திர சபை | திரிபுர தாண்டவம் |

- சேரமான் பெருமானுக்கு சிலம்பொலி காட்டி அருள்செய்ததும், சேக்கிழார்க்கு திருத்தொண்டர்புராணம் பாட "உலகெலாம்"என அடியெடுத்து கொடுத்ததும் - சிவனே.
- அம்பலவாணர்(நடராசர்) உருவம் ஐந்தெழுத்தைக் குறிக்கும். கூத்து ஐந்தொழிலைக் குறிக்கும்.
- அம்பலவாணர் திருமேனி ஆனந்தத்தையும், நிருத்தசபை துரிய அருணிலை தானத்தையும் குறிப்பன.
- சோமாங்கந்த திருவுருவம் "வயசி" என்னும் முக்திபஞ்சாக்கரத்தின் உருவகமாகும்.
- திருவாசி - ஓங்காரத்தையும், அதன் கண் உள்ள 51 சுடர்கள் அவ்வெண்ணிக்கையுள்ள மாத்ருகாக்கரங்களையும் குறிக்கும்.

## முருகன்

- குறிஞ்சி நிலக் கடவுள்.
- அறுபடை வீடுகள் - 1)திருப்பரங்குன்றம் 2)திருச்சீரலைவாய்(திருச்செந்தூர்) 3)திருவாவினன்குடி (பழனி) 4)திருவேரகம் (சுவாமிமலை) 5)குன்றுதோறாடல் (திருத்தணி) 6) பழமுதிர்ச்சோலை.

- முருகு என்றால் - இளமை, அழகு, நறுமணம், தேன், கடவுள் தன்மை.
- முருகனது மூர்த்தங்கள் - சுப்பிரமணி, சண்முகன், ஞானசக்திதரன், தேவசேனாதிபதி, மயில்வாகனன்.
- முருகனின் 1-வது முகம் - இருளுடைய உலகை குற்றமில்லாததன் பொருட்டு பல கிரகணங்களை தோற்றுவித்தது.
- 2-வது முகம் -- அன்பர்க்கு வேண்டும் வரம் தருதல்
- 3-வது முகம் -- வேதம் தவறாத பிராமணர்க்கு யாகத்தில் தீங்கு வராமல் தடுக்க.
- 4-வது முகம் -- வேதாகமத்தில் மறைந்துள்ளவற்றை ஆராய்ந்து போதித்து சந்திரன் போல் விளங்கும்.
- 5-வது முகம் -- அசுரரை ஒழித்து போர் வேள்வியை வேட்டது.
- 6-வது முகம் - வள்ளியுடன் மகிழ்ச்சியை பொருந்திற்று.
- முருகனுக்கு கைகள் -- 12.
- கொக்கறுகோ - சூரனாகிய மா மரத்தை வெட்டி வீழ்த்திய தலைவன்.
- வள்ளி (சுந்தரி), தெய்வானை(அமுதவல்லி) பூர்வஜென்மத்தில் திருமாலின் புதல்வியர்.
- சிவஞானபோதம் 8-ம் சூத்திரத்திலுள்ளதுபோல், உயிர் தன்னியல்பில்லாமல் கருவி இயல்பே என மயங்கும் போது இறைவன் ஆட்கொள்வான் என்பது - வள்ளி திருமண தத்துவம்.

**சண்டிகேஸ்வரர்**

- ஆலய இறுதி வழிபாடு.
- மும்முறை கைதட்டி வழிபடுவர்.
- வீடுபேறு விரும்புவோர் இவரை வழிபடலாம்.
- சோழநாட்டில் மண்ணியாற்றங்கரையில் சேய்ஞலூரில் எச்சதத்தனுக்கும், பவித்திரைக்கும் மகனாக பிறந்தவர் - விசாரசருமர்.
- ஆற்று மணலில் லிங்கம் அமைத்து பாலாபிஷேகம் செய்தவர் - விசாரசருமர்.
- அதனால் அவர் தந்தை கோபத்தில் காலால் பால்குடத்தை இடற, விசாரசருமர் தந்தையை அடிக்க கோலெடுக்க, அது மழுவாய் மாறி கால்களை வெட்டியது.
- விசார சருமருக்கு முன் சிவன் தோன்றி கொன்றை மலரை இவருக்குச் சூட்டினார்.
- இவர் ஆழ்ந்த சிந்தனையில் ஆலயத்தின் வடபுறம் கோமுகிக்கருகே தனிக்கோயிலில் வீற்றிருப்பார். இவரருகே ஆலயத்திற்கு தேவையான நூல், திரி, நெய் போன்றவற்றை வைப்பர்.

# 20.மந்திரங்கள்

- மனனம் செய்பவனை திராணனம் (ரட்சிப்பது) செய்வது - மந்திரம்.
- "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
  மறைமொழி தானே மந்திரம் என்ப" - தொல்காப்பியம்.
- நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
  மறைமொழி காட்டி விடும் - திருக்குறள்.
- மந்திரம், 1)சித்தம் 2)ஸாத்யம் 3)ஸ்வசிதம் 4)ரிபு என நால்வகைப்படும்.
- **சில மூலமந்திரங்கள் :**

| | |
|---|---|
| சிவன் மூல மந்திரம் | ஓம் நமசிவாய: |
| விஷ்ணு மூலமந்திரம் | ஓம் நமோ நாராயணாய: |
| தேவி மூல மந்திரம் | ஓம் உமாதேவ்யை நம: |
| கணபதி மூலமந்திரம் | ஓம் கணபதயே நம: |
| சுப்பிரமணியர் மூலமந்திரம் | ஓம் சரவணபவாய நம: |
| சாஸ்தா மூலமந்திரம் | ஓம் சாஸ்த்ரு மூர்த்தயே நம: |

- மந்திர ஜப முறை - மானஸம், மந்தம், வாசகம் என மூவகைப்படும்.
- மனதுக்குள் ஜபிப்பது மானஸமாகும் (உத்தமம்).
- தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்ல உச்சரிப்பது - மந்தம் (மத்திமம்)
- பிறர் அறிய உச்சரிப்பது - வாசகம் ஆகும் (அதமம்).
- காலை, மாலைகளில் சந்தியாவந்தனம் முடிந்ததும் ஜபிக்கப்படும் மந்திரம் - காயத்ரி மந்திரம்.
- காயத்ரி என்பதன் பொருள் - ஜபிப்பவனை இரட்சிப்பது
- காயத்ரி மந்திரத்தில் உள்ள மொத்த எழுத்துக்களின் எண்ணிக்கை - 24
- காயத்ரி மந்திரம் உள்ள இடம் - ரிக் வேதத்தின் 3-வது மண்டலம்
- அட்டகாம வித்தைகள் - ஸ்தம்பனம், மோகனம், வசியம், ஆகர்ஷணம், உச்சாடனம், வித்வேடணம், பேதனம், மாரணம்.

| முகங்கள் | எழுத்துக்கள் | சித்திகள் | உச்சரிக்க வேண்டிய எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஈசான முகம் | நகரம் | உச்சாடனம் | 25 முறைகள் |
| தத்புருஷம் | மகரம் | வித்வேடணம் | 25 முறைகள் |
| அகோரம் | சிகரம் | ஸ்தம்பனம் | 25 முறைகள் |
| வாமம் | வகரம் | பேதனம் | 25 முறைகள் |
| சத்யோஜாதம் | யகரம் | மாரணம் | 25 முறைகள் |

- பஞ்சாக்கரம் பிரணவத்தின் உள்ளுறுப்பாகும்.

| பஞ்சாக்கரம் | அட்சரங்கள் | பயன்கள் |
|---|---|---|
| ஸ்தூல பஞ்சாக்கரம் | நமசிவாய | இம்மை, மறுமை பயன் அளிக்கும் |
| சூட்சம பஞ்சாக்கரம் | சிவாய நம | மலத்தை நாசம் பண்ணும் |
| காரண பஞ்சாக்கரம் | சிவாய சிவ | பாசத்தைக் கெடுக்கும் |
| மகாகாரண பஞ்சாக்கரம் | சிவ | அருள், சிவத்தோடு இன்பமளிக்கும் |
| மகாமநு | சி | சிவமேயாக்கும் |

- ஸ்தூல பஞ்சாக்கரம் - இது நகாரம் முதலாகவும், யகரம் இறுதியாகவும் உள்ளது. அப்பர், சுந்தரர், சம்பந்தர் "நமசிவாய பதிகம்" பாடியுள்ளனர்.
- திருவைந்தெழுத்து என அழைக்கப்படும் மந்திரம் - நமச்சிவாய நம
- பிரணவத்தின் வடிவம் என அழைக்கப்படும் மந்திரம் - நமச்சிவாய நம
- அனைத்து மந்திரங்களுக்கும் மூலமாவது - நமச்சிவாய நம
- நான்கு வேதங்களுக்கும் முடிபுணர்த்தும் மகாவாக்கியமாக அமைவது - நமசிவாய நம
- பெரும்பெயர், சிவமூலமந்திரம், திருநாமம் என அழைக்கப்படுவது - நமசிவாய நம
- பஞ்சாக்கரம் எனப்படும் மந்திரம் - ஓம் நமசிவாய
- பஞ்சாக்கரம் எனப்படும் மந்திரம் - யஜூர் வேதத்தில் உள்ள ஏழு காண்டங்களில் நடுக் காண்டத்தில் நடு சம்ஹிதையில், ருத்ராத்யாயத்தில் நடுநாயகமாக கூறப்படுகிறது.

| எழுத்துக்கள் | பஞ்சபூதங்கள் | அதிதேவதை | கூறப்படும் பொருள் |
|---|---|---|---|
| **ந**காரம் | பிருதிவி (பூமி) | இராமன் | பாசத்தை தொழிற்படுத்துதல் (அ) மறைத்தல் |
| **ம**காரம் | அப்பு (நீர்) | விஷ்ணு | மும்மலத்தைக் குறிக்கும் |
| **சி**காரம் | தேயு (தீ) | சிவன் | சிவனைக் குறிக்கும் |
| **வ**காரம் | வாயு | மகேசுவரன் (அ) சக்தி | திருவருள் ஒலி |
| **ய**காரம் | ஆகாயம் | சதாசிவம் | உயிரை இறைவன் அருட்கொள்ளும் விதம் |

- "நானேயோ தவம் செய்தேன், சிவாய நம எனப் பெற்றேன்" - திருவாசகம்.
- "ஊனநடனம் ஒருபால் ஒருபாலா ஞானநடனம் தான் நடுவே நாடு" - திருவருட்பயன்

## குருலிங்க வழிபாடு

- சைவத்தில் (அ) சிவநெறியில் சைவ சமயக்குரவர்கள் நால்வராலும் சிவநெறியின் உயிர்க் கொள்கை எனக் கருதப்படுவது - திருக்கோயில் வழிபாடு
- "கீர்த்தி திருவகவல்" என்ற நூலின் மூலம் திருக்கோயில் வழிபாட்டை விளக்கியவர் - மாணிக்கவாசகர்
- "சேஷாத்ரகோவை" என்ற நூலின் மூலம் திருக்கோயில் வழிபாட்டை விளக்கியவர்கள் - முதல் மூவர் (அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர்).

- திருக்கோயிலின் சிவலிங்கத்தின் முன்புறமாக அமர்ந்துள்ள இடப வாகனம் குறிக்கும் பொருள் - தர்மம் (அறநெறியின் பயனாக மெய்யுணர்வு எய்திய சுத்த ஆன்மாவைக் குறிக்கும்)
- திருக்கோயிலில் உள்ள பலிபீடம் குறிப்பது - பாசத்தைக் குறிக்கும்.

## 21.திருவிழாக்கள்

- மகோத்சவம், பிரமோத்சவம் என்று கூறுவார்கள்.
- பொதுவாக 1 முதல் 21 நாட்கள் வரை திருவிழா நடைபெறும்.
- பொதுவாக கொடியேற்றம் முதல் 10 நாட்கள் நடைபெறும்.
- கொடியேற்றத்திற்கு முன்தினம் விநாயகர் ஊர்வலம் நடத்தப்படும்.
- துவாஜரோகனம் எனப்படுவது - கொடியேற்றம்
- திருவிழாவில் முக்கியமாக நடத்தப்படவேண்டிய கிரியைகள் 18.
- இறைவனின் தொழில்கள் ஐந்து.
- சிருஷ்டி - படைத்தல் (மண்எடுத்தல், முளையிடுதல், கொடியேற்றம் முதலியன)
- ஸ்திதி - காத்தல் (வாகன உற்சவம், யாகம், பலி முதலியன)
- சம்ஹாரம் - அழித்தல் (தேர்த்திருவிழா, பரிவேட்டை, சாந்தணிதல்)
- த்ரோபவம் - மறைத்தல் (மௌனமாக நடைபெறும் திருவிழா)
- அனுக்கிரகம் - அருளல் (மட்டையடி, திருவூடல், நடராஜ உற்சவம்)
- முதல் 5 நாட்கள் - விருத்திகிரம ஐந்தொழில்.
- 2-வது 5 நாட்கள் - இலயகிரம ஐந்தொழில்.
- கொடியேற்றுவிழா தத்துவத்தை உமாபதிசிவாச்சாரியார் "கொடிக்கவியில்" கூறியுள்ளார்.
- முதல் நாள் - கொடியேற்றம் (மூர்த்தியின் வாகனகொடி சிவாலய ரிஷப கொடி, தர்மரூபமாகவும், ஆத்மா உருவமாகவும் மதிக்கப்படுகிறது)
- முதல் நாள் இரவு - சிவன் மரத்தடியில் வீற்றிருப்பது விருட்ஷ வாகனம். கோலம் - விருத்திகிரம சிருஷ்டி கோலம், மர இலை, கிளைகள் உயிர் வர்க்கங்களாம். இறைவன் சிருஷ்டிக்கெல்லாம் வேர் போன்றிருப்பதாக குறிக்கிறது.
- 2-வது நாள் காலை - சூரிய பிரபை. மாலை - சந்திரபிரபை, கோலம் - விருத்திகிரம ஸ்திதி கோலம்
- 3-வது நாள் காலை - அதிகார நந்தி (விஞ்ஞானகலரின் தலைவன், சாரூப பதவி பெற்றவர்) , மாலை - பூத வாகனம்: கோலம் - விருத்திகிரம சம்ஹார கோலம்.
- 4-வது நாள் -- நாக வாகனம், நாகமானது நஞ்சு, மாணிக்கத்தை மறைத்து வைத்திருப்பதால் இத்திருவிழா த்ரோபவத்தை குறிக்கும்.
- 5-வது நாள் விருஷப வாகனம், மாசற்ற வெள்ளை நிறம்கொண்ட அருள்பெற்ற ஆன்மா - விருஷபம். அருளளைக் குறிக்கும் (அநுக்கிரக கோலம்)

- 6-வது நாள் -- யானை வாகனம் (கோலம் - இலயக்கிரம சிருஷ்டி கோலம்)
- இலயக்கிரமம் என்றால் ஒழுங்குமுறை எனப்பொருள். உலகப்பொருள் அனைத்தும் ஒரே பிண்டமான யானையின் பருவுடல் போல ஒடுங்குவதை குறிக்கிறது.
- 7-வது நாள் - கைலாச பர்வத வாகனம், இராவணன் மேலுள்ள கைலாச பர்வதத்தில் இறைவன் எழுந்தருளல்.
- தீங்கு செய்தோர் அடங்கி வழிபட்டால் இறைவன் அருள்வான் என குறிக்கிறது. கோலம் - ஸ்திதி கோலம், சில இடங்களில் தேர்த்திருவிழா நடைபெறும்.
- 8-வது நாள் அசுவ (குதிரை) வாகன ஆரோகனம், கோலம் - ஹங்காரம் : மாலையில் - பிச்சாடன கோலம், ரிஷி, ரிஷிபத்தினிகளின் திமிரை அடக்கி பின் மறைந்து அருளினான்.
- 9-வது நாள் - தேர்த்திருவிழா (ஸ்திதி கோலம்)
- 10-வது நாள் -- தீர்த்தவாரி, காலையில் நடராஜர் வீதி உலா வருவார்.
- சபையை விட்டு புறப்படுதல் - சிருஷ்டி. அபிஷேகம் - ஸ்திதி.
- கருஞ்சாந்தணிதல், அலங்கார ஆராதனை -- சம்ஹாரம்.
- வெள்ளைச்சாந்து பொடி -- மறைத்தல், மட்டையடி தரிசனம் -- அருளல்.
- அதன்பின் தீர்த்தவாரி நடைபெறும் (மகாருத்ர பாத தீர்த்தம் எனப்படும்)

## இதர திருவிழாக்கள்

### திருக்கலியாணத் திருவிழா

- ஆலயத்தில் 6 (அ) 7 வது திருவிழா நாளில் (அ) தனித்தும் நடைபெறும்.
- இறைவன், இறைவி செய்வது - திருக்கலியாணம்.
- இறைவன் எடுக்கும் திருமேனிகள் 3. யோகி - யோக முக்தியருளல், போகி - உயிர்களுக்கு போகம் புரிதல், வேகி(கோர வடிவம்) - உயிர்களுக்கு வினை ஊட்டுகின்றான்.
- நமக்கு ஒரு வருடம் என்பது தேவர்களுக்கு -- ஒரு நாள்.
- பராசக்தி, தட்சன் மகள் தாட்சாயிணியாய், பர்வதன் மகள் பார்வதியாய், மலையத்துவச பாண்டியன் மகள் தடாதகை(மீனாட்சி)யாய் தோன்றி, தவமியற்றி இறைவனை திருமணம் செய்தாள்.
- திருக்கலியாண தத்துவம் - உலகில் ஆணோ, பெண்ணோ தவமியற்றுபவராயின் இறைவன் காட்சியளித்து அருள்புரிவான்.

### விநாயகர் சதுர்த்தி

- ஒவ்வொரு வருடமும் ஆவணியில் அமாவாசை கழிந்த 4-ம் நாள் கொண்டாடப்படுகிறது.
- விநாயகர் - தனக்கு நிகராய் ஒரு நாயகர் இல்லாதவர்.

- மனிதர், விலங்கு, ஆயுதங்களால் தன்னை கொல்லக் கூடாது என வரம் பெற்ற கஜமுகசூரனைக் கொன்ற தினம்.
- கஜமுகாசூரனுக்கு கொடுத்த மரியாதையான தலையில் குட்டிக்கொள்ளுதலை அந்நாள் முதல் விநாயகருக்கு செய்கின்றனர்.
- பிரம்மன் பரிந்துரையால் நாரத மாங்கனியை சிவன் முருகனுக்கு கொடுக்க சந்திரன் அதைக் கண்டு சிரிக்க விநாயகர் வெகுண்டு சந்திரனுக்கு சாபம் கொடுத்தார். அதனால் சதுர்த்தியன்று சந்திரனை பார்க்காமல் பூஜிப்பவர்க்கு மட்டுமே விநாயகர் அருள் முழுமையாகக் கிட்டும்.
- மேலும் சந்திரனை சதுர்த்தியன்று பார்ப்பது உடலுக்கு பலவித தீங்கினை விளைவிக்கும்.

## நவராத்திரி விழா

- புரட்டாசி மாதம் அமாவாசைக்கு பின்வரும் 9 இரவில் பராசக்தியை பல வடிவாக பூஜிக்கும் விழா.
- முதல் 3 நாட்கள் - பார்வதி(மலைமகள்) , பச்சை/நீலம்/ ஞான வடிவம்.
- இடையில் 3 நாட்கள் - லட்சுமி(அலைமகள்), சிவப்பு/பொன்/ செல்வ வடிவம்.
- இறுதி 3 நாட்கள் - சரசுவதி(கலைமகள்), வெள்ளை/64 கலைகளுக்கும் அதிதேவதை.
- பத்து இரவுகள் விழா நடப்பதால் இதனை -- தசரா என அழைப்பர்.
- நவராத்திரி தத்துவத்தை பற்றி "தேவிபாகவதம்" கூறுவதாவது :
- எதிரியின் பலத்தை அருந்தும் வலிமையைக் கொண்ட வரத்தினை பராசக்தியிடமிருந்து பெற்ற மகிஷாசூரனை பரமேஸ்வரனை மணந்த தேவியின் அவதாரமான **லலிதா** கொன்று தேவர் துயரினை போக்கினாள். அவளை எதிர்த்த அசுரன் தம்பியான விசுக்ரன், விசங்கனையும் தேவி தன்னிடத்தில் தோன்றிய துர்க்கை மூலம் விழுங்கினாள். இதுவே நவராத்திரி விழா தத்துவம்.

## கந்த விரத விழாக்கள்

- வார விரதம் -- ஒவ்வொரு வெள்ளிக்கிழமை.
- நட்சத்திர விரதம் - ஒவ்வொரு மாதமும் கிருத்திகை தோறும் விரதமிருந்து முருகனை வழிபடுதல்.
- "சர" என்றால் 25. 25 தத்துவத்தின் கூட்டமாகிய பிரபஞ்சமே சரவணம் ஆகும்.
- "சரவணபவன்" என்பதற்கு நாணல்புல் நிரம்பிய தடாகத்தில் தோன்றியவன் எனப் பொருள்.
- கார்த்திகை மாதரின் நாளாகிய கிருத்திகையில் முருகன் தோன்றியதால் கார்த்திகேயன் என பெயர் பெற்றான்.

## திதி (அ) சஷ்டி விரதம்

- ஐப்பசி அமாவாசை கழிந்த 6 நாட்கள் விரத திருவிழா.
- காசிப முனிவருக்கும், மாயை அரக்கிக்கும் பிறந்த சூரன், சிங்கமுகன், தாரகன் ஆகியோர் சிவனை நோக்கி தவமிருந்து வரம் பெற்று, தேவர்க்கு தொல்லை கொடுத்ததால் இறைவன் முருகனாய் தோன்ற, அவனோடு தேவர்கள் 6 நாட்கள் உணவருந்தாமல் முருகனை நினைந்து தியானவிரதமிருந்தனர்.
- போரில் தம்பியரும், தனையரும் இறந்தபின் சூரன் மாமர வடிவாக கடலினுள் மறைந்து நின்றான். முருகன் தன் வேலை எறிந்து மரத்தை இரு கூறாக்கி சேவல், மயிலாக மாற்றி சூரனுக்கு அருள்புரிந்தான்.
- அதனால் தேவர்கள் ஐப்பசி வளர்பிறை ஆறுதினங்களும் வாழ்த்தி வணங்கினர்.
- முசுகுந்தன் என்பவன் கந்தசஷ்டி விரதம் மேற்கொண்டு உலக அதிபதியானான்.
- தத்துவம் - ஆணவ மலம், முக்தியிலும் அழியாது வலுக்குறைந்து நிற்கும் என்பதை சூரன் அழியாது மயிலாய் மாறியது உணர்த்தும்.

## திருக்கார்த்திகை விளக்கிடு திருவிழா

- கார்த்திகை மாதம் பௌர்ணமி நாளில் கார்த்திகை நட்சத்திரம் வருகையில்.
- கார்த்திகை நட்சத்திரம்(மீனின்) மறுபெயர் - ஆரல், இறால், அறுவாய், அளக்கர், அறுமீன் ஆகியன.
- சூரியன் கார்த்திகை நட்சத்திரத்தை குறுகும்போது அக்கினி நட்சத்திரம் ஆரம்பமாகும்.
- விளக்கிடுவதின் தத்துவம் - இறைவன் உயிர்களின் ஆணவ மலத்தைப்போக்கி தன்மயமாக்குவான்.
- திருவண்ணாமலையிலும் தீபம் ஏற்றப்படுகிறது.
- தீபமேற்றி வழிபட முடியாத இடங்களில் சிவ-விஷ்ணு ஆலயத்திற்கு முன் சொக்கபனை வேய்ந்து கொளுத்துவர்.

## திருவாதிரை விழா

- மார்கழியில் திருவாதிரை நட்சத்திரத்தில் கொண்டாடப்படும்.
- திரு அடைமொழி நட்சத்திரங்கள் - திருவாதிரை (சிவன்), திருவோணம்(விஷ்ணு)
- கண்ணன் கீதையில் கூறியது - மாதங்களில் நான் மார்கழி.
- இம்மாதம் தேவர்களுக்கு விடியற்காலை வேளை.
- ”திருவாதிரையில் நடராஜரை வழிபடவேண்டும்” - காராணாகமம்
- ஆதிரையன் என்றழைக்கப்படுவது - சிவன்
- இவ்விழா திருப்பெருந்துறை எனும் ஆவுடையார்கோவிலில் நடைபெறுகிறது.
- தத்துவம் - நல், தீவினைகளுக்கு ஏற்ப இன்பதுன்பத்தை இறைவன் ஊட்டும் த்ரோபவ செயலை இது கூறுகிறது.

- கொடியேற்றத்தின் அன்று மாணிக்கவாசகரை எழுந்தருளச் செய்து நிவேதனம் செய்து திருவெம்பாவை ஓதி நடராஜருக்கு சிறப்பு அபிஷேகம் செய்வர்.
- மார்கழி திருவாதிரையில் உமையாள் மகிழ சிவன் திருக்கூத்தாடியதால் நாமும் கூத்தன் தரிசனம் கண்டு அந்நாளில் குதூகலிக்கின்றோம்.

## வைகுண்ட ஏகாதசி

- மார்கழியில் வரும் சுக்லபட்ச ஏகாதசி சர்வமுக்கோட்டி ஏகாதசி என்பர்.
- ஸ்ரீரங்கத்தில் ஆண்டாள் திருப்பாவை பாடி இறைவனை வணங்குவர்.

## தைப்பூச விழா

- தைப்பௌர்ணமி பூச நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது.
- திருவிடைமருதூர், மதுரை முதலிய இடங்களில் நடைபெறும்.

## சிவராத்திரி விரத விழா

- மாசி மாதம் தேய்பிறை சதுர்த்தசியில் நடைபெறும்.
- அன்று சிவாலயங்களில் 4 கால பூஜை நடைபெறும்.
- இதனை விழாநிசி(இன்பராத்திரி), பிரம்மசொரூபம், மகாதபசு, பிரகாசம், யசசு, சகலபுவனம், சத்தியம் எனக் கூறுவர்.
- த்ரயோதசி - அம்பிகையை குறிக்கும்.
- சதுர்த்தசி - சிவனை குறிக்கும்.
- சிவராத்திரி என்பது பஞ்சபூதங்களை மாயையில் இருந்து ஒடுக்கி அனைவரும் இல்லாதபடி சம்ஹரிப்பது.
- சம்ஹாரம் செய்த சிவன் நர்த்தனம் ஆடுகையில் சிவகாமி அம்மையார் உயிர்களின் மேல்கொண்ட கருணையால் சிவனை பூஜித்ததால், சிவன் சிவகாமியோடு ஒன்றி மீண்டும் உலகைப் படைத்தான்.
- உயிர்கட்கு தனு, கரண, புவன, போகமளித்தான்.

| யாமம் | அபிஷேகம் | பூச்சு | மலர் | நிவேதனம் |
|---|---|---|---|---|
| முதல் யாமம் | பஞ்சகவ்யம் | சந்தனம் | வில்வம் (அ) தாமரை | பச்சைபயறு, பொங்கல் |
| 2-ம் யாமம் | ரஸபஞ்சாமிர்தம் | அகில் | துளசி, தாமரை | பாயாசம், |
| 3-ம் யாமம் | கொம்புத்தேன் | பச்சைகற்பூரம் | சாதிமல்லி, வில்வம் | எள் அன்னம் |
| 4-ம் யாமம் | கருப்பஞ்சாறு | குங்குமப்பூ | நந்தியாவர்த்தம், நீலோற்பவம் | சுத்த அன்னம் |

**மாசி மகம்**

- மாசி பௌர்ணமி மக நட்சத்திரத்தில் நடைபெறும்.
- பங்குனி உத்திரம் - பங்குனி பௌர்ணமி உத்திர நட்சத்திரத்தில் நடைபெறும். இடம் - திருவாரூர்.
- சித்ராபௌர்ணமி (சைத்ரோத்ஸவம்) - சித்திரை பௌர்ணமி சித்திரை நட்சத்திரத்தில் நடைபெறும். இடம் - மதுரை
- வைகாசி விசாகம் - வைகாசி பௌர்ணமி விசாக நட்சத்திரத்தில் நடைபெறும். இடம் - திருச்செந்தூர், திருப்பாதிரிபுலியூர்.
- ஆனி உத்திரம் - ஆனி மாத உத்திர நட்சத்திரத்தில் நடைபெறும். இது ஆனிதிருமஞ்சனம் எனப்படும். இடம் - சிதம்பரம், பெருந்துறை.
- ஆடிப்பூரம் - ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள், சிவஸ்தல அம்பாளுக்கும் நடைபெறும்.
- பிரதோஷம் - ஒவ்வொரு மாதமும், வளர்பிறை, தேய்பிறையில் வரும் த்ரயோதசி அன்று பிரதோஷ விரதம் மேற்கொள்ளப்படும். இவ்விரதத்தை சித்திரை, வைகாசி, ஐப்பசி, கார்த்திகை ஏதேனும் ஒரு மாதத்தில் நோன்பு நோற்க ஆரம்பிக்க வேண்டும்.
- சனிக்கிழமை வரும் பிரதோஷம் சிறப்பு வாய்ந்தது.
- பிரதோஷத்திற்கும், ஏகாதசி, துவாதசிக்கும் உள்ள சம்பந்தம் - துர்வாசர் சிவபூஜையில் கிடைத்த மலரை இந்திரனிடம் கொடுக்க அவன் அதனை அலட்சியமாக வெள்ளை யானை மீது வைக்க, யானையானது அதனை தூக்கியெறிய கோபமுற்ற துர்வாசர் செல்வமனைத்தும் நீங்கக்கடவது என சாபமிட, செல்மிழந்த தேவர்கள், அசுரர் உதவியோடு பாற்கடலை கடைய அதில் இழந்த செல்வங்கள் விஷத்துடன் வர, அதனை சிவன் உண்ண அவர் கழுத்திலே விஷம் தங்கி நீலகண்டன் என பெயர் பெற்றார். அன்றைய தினம் தேவர்கள் வழிபட்டது - ஏகாதசி. மறுதினம் - தேவர்கள் பரமனை பாராயணம் செய்தது - துவாதசி. அதற்கு மறுநாள் சிவன் ஏழரை நாழி தாண்டவமாடியது - பிரதோஷம்.
- தத்துவம் - சிவபிரசாதத்தை இகழக் கூடாது. இகழந்தால் செல்வமிழந்து அவதியுற நேரிடும்.

# 22.இந்துக்களின் சடங்கு முறைகள்

- இந்துக்கள் பிறப்பு, இறப்பு, வாழும் காலங்களில் செய்யும் சடங்குகள் - கிரியைகள் எனப்படும். இதனை தொல்காப்பியர் "கரணம்" என்பார். இவை சோடச சம்ஸ்காரங்கள் எனப்படும்.
- **1.பும்ஸவனம்** - பெண் கருவுற்ற 3 மாதத்தில் கர்ப்பதற்கு இடையூறு நேராவண்ணம் இறைவனை பிரார்த்தித்தல்
- **2.சீமந்தம்** - கருகொண்ட 4 (அ) 8 மாதத்தில் குழந்தையை இரட்சிக்க தேவர்களை வேண்டுவது(வளைகாப்பிடுதல்)
- **3.ஜாதகர்மம்** - குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய கிரியை, சாமர்த்தியம், ஆயுள், செல்வம் பெற வேண்டுதல்.
- **4.நாமகரணம்** - பெயர்சூட்டுதல்
- **5.புண்ணியாவாசனம்** - புண்ணியாவாசனம் செய்த புனித நீரை மாவிலையின் மூலம் வீடு, மனிதர் மீது தெளித்தல்.
- **6.நிஷ்க்ராமனம்** - குழந்தை பிறந்த 4 மாதங்கழித்து முதன்முதலில் வெளியே கொண்டு செல்லுதல்
- **7.அன்னபிரசன்னம்** - 6 வது மாதம் சோறு, தயிர், நெய், தேன் கலந்து கடவுளை பிரார்த்தித்து குழந்தைகளுக்கு கொடுத்தல்
- **8.வித்யாரம்பம்** - குழந்தைகளுக்கு 5 வயதானதும் முதன்முதலில் கல்வி பயில வைப்பது. கணபதி, குரு, சரஸ்வதியை வணங்கி "அரி அரி" என எழுதச்சொல்லுவது.
- **9.கர்ணபூஷணம்** - தோடு முதலிய தொங்க செய்யவும், தங்கம் வழியே பாயும் நீர் குழந்தைக்கு ஆரோக்கியம் தருவதாலும், தீய விஷயங்களை துளை வழியே வெளியே செலுத்துவதுமே இதன் நோக்கமாகும்.
- **10.சௌளம் (குடுமி வைத்தல்)** - குழந்தைக்கு முதன்முதலாக மொட்டையடித்தல்.
- **11.உபநயனம்** - 7 வயதானதும் காயத்ரி மந்திரம் உபதேசித்து பூணூல் அணிதல்.
- உபநயனம் செய்வோருக்கு தீட்சை செய்ய வேண்டும். பிறப்பு 2 என இந்துமதம் கூறுகிறது. அது பூணூல் அணிதல் முன் மற்றும் அணிந்த பின்.
- **12.குருகுலவாசம்** - மாணவர், குருவிற்கு பணிவிடை செய்து கல்வி கற்றல்.
- **13.திருமணம்** - குருகுலம் முடிந்தபின் குருவின் அனுமதி பெற்று நடைபெறுவது.
- **14.குறிக்கோள் பகர்தல் (சங்கற்பம்)** - காலம், இடம், செயலை விளக்கி பிரார்த்திக்க வேண்டும்.
- **15.புனிதநீர் சுத்தி (புண்ணியாவாசனம்)** - உடம்பு, உள்ளம் சுத்தி செய்யும்பொருட்டு புனித நீரை மணமக்களுக்கு தெளித்தல்.

- புனித நீர் உருவாக்கும் முறை - அரிசியை கீழே இட்டு தர்ப்பை இட்டு மும்மூர்த்திகளை தியானித்து ஐந்தெழுத்துகளை எழுதி, பால், தயிர், நெய், கோமியம், கோசனம் என்ற 5 பொருட்களை சேர்த்து "பஞ்சகவ்யம்" ஆக்க வேண்டும்.
- **16.காப்பு கட்டுதல் (ரக்ஷாபந்தனம்)** - திருமணம் நடக்கையில் இடையூறு நேராவண்ணம் ஆண்களுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடக்கையிலும் விநாயகரை வணங்கி மஞ்சள் கட்டுதல்.
- **17.முளையிடுதல் (அங்குரார்ப்பணம்)** - உழவைச் சிறப்பிக்க சந்ததி விருத்தியின் பொருட்டு விவாக காலத்தில் செந்நெல், எள், வெண்கடுகு முதலிய தானியத்தை 12 மண்பாலிகைகளில் இட்டு வளர்த்தல்.
- **18.குடவழிபாடு (கும்பபூஜை)** - கும்பநீர் மூலம் கடவுளை வழிபட இது அவசியம்.
- **19.எரியோம்பல் (அக்கினிகாரியம்)** - தூய மணலில் உமி விரித்து ஆல், அரசு, மா, முதலிய குச்சிகளை வைத்து தீ மூட்டி நெல், நெய், பொரி, தானியமிட்டு தீயினை இறைவனாக வணங்குதல்.
- **20.வடிவ வழிபாடு (மூர்த்தி பூஜை)** - இறைவனை ஒரு வடிவத்தில் எழுந்தருளச் செய்து வணங்குதல்.
- **21.தானம்** - திருமண நாளன்று ஏழை, எளியோருக்கு பொருள் கொடுத்தல்
- **22.கைபிடித்துகொடுத்தல்** - மணமகளின் தந்தை, மணமகனுக்கு பெண்ணை கைபிடித்து கொடுத்தல்.
- **23.திருமங்கலநாண் பூட்டுதல்** - ஆச்சாரியர் கொடுக்க மணமகளுக்கு மணமகன் சகோதரியின் உதவியோடு தாலி கட்டுதல்.
- **24.சஷ்டியப்த பூர்த்தி** - 60 ஆண்டுகள் பூர்த்தியானதும் "ருத்ராட்ச" மாங்கல்யம் கட்டி சிற்றின்ப வாழ்வு முடித்து ஆன்மீக வாழ்க்கை வாழ பெற்றோரிடத்து நன்றி செலுத்தும் பொருட்டு பிள்ளைகள் செய்வது
- **25.சதாபிஷேகம் (80 - 84 வயது)** - 80க்கு மேலுள்ளோர் 1000 பிறை கண்டோர் எனப்படுவர்.
- **26. அபரக்கிரியை** - ஒருவர் இறந்தபின் அவர் ஆத்மா சாந்தியடைய பிள்ளைகள் செய்யும் கிரியை.
- **27.அந்தியேட்டி** - இறந்தது முதல் தீயிலிடும் வரை செய்யும் கிரியைகள்.
- **28.அத்தி சஞ்சயனம்** - எலும்பு (அ) சாம்பலை சேகரித்து புனித நீரில் கரைத்தல்.
- **29.சிரார்த்தம்** - இறந்த நாளன்றி, அமாவாசை, வருடப்பிறப்பு நாட்களில் இறந்தோருக்கு தீர்த்தமுள்ள இடம் (அ) கோவிலில் செய்யும் கிரியை.

# 23.சிவனடியார்கள்

- "தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே" - ஔவையார்.

## மாணிக்க வாசகர்

- பிறப்பு -- பாண்டியநாட்டு திருவாதவூர் (மதுரை)
- பாண்டியநாட்டு மந்திரியாக பணியாற்றியவர்.
- திருப்பெருந்துறையில் திருவருள் பெற்றார்.
- திருவாதவூரார், மகிழ்செழுமறை முனிவர் எனப்படுபவர் - மாணிக்கவாசகர்.
- இவர் பாடிய நூல் - திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை, கீர்த்தி திருவகவல்.
- சிறப்பு - சிதம்பர பௌத்தர்களை வாதில் வென்றது, ஊமைப்பெண்ணை பேச வைத்தது.
- திருவாசகம் 600 பாடல்களும், திருச்சிற்றம்பலக்கோவை 400 பாடல்களும் உடையது.
- இவர் இறைவனுடன் ஐக்கியமான நாள் - ஆனி மாத மக நட்சத்திரம்.
- இவர் பொருட்டு இறைவன் நரிகளை பரிகளாக மாற்றினார், வைகையை பெருக்கோடச் செய்து, பிட்டுக்கு மண்சுமந்து பிரம்படி பெற்றார். ஏடு கொண்டு மாணிக்கவாசகர் மொழிந்தவற்றை எழுதினார்.
- ‘‘வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி’’ என பாடினார்
- "பாவை பாடிய வாயால் கோவை பாடுக" என மாணிக்கவாசகரை திருச்சிற்றம்பலக் கோவை பாடச் செய்தவர் - தில்லையம்பல பெருமான்.

## திருஞானசம்பந்தர்

- தந்தையார் - சீர்காழி சிவபாத இருதயர்
- வேறுபெயர்கள் - திராவிடசிசு, ஆளுடையபிள்ளை, தோணிபுரத்தோன்றல், இன்தமிழ்ஏசுநாதர்
- 3 வயதில் அம்மையிடம் ஞானப்பால் உண்டார்.
- தேவாரம் அருளினார். வாழ்ந்த காலம் கி.பி.7-ம் நூற்றாண்டின் முற்பகுதி.
- திருக்கோலக்காவில் பொற்றாளம், திருவரத்துறையில் முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றார்.
- திருப்பாச்சிலாச்சிராமத்துறையில் மழவன் மகளின் முயலக நோய் தீர்த்தார்.
- பட்டீஸ்வரத்தில் முத்துப்பந்தல் பெற்றார்.
- திருவாவடுதுறையில் பொற்கிழி பெற்று, திருமருகலில் பாம்பு கடித்த வணிகர் மகளை உயிர்பெறச் செய்தார்.
- திருவீழிமழலையில் படிக்காசு பெற்று, திருமறைக்காட்டில்(வேதாரண்யத்தில்) கதவை அடைக்கப் பதிகம் பாடினார்.

- கூன்பாண்டியனின்(நின்றசீர்நெடுமாறனின்) வெப்பு நோய் தீர்த்து, சமணரை வென்று, அக்னியில் தம் ஏடு வேகாமல் செய்து, வைகையில் நீரை எதிர்த்தோடும்படியும் செய்தார்.
- திருக்கொள்ளம்புதூரில் பதிகம் பாடி ஓடத்தை ஓடச் செய்தார்.
- திருவோத்தூரில் ஆண்பனையை பெண்பனையாக மாற்றினார்.
- மயிலையில் எலும்பை பெண்ணாக மாற்றினார்.
- திருநல்லூரில் பெருமணத்தில் மூலநட்சத்திரத்தில் முக்தி அடைந்தார்.
- திருக்கடைக்காப்பு என்பது –ஞான சம்பந்தர் எழுதிய முதல் **3** திருமுறைகள்
- "வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்" - திருஞானசம்பந்தர்.

## திருநாவுக்கரசர் (அப்பர்)

- பிறப்பு – திருமுனைப்பாடி , வேளாளர் மரபு
- புகழனார் மற்றும் மாதினியாரின் மகன்.
- வாழ்ந்த காலம் கி.பி.7-ம் நூற்றாண்டின் முற்பகுதி.
- இவரது தமக்கையார் - திலகவதியார். இயற்பெயர் - மருள்நீக்கியார்.
- இவரது வேறுபெயர்கள் - தாண்டகச்சதுரர், அப்பர், வாகீசர்.
- ஆரம்பத்தில் தருமசேனர் என்ற பெயரில் சமணசமயத்தில் இருந்தார்.
- சூலை நோயால் பாதிக்கப்பட்டு திருவதிகையில் தமக்கையிடம் வந்து சேர்ந்து, தேவாரம் பாடி நோய் நீங்கி சைவர் ஆனார்.
- இதனால் கோபமுற்ற மகேந்திரவர்ம பல்லவன் நீற்றறையில் வைத்தும், விஷம் கொடுத்தும், யானையை ஏவியும், கல்லில் பிணைத்து கடலில் தள்ளியும் இறையருளால் தப்பினார்.
- அப்பூதியார் மகனை பாம்பு தீண்ட, அதன் விஷம் நீக்கினார்.
- திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்ட பதிகம் பாடி கதவை திறந்தார்.
- திருவையாற்றில் கயிலைக் காட்சியை கண்டு மகிழ்ச்சி அடைந்தார்.
- திருப்புகலூரில் சித்திரை மாத சதய நட்சத்திர நாளில் முக்தி அடைந்தார்.
- என் கடன் பணி செய்து கிடப்பதே – இவரது பொன்மொழி
- உடம்பே கோயில் என்றார்
- திருப்பாட்டு என்பது – திருநாவுக்கரசர் எழுதிய **4, 5, 6** திருமுறைகள்

## சுந்தரர் (நம்பியாரூரர்)

- பிறப்பு – திருக்கயிலைதிருநாவலூரில்
- சடையனார், இசைஞானியாரின் மகன்.

- திருநெறித் தலைவர், நம்பியாரூரர், ஆளுடையநம்பி, தம்பிரான்தோழர் என அழைக்கப்படுபவர் - சுந்தரர்.
- வாழ்ந்த காலம் கி.பி.9-ம் நூற்றாண்டு.
- திருமணநாளில் அடிமை ஓலையைக் காட்டி, இறைவன் இவரை ஆட்கொண்டான்.
- திருவதிகையில் இறைவன் திருவடி சூடப் பெற்றார்.
- ஆரூரில் பரவையாரை மணந்து, திருத்தொண்டர்தொகை பாடினார்.
- "பெரியபுராணத்தின் மூலம்" என அழைக்கப்படுவது - திருத்தொண்டர்தொகை
- குண்டையூரில் நெல்மலை பெற்றார்.
- திருப்புகலூரில் செங்கல்லை பொன்னாக்கினார்.
- திருமுதுகுன்றில்(விருத்தாசலம்) இறைவனளித்த பொன்னை ஆற்றிலிட்டார்.
- பின் அதனை திருவாரூரில் குளத்தில் எடுத்தார்.
- திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்தார். அதனால் ஏற்பட்ட பரவையாரின் ஊடலை இறைவனைத் தூது விடுத்து போக்கினார்.
- திருவையாறில் காவிரி நீர் வழிவிட பதிகம் பாடினார்.
- அவினாசியில் முதலை வாயில் அகப்பட்ட பிள்ளையை மீட்டார்.
- ஆடி மாத சுவாதி நாளில் வெள்ளையானையில் அமர்ந்து சேரனுடன் கயிலை சென்றார்.
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என மூவர் அருளிய திருப்பதிகங்களாகிய தேவாரத்தின் வேறுபெயர் - மூவர் தமிழ்.
- திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் எனும் மூவருடன் மாணிக்கவாசகரும் சேர்த்து அருளிய தேவார திருவாசகங்களின் தொகுப்பின் வேறுபெயர் -தமிழ்மறைகள்.
- சைவ சமயகுரவர்கள்(சைவ சமய ஆசிரியர்கள்) என அழைக்கப்படுபவர்கள் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்.
- சைவ சமய குரவர்கள் அருளிய தமிழ்மறைகளுக்கு ஆறுமுகநாவலர் இட்ட பெயர் - தமிழ் வேதம்.
- "பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா" என பாடினார்
- "தில்லை வாழ்ந்தனர் அடியார்க்கடியேன்" என சிவன் அடியெடுத்து கொடுக்க சுந்தரர், திருத்தொண்டர்தொகை பாடினார்.

## சைவாச்சாரியார்கள்

- முக்கியமானவர்கள் - நீலகண்டச்சாரியார், கச்சியப்பசிவாச்சாரியார், வாகீசமுனிவர்.
- நீலகண்டாச்சாரியாரின் வேறுபெயர் - ஸ்ரீகண்டாச்சாரியார்.
- நீலகண்டாச்சாரியாரின் கொள்கை - சிவாத்துவிதம்.

- "மதாச்சாரியார்கள்" என அழைக்கப்படுபவர்கள் - சங்கரர், இராமனுஜர், மத்துவர். இவர்கள் மூவர் ஆக்கிய மதங்களின் மறுபெயர் - திரிமதம்(மும்மதம்).
- கந்தபுராணத்தை இயற்றியவர் - கச்சியப்ப சிவாச்சாரியார் (11ம் நூற்றாண்டு இறுதி)
- வாகீச முனிவர் தங்கியிருந்த மடத்தின் பெயர் - சதுரானன பண்டிதர் மடம் (திருவொற்றியூர்), 12ம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தார்.
- "ஞானாமிர்தம் " என்ற மருத்துவ நூலை எழுதியவர் - வாகீச முனிவர்.

## பிற அடியார்கள்

- சிதம்பர நடராஜருக்கு தொண்டுசெய்யும் அந்தணர் - தில்லைவாழ்அந்தணர்கள்(3,000 பேர்கள்)
- திருநீலகண்டர் - பரத்தைபால் காமுற்றுபின் மனைவியால் அறிவுபெற்று இறைவனை நாடினார்.
- இயற்பகை நாயனார் - இறைவன் விபூதி தரித்த காமுகனாக வந்து இவர் மனைவியை கேட்க, இவர் கொடுக்க இறைவன் ஆட்கொண்டான்.
- இளையான்குடி மாறர் - இம்மை செல்வமனைத்தும் அடியார்க்கு அருளினார்.
- மெய்ப்பொருள் நாயனார் - சிவனடியார் போன்று வேடமணிந்த முத்திநாதன் கத்தியால் குத்திய போதும் தொழுது நின்றார்.
- சிறுதொண்டர் - மகனை அமுதாக இறைவனுக்கு அளித்தார்.
- கண்ணப்பர் - இறைவனுக்காக இரு கண்களையும் வழங்கினார்.
- சேரமான்பெருமாள் -- யானைப்பவனியின் போது வெண்ணிறமேனியாய் உவர் சுமந்த வண்ணானை இறைவனாக வணங்கினார்.
- புகழ்சோழர் - சிவகாமி ஆண்டவரது பூக்கூடையை யானைப் பறித்து எறிந்தது.
- மானக்கஞ்சாளர் - மணப்பெண்ணான தன் மகளின் கூந்தலை அறுத்து அடியார்க்கு கொடுத்தார்.
- திருநாளைப்போவார் - திருபுன்கூரில் இறைவனருளால் நந்தி விலக தரிசனம் செய்து, சிதம்பரத்தில் தில்லைக்கூத்தன் தரிசனம் காண வந்து இறைஜோதியில் கலந்தார்.
- அப்பூதியடிகள் - திருநாவுக்கரசர் பெயரில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தும், மகனுக்கு பாம்பு தீண்டியும் குருவுக்கு அமுதூட்டினார்.
- ஏயர்கோல்கலிராமர் - சுந்தரர் இறைவனை தூதுவிடுத்ததை அறிந்து வெகுண்டு, தனது சூலை நோயைத் தீர்க்க சுந்தரர் வருவதையறிந்து, தன் வயிற்றை தானே கிழித்துக் கொண்டார்.

## பெண் அடியார்கள்

- மங்கையர்கரசி, காரைக்காலம்மை, இசைஞானியார்,
- "மங்கையர்க்கு தனி அரசி எங்கள் தெய்வம்" --- சேக்கிழார்.
- சம்பந்தர் சமண சமயத்தை வென்று சைவ சமயத்தை நிலைநாட்ட உறுதுணையாக இருந்தார்

## காரைக்காலம்மையார்

- வணிக கணவன் அனுப்பிய இரு மாங்கனியில் ஒன்றை அடியார்க்கு அளித்து, மற்றொன்றை கணவனுக்களித்தார்.
- மற்றொன்றையும் கணவன் கேட்க, இறையருளால் பெற்றார்.
- பின் எற்புடம்பு(பேய் வடிவம்) பெற்றார்.
- கயிலைக்கு தலையால் நடந்து சென்றார்.
- இசைஞானியார் - சுந்தரரை மகனாகப் பெற்றவர்.
- திலகவதியார் - பெற்றோர் மனம் பேசி கலிப்பகையார் இறக்க, தானும் உயிர்விடத் துணிந்தார்.
- சந்தனாச்சாரியார்கள் 4 பேர். மெய்கண்டார், அருணந்திசிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் ஆகியோர் புறச்சந்தானாசாரியார்கள்.
- நந்தி, சனத்குமாரர், பரஞ்சோதி, சத்யஞானதரிசினி ஆகியோர் கயிலையில் வாழ்வதினால் அகச்சந்தனாச்சாரியார்கள் எனப்படுவர்.
- சமயக்குரவர்கள் தோத்திர வடிவில் கூறியவற்றை சந்தனாச்சாரியர்கள் சாத்திர வடிவில் கூறினார்கள்.

## மெய்கண்டார்

- திருப்பெண்ணகடத்தில் அச்சுதகளப்பாளரின் மகன்.
- சிவஞானபோதத்தை பரஞ்சோதி இவருக்கு குழந்தைப் பருவத்திலேயே அருளினார்.
- ஐப்பசி சுவாதி நாளில் இறைவனடி சேர்ந்தார்.

## அருணந்தி சிவாச்சாரியார்

- திருத்துறையில் பிறந்தார்.
- சிறப்பு பெயர் - சகலமாபண்டிதர்.
- இவர் மெய்கண்டாரின் தந்தையின் குரு. பின் மெய்கண்டாரின் சீடராக மாறினார்.
- இவர் இயற்றியவை - சிவஞானசித்தியார், இருபாஇருபது
- திருத்துறையூரில் புரட்டாசி பூசத்தில் இறைவனடி சேர்ந்தார்.

## மறைஞானசம்பந்தர்

- திருப்பெண்ணகடத்தில் வசித்தார்.
- சிதம்பரத்தையடுத்த திருக்களாஞ்சேரியில் ஆவணி உத்திரத்தில் இறையடி சேர்ந்தார்.

## உமாபதி சிவம்

- தில்லைவாழ் அந்தணர்கள் 3000-ல் ஒருவர்.
- தில்லையில் ஏறாத கொடியை "கொடிக்கவி" பாடி ஏற்றினார்.
- கொற்றவன்குடியில் சித்திரை அஸ்த நாளில் இறையடி சேர்ந்தார்.

| எண் | அடியார்கள் | பிறந்த மாதம் | நட்சத்திரம் |
|---|---|---|---|
| 1 | திருநீலகண்டர் | தை | விசாகம் |
| 2 | இயற்பகையார் | மார்கழி | உத்திரம் |
| 3 | இளையான்குடி மாறர் | ஆவணி | மகம் |
| 4 | மெய்ப்பொருள்வேந்தர் | கார்த்திகை | உத்திரம் |
| 5 | விறன்மிண்டார் | சித்திரை | திருவாதிரை |
| 6 | அமர்நீதியார் | ஆனி | பூரம் |
| 7 | எறிபத்தர் | மாசி | அஸ்தம் |
| 8 | ஏநாதிநாதர் | புரட்டாசி | உத்திராடம் |
| 9 | கண்ணப்பர் | தை | மிருகசீரிஷம் |
| 10 | குங்கிலியக்கலயர் | ஆவணி | மூலம் |
| 11 | மானக்கஞ்சாறர் | மார்கழி | சுவாதி |
| 12 | அரிவாட்டாயர் | தை | திருவாதிரை |
| 13 | ஆனாயர் | கார்த்திகை | அஸ்தம் |
| 14 | மூர்த்தியார் | ஆடி | கார்த்திகை |
| 15 | முருகர் | வைகாசி | மூலம் |
| 16 | உருத்திரபசுபதியார் | புரட்டாசி | அஸ்வினி |
| 17 | திருநாளைப்போவார் | புரட்டாசி | ரோகிணி |
| 18 | திருக்குறிப்புத் தொண்டர் | சித்திரை | சுவாதி |
| 19 | சண்டேசுவரர் | தை | உத்திரம் |
| 20 | திருநாவுக்கரசர் | சித்திரை | சதயம் |
| 21 | குலச்சிறையார் | ஆவணி | அனுஷம் |
| 22 | பெருமிழலைக்குறும்பர் | ஆடி | சித்திரை |
| 23 | காரைக்கால் அம்மையார் | பங்குனி | சுவாதி |
| 24 | அப்பூதி அடிகள் | தை | சதயம் |
| 25 | திருநீலநக்கர் | வைகாசி | மூலம் |
| 26 | நமிநந்தியார் | வைகாசி | பூசம் |
| 27 | திருஞானசம்பந்தர் | வைகாசி | மூலம் |
| 28 | ஏயர்கோன்கலிராமர் | ஆனி | ரோகிணி |
| 29 | திருமூலர் | ஐப்பசி | அஸ்வினி |
| 30 | தண்டி அடிகள் | பங்குனி | சதயம் |
| 31 | மூர்க்கர் | கார்த்திகை | மூலம் |
| 32 | சோமாசிமாறர் | வைகாசி | ஆயில்யம் |
| 33 | சாக்கியர் | மார்கழி | பூராடம் |

| எண் | அடியார்கள் | பிறந்த மாதம் | நட்சத்திரம் |
|---|---|---|---|
| 34 | சிறப்புலியார் | கார்த்திகை | பூராடம் |
| 35 | சிறுதொண்டர் | சித்திரை | பரணி |
| 36 | சேரமான்பெருமாள் | ஆடி | சுவாதி |
| 37 | கணநாதர் | பங்குனி | திருவாதிரை |
| 38 | கூற்றுவர் | ஆடி | திருவாதிரை |
| 39 | புகழ்ச்சோழர் | ஆடி | கார்த்திகை |
| 40 | நரசிங்கமுனையரையர் | புரட்டாசி | சதயம் |
| 41 | அதிபத்தர் | ஆவணி | ஆயில்யம் |
| 42 | கலிக்கம்பர் | தை | ரேவதி |
| 43 | கலியர் | ஆடி | கேட்டை |
| 44 | சத்தியார் | ஐப்பசி | மூலம் |
| 45 | ஐயடிகள் காடவர்கோன் | ஐப்பசி | மூலம் |
| 46 | கணம்புல்லர் | கார்த்திகை | கார்த்திகை |
| 47 | காரியார் | மாசி | பூராடம் |
| 48 | நெடுமாறர் | ஐப்பசி | பரணி |
| 49 | வாயிலார் | மார்கழி | ரேவதி |
| 50 | முனையடுவார் | பங்குனி | பூசம் |
| 51 | கழற்சிங்கர் | வைகாசி | பரணி |
| 52 | இடங்கழியார் | ஐப்பசி | கார்த்திகை |
| 53 | செருத்துணையார் | ஆவணி | பூசம் |
| 54 | புகழ்த்துணையார் | ஆவணி | ஆயில்யம் |
| 55 | கோட்புலியார் | ஆடி | கேட்டை |
| 56 | பூசலார் | ஐப்பசி | அனுஷம் |
| 57 | மங்கையர்க்கரசியார் | சித்திரை | ரோகிணி |
| 58 | நேசர் | பங்குனி | ரோகிணி |
| 59 | கோச்செங்கட்சோழர் | மாசி | சதயம் |
| 60 | திருநீலகண்டயாழ்ப்பாணர் | வைகாசி | மூலம் |
| 61 | சடையனார் | மார்கழி | திருவாதிரை |
| 62 | இசைஞானியார் | சித்திரை | சித்திரை |
| 63 | சுந்தரமூர்த்தி சுவாமிகள் | ஆடி | சுவாதி |

**அரதத்தர்**

- 9-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் சோணாட்டில், கஞ்சனூரில் வைணவக்குடியில் பிறந்தார். இளம்பருவத்திலேயே சிவபிரான் அருள்பெற்றார்.
- இவர் எழுதிய நூல்கள் - சுருதிசூக்திமாலை(151 சுலோகங்கள்), பஞ்சரத்தினமாலிகை ஆகிய வடமொழி நூல்கள்.

# 24.முருகனடியார்கள்

**நக்கீரர்**

- மதுரை கணக்காயனார் மகன்.
- இவர் இயற்றிய நூல் - திருமுருகாற்றுப்படை கடைச்சங்க பத்துப்பாட்டின் முதல் நூல்.
- முருகனருளால் பூதத்தின் இடர் நீங்கி இன்புற்றார்.

**அருணகிரிநாதர்**

- இயற்றியவை - கந்தரலங்காரம், கந்தர் அந்தாதி, கந்தரனுபூதி, திருவகுப்பு ஆகியன.
- சிவன், சக்தி, விஷ்ணு அனைவரையும் முருகனோடு இணைத்துப் புகழந்தார்.
- அருணை கோபுரத்தில் தங்கியிருந்து 36 ஆயிரமாவது திருப்புகழ் பாடும்போது முருகன் காட்சியளித்தாராம்.
- மயில் விருத்தம், வேல்விருத்தம் பாடினார்.
- "வாக்கிற்கு அருணகிரி" எனப் பெயர் பெற்றார்.

**குமரகுருபரர்**

- பாண்டிய நாட்டில் ஸ்ரீவைகுண்டமருகில் கைலாசபுரத்தில் கவிராயர் - சிவகாமசுந்தரியின் மகன்.
- முதல் 5 ஆண்டுகளாக ஊமையாக இருந்தார்.
- செந்திலாண்டவரால் பேச்சுதிறன் பெற்று "கந்தர் கலி வெண்பா" பாடினார்.
- இவர் இயற்றியவை - கயிலை கலம்பகம், மீனாட்சிப்பிள்ளைத் தமிழ், மதுரைக் கலம்பகம், முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழ் ஆகியன.
- இவரது ஞானசாரியர் - தரும ஆதீன மாசிலாமணி தேசிக சுவாமிகள்.
- இவர் காசியில் மடங்கட்டி தொண்டாற்றினார்.
- காசியில் வைகாசி கிருஷ்ணபட்ச திதியில் இறைவனடி சேர்ந்தார்.

**சைவம்**

- மூலகாமங்கள் 28. உபாகங்கள் 20 போன்ற வரையறைகள் 11ம் நூற்றாண்டின் தொடக்கத்திற்கு பின்பே தமிழகத்தில் பரவின.
- திரிலோனசிவாசாரியர் இயற்றிய வடநூல் - சித்தாந்தசாராவளி.
- இதில் வடநூல் ஆகமங்களின் நாற்பாத பொருள்களை சுருக்கமாகவும், வரிசைப்படுத்தியும் கூறுகிறது. அதன் கிரியாபாதத்தின் இறுதியில் சைவாசாரியார் வரலாறு கூறப்படுகிறது

- சித்தாந்த சாராவளியின் உரையாசிரியராகிய அநந்த சிவாச்சாரியார் "இங்கு பூர்வகதை" என்ற வரலாற்று குறிப்பை தருகின்றார்.
- அதன்படி கோதாவரி கரையில் மந்திரகாளி என்ற பட்டணம் உண்டு. அங்கு மந்திர காளீசுவரைச் சூழ ஆமர்த்தகம், புட்பகிரி, கோளகி, இரணபத்ரம் என நான்கு சைவ மடங்கள் இருந்தன.
- அங்கிருந்த சைவாச்சாரியரை இராஜேந்திரசோழன் காஞ்சி மற்றும் சோழ மண்டலத்திலும் ஸ்தாபித்தான்.
- மன்னன் முதலாம் இராஜேந்திரன் "கங்கைகொண்ட சோழன்" என புகழப்பட்டான்.
- இந்நிகழ்ச்சி நடந்தது கி.பி.23 ஆகும். இவற்றை கல்வெட்டு சான்றுகளோடு கலந்து நோக்குபவர் - டி.வி. சதாசிவபண்டாரத்தார்.
- நிகண்டு நூல்களாகிய திவாகரம், பிங்கலத்தை என்பவை வேதம், அங்கம், புராணம், உபபுராணம், ஸ்மிருதி என்பனவற்றின் பெயர்களையும், தொகைகளையும் கூறுவன. ஆனால் ஆகமங்களை பற்றி இவ்வாறு எடுத்து கூறுவதில்லை.
- ஸ்ரீகண்டாச்சாரியார் என அழைக்கப்படுபவர் - நீலகண்ட ஆசாரியார்.
- நீலகண்டச்சாரியார் - பிரஹ்மசூத்திரங்களுக்கு முறைப்படி பாஷ்யம் செய்துள்ளார்.
- சிவசாரூபம் பெற்ற பதமுத்தர்களில் அவதாரம் எனக் கூறப்படும் யோகாசாரியார்களுள் முக்கியமானவர் - சுவேதாசாரியார்.
- சுவேதாசாரியார், நீலகண்டசாரியாரின் ஆசிரியர் என்பது ஸ்ரீகண்டாஷியத்தால் விளங்குகிறது.
- வருணபத்ததி, சைவாகம ஞானம் பெற்ற தலையாய சைவாசாரியார்கள் -- 1)ஸ்ரீதுருவாசர் 2)பைங்கலாச்சாரியார் 3)உத்திரச்சோதி 4)சத்தியசோதி 5)ஸ்ரீகண்டர்(நீலகண்டர்) 6)ஸ்ரீவிஷ்ணுகண்டர் 7)வித்யாகண்டர் 8)ராமகண்டர்
- இவர்கள் அனைவரையும் "தேசிகோத்தமர்கள்" என அழைக்கின்றனர்.
- வாகீச முனிவர் 12ம் நூற்றாண்டின் இறுதியில் திருவொற்றியூரில் சதுரான பண்டிதர் மடத்தில் தங்கியிருந்து, சோமசம்பு பத்ததி, ஆளுடையநம்பி ஸ்ரீபுராணம் முதலியவற்றை பொதுமக்களுக்கு சொற்பொழிவாற்றினார்.
- வாகீசமுனிவர் எழுதிய நூல் - ஞானமிருதம் (அகவற்பாக்களால் ஆனது)

## சிவநெறிக்கும் ஆழ்வார் நெறிக்கும் உள்ள வேறுபாடு

- 1)சிவநெறியில் முதற்கடவுளுக்கு பிறப்பு இல்லை. அவதாரம் கூறப்படுவதில்லை. ஆனால் ஆழ்வார் நெறியில் கடவுளுக்கு 10 அவதாரங்கள் கூறப்படுகின்றன.
- 2)பரமுத்தி நிலையில் உயிர்க்கோ,கடவுளுக்கோ உடம்பு உண்டு என்ற கொள்கை சைவத்தில் கிடையாது. வைணவத்தில் பரமுத்தி நிலையில் கடவுளுக்கும் உயிர்களுக்கும் திவ்விய சரீரம் உள்ளது.

# வைணவம்

## 25.வைணவத்தின் கருத்துகள் மற்றும் பிரிவுகள்

- விஷ்ணுவே கடவுள். வடகலை வேதசாத்திரத்திற்கும், தென்கலை ஆழ்வார் பாடல்களுக்கும் முக்கியம் தருவார்கள்.
- வடகலையை தோற்றுவித்தவர் -- வேதவியாசர்
- தென்கலையை தோற்றுவித்தவர் - மணவாளமாமுனிகள்.
- இதிலுள்ள குறிகள் ஐந்து. இதனை பஞ்சசம்ஸ்காரம் என்பர். அவை தாபம், புண்ட்ரம், நாமம், மந்திரம், அர்ச்சனம்.
- வைணவம் கூறும் முக்கிய பொருட்கள் ஐந்து. அவை பஞ்சகம் எனப்படும்.

| | | |
|---|---|---|
| அடைபவன் | ஜீவன் | ஸ்வஸ்ரூபம் |
| அடையப்படுவது | விஷ்ணு | பரஸ்வரூபம் |
| பயன் | முடிவிலா இன்பம் | புருஷார்த்த சொரூபம் |
| உபாயம் | பக்தி | உபாய சொரூபம் |
| இடையூறு | சாஸ்திர விரோத செயல்கள் | விரோதி சொரூபம் |

- முப்பொருள் உண்மைகள் (அ) தத்துவத்திரயம் -- ஈஸ்வரன், சித்து, அசித்து.
- உயிர்கள் நான்கு பிரிவு. அணு, ஞானம், ஆனந்தம், அமலம்.
- மந்திரங்கள் -- அஷ்டாட்சரி, ஷடாட்சரி, துவாதசாட்ஷரி.
- உட்சமயங்கள் - ஆறு. அவை 1)யாதவம் 2)மாயாதவம் 3)ஹிரண்யகர்ப்பம் 4)இராமனுஜீயம் 5)பாஸ்கரம் 6)தத்துவம்.
- விஷ்ணு -- எங்கும் நிறைந்தவர். இரட்சகர். படைத்து, காத்து, நிற்பவர். பஞ்சாட்சரத்தில் இறைவன் அரூபியாய் ஞானவடிவினராய் ஆதிமூலபொருளாய் எங்கும் நிறைந்துள்ளார்.
- தத்துவங்கள் 24. விஷ்ணு 25-ம் தத்துவமாக பரவாசுதேவ சொரூபமாக இருக்கின்றார்.
- இவரது வியூகாவதாரங்கள் -- வாஸுதேவர், சங்கர்ஷணர், பிரத்யும்னர், அநிருத்தர் என நான்காகும்.
- இவரின் தசாவதாரங்கள் -- மச்ச, கூர்ம, வராக, நரசிங்க, வாமன, பரசுராம, தசரதராம, பலராம, கிருஷ்ண, கல்கி.
- ஆதிசேஷன் மீது யோகநித்திரை செய்கிறார். இவர் வைகுண்டத்தில் பரவாஸுதேவராய் இருந்து உந்தி தாமரையிலிருந்து பிரம்மாவை உண்டாக்கி உலகை படைத்து, பிரம்மாவிடமிருந்து ருத்ரனை உண்டாக்கி சம்ஹாரம் செய்கின்றார்.
- விஷ்ணு தாமே காத்தல் தொழிலைச் செய்கின்றார்.

# 26.நாராயணர் மற்றும் அவரது அவதாரங்கள்

- பஞ்சசன்யம் என்ற சங்கை முழக்கி உலகை படைக்கிறார்.
- சுதர்சன சக்கரம் -- அழித்தல் தொழில்.
- அபயகரம் -- காத்தலைக் குறிக்கும்.
- கதாயுதம் -- உலக சுக துக்கங்களை தடுக்கும் தன்மை.
- நந்தகம் எனும் வாள் -- அஞ்ஞானம் அழிக்க
- சாரங்கம் என்ற வில் -- அடியார்க்கு நேரும் தீவினை தடுக்க.
- கௌஸ்துப மணி -- அந்தராத்மாவை உணர்த்துகிறது
- வத்சம் என்ற மரு -- பிராதனத்தை உணர்த்தும்
- பாலாழியில் படுத்திருப்பது -- தூய உள்ளத்திலே அமர்தலைக் குறிக்கும்.
- ஆதிசேஷனின் மேல் சயனம் -- (அனந்தன் - முடிவில்லாதவன்) உலக முடிவில் சேஷனாகிய தாமோகுணம் கொண்டு உலக அழிவை குறிக்கும்.
- தாங்காமல் தாங்கி சுகம் பெறும் நிலை -- விஷ்ணுவின் சயனம்
- லட்சுமியை அருகில் வைத்து யோகம் நிஷ்டை கொண்டது - ஐம்புலன் அடக்கத்தை குறிக்கும்.

## தசாவதாரங்கள்

- தசாவதாரங்கள் எடுக்க காரணம் - நல்லோரை ரட்சித்து, துஷ்டர்களை அழிக்க.

### மச்சவதாரம் (மீன்)

- ஹயக்கீரீவன் வேதத்தை கடலில் ஒளித்ததால்.

### கூர்ம அவதாரம் (ஆமை)

- மந்திர மலையை மத்தாக, வாசுகி பாம்பை கயிறாக கொண்டு பாற்கடலை கடையும் போது மந்திரமலை சாய, ஆமை அவதாரமெடுத்து அதனை நிலைநிறுத்தினார்.

### வராகவதாரம் (பன்றி)

- ஹிரண்யாசூரன்(ஹிரண்யாக்ஷன்), பூமியை சுருட்டி கடலில் ஒளித்ததால் அதை மீட்க.

### நரசிங்கவதாரம்

- ஹிரண்யகசிபுவின் அகங்காரத்தால் மகன் "பிரகலாதன்" கடவுள் எங்குமிருப்பார் என கூற, தூணை அசுரன் உதைக்க அதிலிருந்து நரசிம்மர் வெளிப்பட்டு அவனை கொன்றார்.

### வாமன அவதாரம் (குள்ளன்)

- மகாபலி அசுரன் தேவர்களுக்கு துன்பம் தர வாமன அவதாரமெடுத்து அவன் தலையில் கால் வைத்து பூமியில் அமிழ்த்தினார்.

## பரசுராம அவதாரம்

- தந்தையை கொன்ற கார்த்தவீரியனைக் கொன்றார்.

## தசரத ராம அவதாரம்

- குருவாக்கிய பரிபாலனம் -- கொடிய செயல்களை செய்த தடாகை அரக்கியை குரு விஸ்வாமித்ரர் சொன்னதால் கொன்றார்.
- தந்தை வாக்கிய பரிபாலனம் - தசரதன் கைகேயிடம் கொடுத்த வரத்தை நிறைவேற்ற வனவாசம் செய்தார்.
- சகோதர அன்பு -- வனவாசம் செல்வது கண்டு பரதன், இராமனை நாடாள அழைக்க, மறுத்து தேற்றியனுப்பதிலும், குகன், சுக்ரீவன், வீபீஷணன் ஆகியோரிடமும் சகோதர அன்பைக் காட்டினான்.
- ஏகபத்தினி விரதம் - சூர்ப்பனகை வலுவில் வந்து மணம்புரிய வேண்டியதை மறுத்தது.
- வாலி வதம் -- சுக்ரீவன் மனைவியை, வாலி தனதாக்கி கொண்டதால் , சுக்ரீவன் இராமனை அணுகியதால், வாலியை கொன்றார்.

## பலராம அவதாரம்

- இவர் ஆதிசேஷனின் அம்சம். கண்ணனுக்கு முன் பிறந்தவர். கண்ணனின் லீலையில் உடனிருந்தவர்.

## கிருஷ்ணாவதாரம்

- வாசுதேவர் - தேவகிக்கு மகனாக பிறப்பு -- ஆயர்பாடி நந்தகோபன்-யசோதா புத்திரனாக வளர்ப்பு.
- கோகுல நந்தன் - கோகுலத்தில் 16 வயது வரை வளர்ந்தான்.
- பூதனை பாலுடன், விஷமும் ஊட்ட அவளைக் கொன்றான்.
- வெண்ணெய் திருடியது - பால் போன்ற சுத்தமும், வெண்ணெய் மிருதுவான அடியார்க்கு அருளுவான்
- கோபியர் சேலைகளை கவர்ந்தது - மான அபிமானங்களை கைவிட்டு இறைவனை அடைவோருக்கு முக்தியருளப்படுவதைக் குறிக்கிறது.
- குழலூதி மயக்கியது - ஜீவாத்மா, பரமாத்மாவை அடைவதைக் குறிக்கிறது.
- துவராகா நந்தன் :- துவாரகைக்கு அரசனானதும், சிசுபாலன், கம்சன் ஆகியோரை அழித்தது. துரியோதனனிடம் பாண்டவர்க்காக தூது சென்றது.
- பார்த்தசாரதி -- அர்ஜூனனுக்கு தேரோட்டியாகி கீதையை உபதேசித்தது.

**கல்கியவதாரம்** -- கலியின் முடிவில் தர்மத்தை நிலைநாட்ட எடுக்க இருப்பது.

# 27.ஆழ்வார்கள்

| ஆழ்வார்கள் | அம்சம் | பாசுரங்கள் | இயற்றிய நூல்கள் |
|---|---|---|---|
| பொய்கையாழ்வார் | பஞ்சசன்யம் | 100 | முதல் திருவந்தாதி |
| பூதத்தாழ்வார் | கதை | 100 | 2-ம் திருவந்தாதி |
| பேயாழ்வார் | நந்தகம் (வாள்) | 100 | 3-ம் திருவந்தாதி |
| திருமழிசையாழ்வார் | சக்கரம் | 216 | திருச்சந்தவிருத்தம் 120 நான்முகன்திருவந்தாதி 96 |
| மதுரகவியாழ்வார் | வைநதேயர் | 216 | கண்ணின் நுண் சிறுத்தாம்பு |
| நம்மாழ்வார் | நாம்சம் | 1296 | திருவாய்மொழி |
| குலசேகரர் | கௌஸ்துபம் | 105 | பெருமாள்திருவாய்மொழி |
| பெரியாழ்வார் | கருடன் | 473 | திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி. |
| ஆண்டாள் | பூமி | 173 | திருப்பாவை 30, திருமொழி 140 |
| தொண்டரடி பொடியாழ்வார் | வைஜயந்தி (எ) வனமாலை | 55 | திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருமறை திருமலை திருப்புகழ்ச்சி |
| திருப்பாணர் | வத்சம் | 10 | அமலான் ஆதிபிரான் |
| திருமங்கை | சாரங்கம் (வில்) | 1361 | ஆறு அங்கங்கள் |

- திவ்விய பிரபந்தத்தை அருளியதால் – திராவிடாச்சாரியர்கள் எனப்படுவர்
- இருந்தமிழ் புலவர்கள் , ஆதிபக்தர்கள் என்ற பெயராலும் அழைக்கப்படுவர்
- முற்காலத்து ஆழ்வார்கள் – பொய்கையாழ்வார் , பேய் ஆழ்வார் , திருமழிசை ஆழ்வார்
- இடைக்காலத்து ஆழ்வார்கள் – நம்மாழ்வார் , மதுரகவியாழ்வார் , குலசேகர ஆழ்வார் , பட்டர்பிரான் என்ற பெரியாழ்வார் , கோதை நாச்சியார் என்ற ஆண்டாள்
- பிற்காலத்து ஆழ்வார்கள் – தொண்டரடிப் பொடியாழ்வார் , திருப்பாணாழ்வார், கலியன் என்ற திருமங்கை ஆழ்வார்
- முதலாழ்வார்கள் எனப்படுவோர் - பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்.

## பொய்கையாழ்வார்

- பிறப்பிடம் - கச்சி (காஞ்சி) நகரிலுள்ள திருவெ:.கா
- அவதரித்த மலர் - தாமரை
- நட்சத்திரம் - ஐப்பசி திருவோணம்.
- அம்சம் - பஞ்சசன்யம் (சங்கு)
- இஷ்டதெய்வம் - திருப்பதி ஏழுமலையான்
- அருளிய திருநாமம் - "வேங்கடவர் திருமலையை விரும்புமவன் வாழியே"
- அருளியது – முதல் திருவந்தாதி
- "நயவேன் பிறர்பொருளை, நன்னேன் கீழாரோடு" எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்

## பூதத்தாழ்வார்

- பிறப்பு - தொண்டைநாட்டிலுள்ள திருக்கடல்மல்லை(மாமல்லபுரம்)
- அவதரித்த மலர் - குருக்கத்தி மலர்
- நட்சத்திரம் - ஐப்பசி அவிட்டம்.
- அம்சம் - கௌமோதகி எனும் கதாயுதம்.
- இஷ்டதெய்வம் - ஸ்ரீரங்கம் திருவரங்கர்.
- அருளிய திருநாமம் - "பொன்புரையும் திருவரங்கப் புகழுரைத்தான் வாழியே"
- அருளியது – 2 –ம் திருவந்தாதி
- '' அன்பே தகழியா , ஆர்வமே நெய்யாக'' எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்

## பேயாழ்வார்

- பிறப்பு - மயிலாப்பூர்
- அவதரித்த மலர் - செவ்வல்லிப்பூ
- நட்சத்திரம் - ஐப்பசி சதயம்.
- அம்சம் - நந்தகம் (வாள்)
- இவரின் வேறுபெயர் - மஹதாஹ்வயர் (திருமழிசையாழ்வாரை திருத்தியதால்)
- இஷ்டதெய்வம் - திருக்கோவிலூர் இடைகழியில் உள்ள திருமால்
- அருளிய திருநாமம் - "நேமிசங்கண் வடிவழகை நெஞ்சில் வைப்போன் வாழியே"
- "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" - பேயாழ்வார்
- அருளியது – 3 –ம் திருவந்தாதி
- ''அது நன்று இது தீது என்று ஐயப்படாதே'' எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்
- முதல் மூன்று ஆழ்வார்கள் சந்தித்த இடம் - திருக்கோவிலூர் இடைகழி

## திருமழிசையாழ்வார்(புகழ்மழிசை ஐயன்)

- பிறப்பு –திருமழிசை
- அம்சம் – திருவாழி (சக்கர அம்சம்)
- சிவவாக்கியர் என்ற பெயருடன் சைவ சமயத்தில் இருந்தார். பேயாழ்வார் மூலம் வைணவத்திற்கு மாறினார்
- அருளியது – நான்முகன் திருவந்தாதி , திருச்சந்த விருத்தம்
- எல்லாம் திருமால் என எண்ணுகிறார்
- ''தன்னுள்ளே திரைத்தெழும் தரங்கவெண் தடம்போல்'' எனத் தொடங்கும் பாடலைப் பாடியுள்ளார்
- பிறப்பின்போது உடல் ஊனமாக பிறந்தவர் - திருமழிசையாழ்வார்.
- இஷ்டதெய்வம் - திருவெ:காவிலும் , திருக்குடந்தையிலும் உள்ள பெருமாள்.

## நம்மாழ்வார்(அருள்மாறன்)

- பிறப்பு –18 திருப்பதிகளையுடைய பாண்டிநாட்டில் தாமிரபரணி கரையில் ஆழ்வார்திருநகரியில் (திருக்குருகூர்)
- நட்சத்திரம் - வைகாசி விசாகம்
- அம்சம் - திருக்குறுங்குடி நம்பியின் அம்சமும், ஸ்ரீகௌஸ்துபம் எனும் இரத்தினாம்சமும், ஸேனை முதலியோரது அம்சம்
- சிறப்புப் பெயர்கள் – மாறன் , சடகோபன் , பராங்குசன் , வகுளபூஷணன்
- இவர் பாடிய பாசுரங்களை நான்காவது ஆயிரம் என்பர்
- இவர் பாடிய மொத்த பாசுரங்கள் – **1296**
- உலகப் பற்றினை விட்டு இறைவனை சரண் அடைந்தால் அனைத்தும் பெறுவது எளியது என்றார்
- "வீடுமின் முற்றவும் , வீடு செய்து உம்முயிர் என்ற பாடலைப் பாடியுள்ளார்
- சடம் எனும் வாயுவை ஓட்டி ஒழித்ததினால் "சடகோபன்" என பெயர் பெற்றார்.
- இவர் 16 வயது வரை மௌனமாய் இருந்தார். ஸேனை முதலியார் இவருக்கு திருவிலச்சினை செய்து, உபதேசம் செய்து வைஷ்ணவராக்கினார்.
- இவர் எழுதிய நூல்கள் - திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி. இந்நான்கும் "நான்கு வேதங்கள்" எனப்படுகின்றன.
- "பொய்யில்பாடல்" என அழைக்கப்படுவது - திருவாய்மொழி.
- "மாறி மாறி பல பிறப்பும் பிறந்து" - திருவாய்மொழி
- இவர் அவதரிக்கும்போதே இறைவனிடம் பேரன்பு கொண்டதால் இவர் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியை "ஸஹஜபக்தி" எனக் கூறுவர்.
- இஷ்டதெய்வம் - கிருஷ்ணன்.
- இவர் "கிருஷ்ணத்ருஷ்ணாதத்வம்" என்று கொண்டாடப்பட்டவர்.
- "ஆழ்வார்களுக்கெல்லாம் தலைவர்" எனப் போற்றப்படுபவர் - நம்மாழ்வார்.

## குலசேகராழ்வார்(சேரலர்கோன்)

- தந்தையார் - சேரநாட்டில் கோழிக்கோடு(திருவஞ்சிக்களம்) எனும் இராஜதானியில் அரசுபுரிந்த திரடவிருதன்.
- பிறப்பு - மாசி புனர்பூச நட்சத்திரம்
- அம்சம் - ஸ்ரீகௌஸ்துப மணி
- இயற்பெயர் - கௌஸ்துபாமசரர், சேரலர்கோன்.
- சிறப்பு பெயர்கள் - கொல்லிகாவலன், கூடல்நாயகன், கூடலர்கோன், கோழிக்கோன்குலசேகரன்.
- இவர் வடமொழியில் பாடியது - முகுந்தமாலை.

- இவர் இராமபிரானை வழிபட்டவர்.
- இவர் பாடிய பிரபந்தம் - பெருமாள்திருமொழி.
- **பெருமாள் திருமொழியில் கூறப்படும் பொருள்கள் :**

| | |
|---|---|
| முதல் மூன்று திருமொழிகள் | ஸ்ரீரங்கம் கோயிலைப் பற்றியது |
| 4-ம் திருமொழி | திருவேங்கடத்தைப் பற்றியது |
| 5-ம் திருமொழி | விற்றுவக்கோட்டையைப் பற்றியது |
| 6-ம் திருமொழி | ஆய்ச்சியர் ஊடலைப் பற்றியது |
| 7-ம் திருமொழி | தேவகியின் புலம்பலைப் பற்றியது |
| 8-ம் திருமொழி | நாமரின் தாலாட்டைப் பற்றியது |
| 9-ம் திருமொழி | தசரதன் புலம்பலைப் பற்றியது |
| 10-ம் திருமொழி | இராமாயணக் கதைச் சுருக்கம் |

## பெரியாழ்வார் (துய்யபட்டநாதன் (அ) பட்டர்பிரான்)

- பிறப்பிடம் - ஸ்ரீவில்லிபுத்தூர்
- குலம் - வேயர்குலம்
- நட்சத்திரம் - ஆனி சுவாதி
- அம்சம் - கருடாம்சம்
- இயற்பெயர் - விஷ்ணுசித்தர்.
- வடபெருங்கோயிலுடையானுக்கு திருமாலை கட்டி சமர்பித்து வந்தார்.
- இவர் அருளியது - திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி.
- நாராயணர் இவர் கனவில் கூறியபடி, மதுரை பாண்டியன் அவைக்களம் சார்ந்து திருமாலே பரம்பொருள் என நிறுவிக் கிழியை இறுத்தார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் முதல் பாடல் இவருடையது
- வரலாற்று குறிப்புகள் உள்ளடங்கிய பாடல்களை பாடியவர் - பெரியாழ்வார்

## தொண்டரடிபொடியாழ்வார் (அன்பர்தாளிதூளி)

- பிறப்பு - சோழநாட்டில் கும்பகோணம் திருமண்டங்குடி
- நட்சத்திரம் - மார்கழி கேட்டை
- அம்சம் - திருமாலது வைஜயந்தி எனும் வனமாலை
- குலம் - பிராமணர்
- ஸ்ரீரங்கம் பெருமாளை வழிபட்டார்.
- இயற்பெயர் - விப்ரநாராயணர்.
- இயற்றிய நூல்கள் - திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, திருமறைதிருமலை திருப்புகழ்ச்சி
- ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கையை வலியுறுத்தினார்.

## திருப்பாணாழ்வார் (நற்பாணன்)

- பிறப்பு - சோழநாட்டு உறையூர்
- நட்சத்திரம் - கார்த்திகை மாத ரோகிணி
- அம்சம் - ஸ்ரீவத்ஸத்தின்(திருமறு) அம்சம்
- அந்தணனது நெற்பயிர்கதிரில் பிறந்ததால் முதலாழ்வார்களை போல "அயோனிஜர்" எனப்பட்டார்.
- இவர் ஒரு கானஞானி. இவரை ஸோகஸாரங்கமாமுனிகள் தோளில் ஏற்றி ஸ்ரீரங்கம் பெருமாள் முன்விட்டார்.
- இவர் "அமலான் ஆதிப்பிரான்" எனும் பாசுரம் பாடி இறைவனோடு ஐக்கியமானார்.
- இவர் பாடல் பெரும்பாலும் அரங்கநாதனைப் பற்றியதாகும்
- இறைவன் முன் ஏற்றத்தாழ்வு இல்லை என்பது இவரின் கோட்பாடு

## திருமங்கையாழ்வார்(நற்கலியன்)

- பிறந்த இடம் - சோழநாட்டு திருவாழிதிருநகரி எனும் திவ்விய தேசத்துக்கு அருகேயுள்ள திருக்குறையலூர்
- பிறபெயர்கள் - நீலன், பரகாலன், கலியன், மங்கைவேந்தன், ஆலிநாடான், நாலுகவிபெருமாள்.
- பிறப்பு - சேனைத்தலைவன் மகனாய் கார்த்திகை மாத கார்த்திகை நட்சத்திரம்
- அம்சம் -திருச்சாரங்கத்தின்(வில்) அம்சம்.
- மனைவி - குமுதவல்லி
- வயலாலி மணவாளனிடம் மந்திர உபதேசம் பெற்றவர்.
- பெரியபெருமாள்(ஸ்ரீரங்கம்) சந்நிதியில் திருப்பணி செய்தவர்.
- இவர் எழுதியவை - பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய, பெரிய திருமடல், என்ற ஆறு பிரபந்தங்கள்(இவை "மாறன் பணித்த தமிழ் மறைக்கு அங்கங்கள்" என கூறப்படுகின்றன)
- திருவரங்க கோவிலின் சுற்றுசுவர் கட்டியவர் . சைவ நெறியிலும் ஈடுபாடு கொண்டவர்
- மன்னுமலை அரையன் பொற்பாவை என்ற சிவன் பாடலைப் பாடியுள்ளார்

## ஆண்டாள்

- இயற்பெயர் - சுரும்பார் குழல் கோதை.
- சிறப்புப் பெயர்கள் – கோதை , சூடிக்கொடுத்த நாச்சியார். பிறப்பு – திருவில்லிப்புத்தூர்
- பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
- பாடியது – நாச்சியார் திருமொழி , திருப்பாவை
- ‘அஞ்சுகுடிக்கு ஒரு சந்ததி" எனக் கொண்டாடப்படுபவர் - ஆண்டாள்.

## மதுரகவியாழ்வார்

- பிறப்பு - பாண்டிய நாடு திருநெல்வேலி, ஆழ்வார்திருநகரருகே திருக்கோளூர்
- நட்சத்திரம் - சித்திரை மாத சித்திரை
- அம்சம் - கணநாதரான குமுதரது அம்சம்
- சூரியோதத்திற்கு அருணோதயம் போன்று நம்மாழ்வார் அவதாரத்திற்கு முன் மதுரகவியாழ்வார் பிறந்தார்.
- பாடிய பிரபந்தம் - "கண்ணின் நுண் சிறுத்தாம்பு" (நம்மாழ்வார் பற்றி பாடியது)

## நாதமுனிகள்

- நம்மாழ்வாரால் அருளப்பட்டவர்.
- விசிஷ்டாத்வைதம் அழியும்போது அதனை நன்கு பரப்பினார்.
- நாலாயிர திவ்விய பிரபந்தப் பாடல்களை தொகுத்தவர்.
- இவரின் பேரனான ஆளவந்தார் பரப்பிய சித்தாந்தத்தின் பெயர் - எம்பெருமானார் தர்சனம்.

## எம்பெருமானார்

- இயற்பெயர் - திருவனந்தாழ்வான்.
- பிறப்பு - ஸ்ரீபெரும்புதூரில் சித்திரை மாத திருவாதிரையில் பிறந்தார்.
- பெற்றோர் - ஆஸூரிகேசவபெருமாள் - பூமிபிராட்டி
- "பஞ்சாயுதங்களின் அவதாரம்" என திருவரங்கத்தமுதனாரால் அழைக்கப்பட்டவர் - எம்பெருமானார்
- பஞ்சாயுதங்களாவன : சுதர்சனம், நந்தகம், கதை, சாரங்கம், பாஞ்சசன்யம்.
- விஷ்வக்சேனருடைய அவதாரம், திரி தண்டம் செங்கோலின் அவதாரம் என வேதாந்ததேசிகனாரால் அழைக்கப்பட்டவர் - எம்பெருமானார்.
- தொண்டனூரில் ஜைனர்களுடன் வாதம் செய்தார் எனக் கூறும் நூல் - குருபரம்பராப்பிரபாவம்.
- பன்னிரு ஆழ்வார்களின் வைபவங்களை விரிவாக "குருபரம்பராப்பிரபாவம்" முதலிய நூல்களில் காணலாம்.
- பெருமாளை எப்போதும் நினைந்து வாழும் 12 ஆழ்வார்களும் "நித்தியஸூரிகள்" என்று திவ்வியஸூரிய சரிதம், குருபரம்பராப்பிரபாவம் முதலிய நூல்கள் கூறுகின்றன.
- புராணங்களைத் தழுவி நிற்கும் நூல்கள் - திவ்வியஸூரிய சரிதம், குருபரம்பராப்பிரபாவம்
- எம்பெருமானாரை திருவனந்தாழ்வான் அவதாரம் என உரைக்கும் சான்றுகள் - குருபரம்பராப்பிரபாவம், திவ்வியசூரியசரிதம்.
- நாலாயிர திவ்வியபிரபந்த நூலின் அனைத்து பாசுரங்களுக்கும் உரை எழுதியவர் - பெரியவாச்சான்பிள்ளை.

- நம்மாழ்வார் பாசுரங்களுக்குமட்டும் உரை எழுதியவர் - வடக்குதிருவீதிபிள்ளை
- மணவாளமாமுனிகளாக அவதாரம் செய்தவர் - எம்பெருமானார்
- திருவனந்தாழ்வான், முதலில் எம்பெருமானாராய் அவதரித்து பின்பு மணவாளமாமுனிகளாய் அவதாரம் செய்தார் என "வரவரமுனிசதகம்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளவர் - எரும்பியப்பர்.
- நம்மாழ்வார் அருளியவை "நான்கு வேதங்கள்" என்றும், திருமங்கையாழ்வார் அருளியவை "ஆறு அங்கங்கள்" என்றும், பிற ஆழ்வார்கள் அருளியவை "உபாங்கங்கள்" (உதவிபுரியும் நூல்கள்) என்றும் அழைக்கப்படுகின்றன.
- தேசிகன் எழுதியது "ஸ்ரீமத்ரஹஸ்யத்ரஸாரம்". இதன் வியாக்யானம்(விளக்கம்) "ஸாராஸ்வாதிநீ"
- இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் போன்றவை வேதக் கருத்துக்களை தெளிவாக தெரிவிக்க வந்தமையால் அவை " வேதோப ப்ரும்மஹணங்கள்" எனப்படும்.
- நாதமுனிகள் முதல் எம்பெருமானார் நடுவாய், மணவாளமாமுனிகள் ஈறாக உள்ள குருபரம்பரையை சேர்ந்த மஹான்கள் - பூர்வாச்சாரியார்கள் எனப்படுவர்.

**வைணவத் தலங்கள்**

- வடநாடு – நேபாளம் , துவாரகை
- மலைநாடு – திருவனந்தபுரம்
- நடுநாடு – திருக்கோவிலூர் , திருவேங்கடம்
- தொண்டைநாடு – காஞ்சிபுரம்

## 28.வைணவத்தின் சிறப்புகள்


- ஒன்றை உள்ளபடி உணருவதற்கு காரணம் எதுவோ அதன் பெயர் - பிராமணம்.
- பிராமணத்தின் வகைகள் - 3, அவை 1)பிரத்தியட்சம் 2)அனுமானம் 3)சப்தம்
- திருமாலை தெய்வமாகக் கொண்ட மதம் - வைணவமதம்
- வைணவத்தின் வகைகள் - 2, அவை 1)வடகலை, 2)தென்கலை
- வடகலையினர் வேதசாத்திரங்களுக்கும், தென்கலையினர் நாலாயிர திவ்ய பிரபந்தங்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்பர்.
- ஊறு, ஓசை, ஒளி, சுவை, நாற்றம் ஆகிய குணங்களையும், அதற்கடிப்படையான இந்திரியங்களையும் பற்றி அறிய உதவும் சாதனம் - பிரத்தியட்சம்
- ஓரிடத்தில் காணப்படும் இருபொருட்களும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாமல் இருக்கும் நிலைகண்டு வேறோரிடத்தில் காணப்படாத ஒன்றை கண்டதென ஊகிப்பது - அனுமானம் எனப்படும்.
- இந்திரியங்களாலும், அனுமானத்தாலும் உள்ளபடி உணரமுடியாத உயரிய பொருளை உணருவதற்கான காரணமும், அட்சரங்களின் கூட்டமும் - சப்தம் எனப்படும்.

- சப்த பிராமணங்களுள் சிறந்ததாக கருதப்படுவது - சுருதி
- சுருதியின்(வேதம்) வகைகள் - 4, (ரிக், யஜூர்,சாம,அதர்வணம்)
- ஸ்மிருதிகளை இயற்றியவர்கள் - மனு முதலான மஹான்கள்.
- விஷ்ணுபுராணத்தை இயற்றியவர் - பராசரர்
- ஸ்ரீபாகவதபுராணத்தை இயற்றியவர் - வியாஸர்
- வேதங்களின் கருத்துக்களை தெளிவாக தெரிவிக்கும் நூல்கள் - உபபிரமாணங்கள் (இதிகாசங்கள், புராணங்கள், ஸ்மிருதிகள் முதலியன)
- வேதத்தின் இரு பெரும் பிரிவுகள் - கர்மகாண்டம், பிரம்ம காண்டம்.
- பரமபுருஷனின் முகமலர்ச்சிக்காக செய்யும் வேள்வி, தானம், தவம், முதலியவற்றையும் அவற்றைச் செய்யும் முறைகளைப் பற்றி கூறும் வேதப்பகுதி - கர்மகாண்டம்.
- பரமபுருஷனின் திருமேனி, குணங்கள், அவனை அடைய உதவும் உபாயங்கள் ஆகியவற்றை விளக்குவது - பிரம்மகாண்டம்.
- கர்மகாண்டத்திற்கான வழிநூல்கள் - மனு ஸ்மிருதி
- பிரம்மகாண்டத்திற்கான வழிநூல்கள் - இதிகாசங்கள், விஷ்ணுபுராணம் முதலிய புராணங்கள்
- ஸ்மிருதிகள் - ஆசாரங்களைப் பற்றி விளக்குகிறது.
- இதிகாசம், புராணங்கள் - பரமபுருஷன், பக்தி, வீடுபேறு முதலியவற்றை விளக்குகிறது.
- புராணங்கள் அனைத்தையும் முதலில் படைத்தவன் - பிரமன்
- பிரமனின் குணங்கள் - 3, அவை சத்துவம், ராசசம், தாமசம்.
- பிரமனானவன் தாமசகுணம் மேலிட்டிருந்தபோது படைத்தவை -அக்கினி, சிவபுராணங்கள்
- பிரமனானவன் ராசசகுணம் மேலிட்டிருந்தபோது படைத்தவை - பிரமபுராணம்
- பிரமனானவன் சத்துவகுணம் மேலிட்டிருந்தபோது படைத்தவை - நாராயணபுராணம்
- நாராயணனின் திருவவதாரமாக கருதப்படுபவர் - வியாஸர்
- இதிகாசங்களுள் சிறந்தது - இராமாயணம்
- ஒரு பொருளுக்குரிய தன்மையை அதில் அறியாது வேறுபொருளின் தன்மையை அறிதல் (முத்துச்சிப்பி போல்) - அந்யாதாஜ்ஞாநமாம்
- வெள்ளியின் தன்மையை அறிதல் - அந்யதாஜ்ஞாநமாம்
- ஒரு பொருளை வேறொரு பொருளாக அறிதல் - விபரீதாஸ்ஞாநமாம்
- ஒரு பொருளை துணைப்புருஷனாக அறிதல் - விபரீதஜ்ஞாநமாம்
- வியாஸர் செய்த சாஸ்திரங்களில் சிறந்தது - பிரம்மசூத்திரங்கள்
- பராசரரின் மகன் - வியாசர்
- பஞ்சராத்திரம் என்னும் சிறந்த சாத்திரத்தைப் படைத்தவர் - நாராயணர்.

- வாயு பகவானுடைய அவதாரமாகவும், ருத்ராம்சம் பொருந்தியவராகவும் கருதப்படுபவர் - சிறிய திருவடி என அழைக்கப்படும் அனுமன் (சொல்லின்செல்வன்)
- திருவனந்தாழ்வானின் பூரண அவதாரமாயும், பஞ்சாயுதங்களின் அம்சம் (சக்தியாவேசம்) உள்ளவராகவும் கருதப்படுபவர் - எம்பெருமானார்.
- விஷ்ணு என்னும் உயர்ந்த தெய்வத்தை வேதங்களினாலேயே அறிய முடியும் என உரைத்தவர் - வேத வியாசர்.
- "எல்லா வேதங்களினாலும் அறியப்பெறும் பொருள் நானே" என உரைத்தவர் - ஸ்ரீபார்த்தசாரதி (நூல் - பகவத்கீதை)
- எவன் ஒரு உண்மையை தாம் உள்ளபடி உணர்ந்து பிறரும் அதனை உள்ளபடி உணர, உய்வு பெற நூலின் மூலமாக வெளியிடுகிறானோ அவன் - **ஆப்ததமன்** என அழைக்கப்படுகிறான்.
- "ஸஹோவாச வ்யாஸ: பாராசர்ய:" என வேதத்தினாலே புகழப்பெற்றவர் - வேதவியாசர்
- கிருத யுகத்தில் இருந்த முக்திமார்க்க வகை - ஞான மார்க்கம் (திரேதா யுகத்தில் இம்மார்க்கம் சிறிது மாறுதல் அடைந்தது. துவாபர யுகத்தில் அழிவுற்றது)
- துவாபர யுகம் அழிவுற்றபோது பராசரருக்கும், சத்தியவதிக்கும் மகனாக பிறந்தவர் - வியாசர்
- "ஜபாஷ்யம்" எனும் ஒப்பற்ற நூலை அருளியவர் - எம்பெருமானார்.
- ஸ்ரீ வசன பூசன சூத்திரத்திற்கு வியாக்கியானம் அருளிச்செய்தவர் - மணவாளமாமுனிகள்.
- "நாராயணகதாம் இமாம்" எனத் தொடங்கும் பாடலைக் கொண்ட நூல் - மகாபாரதம்
- நம்பிள்ளை ஈடு, ஆசார்ய ஹிருதயம் எனும் நூல்களில் தலைவராக கருதப்படும் ஆழ்வார் - நம்மாழ்வார்.
- உண்மைப்பொருளை அன்புடன் சிந்திக்கும் சிந்தனை - பக்தி எனப்படும்.
- உண்மைப்பொருளை சரணடைதல் - பிரபத்தி
- பிரபஞ்சம் - காரியப்பொருள். திருமால் - காரணப்பொருள் -- முதல்வகை.
- பிரபஞ்சம் - உடைமைப்பொருள்: திருமால் - உடையவன்.
- மற்றொரு வகை - சாஸ்திர வகை.
- விஷ்ணுவை வேதங்களிலேயே அறிய முடியும் என கூறியவர் - வேதவியாசர்.
- சுருதியில் உள்ள பிரம்ம எனும் சொல் குறிப்பது - பெருமையுடைய பொருள். (இப்பெருமையானது 1)பொருளின் பெருமை (பிருகத்துவம்) 2)அப்பொருளுக்கான இயல்பின் பெருமை(குணப்பிருகத்துவம்) என இருவகைப்படும்.
- எல்லா பொருள்களிலும் உள்ளும் புறமும் நிரம்பி ஒன்றையும் விடாது இருந்து அப்பொருளுக்குரிய அவ்வாறான இருப்பே - பொருளின் பெருமை ஆகும்.

- எப்பொருள் தன் இயல்பால் எங்கும் பரந்திருக்கிறதோ அவ்வாறான இருப்பு - இயல்பின் பெருமை ஆகும்.
- பிரம்ம என்னும் சொல்லின் பொருள் விளக்கும் தெய்வம் - நாராயணர்
- "அந்தர்பஹிச்ச" என்னும் பொருள் விளக்குவது - பொருளின் பெருமைக்கு உரியவன் நாராயணன்
- "யஸ்ஸர்வஜ்ஞ" எனும் பொருள் விளக்குவது - இயல்பின் பெருமையை உடையவன் நாராயணன்.
- "ஹிரண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே, நஸத்நசாஸத் சிவஏவ கேவல:" , "ஏகோஹவை நாராயண ஆஸீத்" என்னும் 3 வாக்கியங்களில் முதல் வாக்கியம் - எல்லாம் அழிந்த காலத்தில் பிரமன் இருந்தான் என்று உணர்த்துகிறது. "சத்தும் அசித்தும் அக்காலத்தில் இல்லை. சிவன் மட்டுமே இருந்தான் என 2-ம் வாக்கியம் உணர்த்துகிறது. பிரமனும், சிவனும் இல்லாத அக்காலத்தில் நாராயணன் மட்டுமே இருந்தான் என 3-ம் வாக்கியம் உணர்த்துகிறது.
- நாராயணனை "ஹிரண்யகர்ப்ப" "சிவ" என கூறும் நூல் - விஷ்ணுசஹஸ்ரநாமம்.
- "ஒன்றுந்தேவும் உலகுமுயிரும் மற்றும் யாதுமில்லா அன்று நான்முகன் தன்னோடு தேவருலகோடு படைத்தான்" - நம்மாழ்வார்.
- "பிடித்தார் பிடித்தார் வீற்றிருந்து பெரியவானுள் நிலாவுவாரே" - நம்மாழ்வார்
- "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
  இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை இனியறிந்தேன்
  காரணன் நீ கற்றவை நீ கற்பவைநீ, நற்கிரிசை
  நாரணன்நீ நன்கறிந்தேன் நான்" --- திருமழிசையாழ்வார்.
- "ஏகோஹவை நாராயண ஆஸீத் நப்ரஹ்மா நேசாந" என்னும் மகோபநிஷத் வாக்கியம் உணர்த்தும் பொருள் - உலகம் உண்டாவதற்கு முன் நாராயணன் ஒருவனே இருந்தான். பிரமன் மற்றும் சிவன் இல்லை.
- "ஏகோஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேசாந" என்னும் மகோபநிஷத் வாக்கியம் உணர்த்தும் பொருள் - சிவன் பிரமன் விஷ்ணு மூவரும் ஒருவரே.
- பிரபஞ்சம் - தேவர், மனிதன், பசு பட்சிகள், புல்பூண்டுகள் எனும் நான்கு வகையில் அமைந்துள்ளது.
- மகாபாரதத்தில் கூறப்பட்ட சிவசஹஸ்ரநாமத்தில் நாரயணன் பெயர் கூறப்படவில்லை. விஷ்ணு சஹஸ்ரநாமத்தில் நாரயண நாமங்களாக ஹிரண்யகர்ப்ப, சிவ எனும் நாமங்கள் உள்ளன.
- புபுத்தை (அ) ஆகாங்க்ஷை என்பதன் பொருள் - உண்மை அறிய விருப்பம்
- ஆகாங்க்ஷையுற்றது - ஸாகங்க்ஷம்
- ஆகாங்க்ஷையற்றது - நிராகங்க்ஷம்.

- உத்தாலகர் என்ற அறிஞரின் மகன் பெயர் - சுவேதகேது.
- குடத்திற்கு மண் உபாதான காரணம், குயவன் நிமித்த காரணம், அதுபோல இப்பிரபஞ்சத்திற்கு பிரஹ்மம் நிமித்தகாரணாய் உபாதான காரணமாய் உள்ளது.
- ஆசாரியனிடத்தில் கேட்டப் பொருளை தனக்கு தெரிந்த பிரமாணங்களையும், யுக்திகளையும் கொண்டு நிச்சயித்து கொள்ளுதல் - மனனம்.
- ஒரு பொருளை எண்ணெயின் தாரை போன்று இடைவிடாது சிந்திக்கும் சிந்தனை - தியானம்
- உண்மைப்பொருளாய் இருப்பதால் "நிர்விசேஷம்" எனகூறப்படுவது - பிரம்ம மந்திரம்.
- காரண பொருளின் இருவகைகள் - உபதானம், அபாதானம்
- காரியம்(குடம்) உபாதான காரணமான நிலையை (எந்த மண் குடமானதோ அம்மண்ணான நிலையை) பெற்று அபாதானத்தோடு(எந்த மண் ரூபமாக ஆகவில்லையோ அம்மண்ணோடு) ஒன்றாய் பொருந்தியிருக்கும் நிலை - லயம் ஆகும்.
- தன்மாத்திரைகள் அகங்காரத்திற்கும், அகங்காரம் மகாதத்துவத்திலும், மகாதத்துவம் அவ்யக்தலிலும், அவ்யக்தம் அஷ்சரத்திலும், அஷ்சரம் தமசிலும், லயமடைகின்றன.
- முக்குணமும் சமமாய் இருக்கும் நிலை - அவ்யக்தம்.
- ஜீவஸ மூலத்தை தன்னிடம் கொண்டுள்ளதால் மிக லட்சணமாய் குணமுள்ளதாய் உள்ள நிலை - "அசஷரம்"
- நீரில் கரைந்த உப்பு போன்றும், சந்திரகாந்த கல்லிலுள்ள நீர் போன்றும், சூரியகாந்த கல்லிலுள்ள ஔசண்யம் போன்றும், இறைவன் ஒருவனே உணரக்கூடிய சூட்சும நிலை - தாமசம்
- ஸத்வம், ரஜ்ஜு, தமஸு ஆகிய முக்குணங்களில் உள்ள ஏற்றதாழ்வுகளை வைஷம்யம் என்பர்.
- வைஷம்ய நிலையிலுள்ளது - காரியபொருளாகும். எ.கா. மஹான், அகங்காரம், தன்மாத்திரைகள் போன்றன.




- பிரமத்திற்கு உண்மையில் குணம் கிடையாது. அது சுத்தமானது. அவித்தை எனும் தோஷத்தின் தொடர்பால் பிரஹ்மத்திற்கு குணங்கள் ஏற்படும் என "ய ஸர்வஞ்ஞ" "ப்ராஸ்ய சக்தி" எனும் ஸ்ருதிகள் கூறுகின்றன.
- பிரஹ்மத்திற்கு ஞானம், சக்தி, முதலிய எண்ணிறந்த கலியாண குணங்கள் உண்டு. அக்குணங்கள் சத்தியம் எனவும் வேதம் கூறுகின்றது.

- "தத் த்வம் அஸி" எனும் வாக்கியம் ஸமாநாதிகரண வாக்கியம் எனப்படுகிறது.
- பரமாத்மா நாரயணன். அவனுக்கு ஒத்தபொருளும் ஒவ்வாத பொருளும் குணங்களும் உண்மையில் உண்டு.
- இரு சொற்களும் முதல் வேற்றுமை உடையனவாக உள்ள வாக்கியம் "ஸமாநாதிகரண வாக்கியம்" எனப்படும்.
- இருசொற்களும் வேற்றுமையல்லாத ஒரு பொருளைத் தருபவனவாக இருந்தால் அவ்வாக்கியம் "வ்யதிகரண வாக்கியம்" எனப்படும்.
- ஜீவன், சிறப்பு பெறுவதற்கு காரணம் - தான் அனுபவித்தல், பிறருக்கு உபகரித்தல் போன்ற இறைவன் விரும்பதகுந்த அன்போடு கூடிய இந்த சேஷத்வ நிலையை - **தாஸ்யம்** என்பர்.
- ஜீவனுக்கே உரிய சிறப்பியல்பு - தாஸ்யம் எனப்படும்.
- ஒரு பொருள் ஒரு கணம் இருந்தால் அவ்வாறு இருப்பதை ஸத்தை என்பர். இரண்டு கணங்கள் இருந்தால் அந்தந்த காலத்தில் அப்பொருள் இருப்பதை "ஸத்திதி" என்பர்.
- முயற்சியை "ப்ரவ்ருத்தி" என்றும், முயற்சியின்மையை "நிவ்ருத்தி" என்றும் கூறுவர்.
- ஒருவருடைய ஸத்தை, ஸத்திதி, ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி ஆகியவை இறைவனுக்கு உரியனவாகவே காணப்படுகின்றமையால், ஜீவன் எம்பெருமானுக்கு "**பரதந்திரன்**" எனப்படுகின்றான். எம்பெருமான் "**ஸ்வதந்திரன்**" எனப்படுகிறான்.
- ஜீவன் இறைவனுக்கு உபயோகமாய் இருக்க உள்ள தகுதி - சேஷத்வம் என்றும், அவ்வாறு உபயோகமாய் இருப்பது - "பாரதந்திரியம்" எனப்படுகிறது.
- ஒருவன் தன் சேஷத்வ பாரதந்திரியங்களை அறியும்போது, அவ்வறிவு உடையனாயிருக்கையைப் பற்றி அவன் "வைஷ்ணவன்" என புகழப்படுகிறான்.
- சூரியன், அதன் ஒளி ஆகிய இரண்டும் "**தேஜோத்ரவ்யங்கள்**" எனப்படும்.
- ஜாநாதி - ஒரு பொருளை உள்ளபடி உணருதல்.
- இச்சதி - பொருளின் இனிமையை அறிந்து அதனை விரும்புதல்
- யதேத - அப்பொருளை அடைய முயலுதல்
- கரோதி - அதற்கு ஏற்ற வழியை கடைப்பிடித்தல்.
- அநுபவதி - முடிவில் அப்பொருளையடைந்து இன்பம் பெறுதல்
- "தத்வஸாரம்" என்ற நூலை எழுதியவர் - நடாதூர் அம்மான்.
- ஸ்வாதந்திரியம் - ஒன்றை தன் விருப்பத்திற்கேற்ப செய்யவும், செய்யாதிருக்கவும் வல்லமையாயிருத்தல்.
- சிகீர்ஷா - ஒன்றை செய்வதற்கு அனுகூலமான விருப்பம்.
- ப்ரயத்நம் - முயற்சி.

- "பரம புருஷனுடைய நிக்ரஹம் ஆதரிக்கத்தக்கது: நிக்ரஹகாரணம் வெறுக்கத்தக்கது:" ("நிக்ரஹம்போலே ப்ராப்யாந்தர்க்கம்") எனக் கூறியவர் - லோகசாரியன்.
- கடர் முதலிய ரிஷிகள் தங்கள் தவத்தால் கண்டு கூறிய வேதபகுதிகள் - காடகம், காலாபகம் எனப்படுகின்றன.
- நாரயணம் எனும் ரிஷியால் காணப்பெற்ற வேதப்பகுதி - புருஸூக்தம் எனப்படுகிறது. இது விஷ்ணுவை தேவதையாகக் கொண்டது.
- வேதத்தை பிரமாணமாக ஒப்புக்கொண்டவர் - வைதிகர் எனப்படுவர்.
- சப்த ஞானத்தினால் உண்டாகும் உணர்வு - சாப்தேபோதம். இது இரு க்ஷணங்கள் இருந்து மறையும். இதனால் ஸம்ஸ்காரம் உண்டாகும்.
- ஸம்ஸ்காரத்தினால் ஸ்ம்ருதி என்னும் ஞானம் உண்டாகும். இது இடைவிடாமல் தோன்றும் போது ஸந்ததி எனப்படும்.
- ஸம்ருதி ஸந்ததி பிரீதி ரூபமாயிருக்கும்போது - பக்தி எனப்படும்.
- வீடுபேறு பெறுவதற்கு சாதனமான பக்தி, சாண்டில்ய வித்தை, தஹரவித்தை, ஸத்வித்தை, உபகோசலவித்தை என 32 வகைப்படும்.
- 32-லும் பிரஹ்மம் விஷயப்பொருள் ஆகும்.
- பிரமத்திற்கு ஸயத்வம், ஞானத்வம், அநந்தத்வம், அமலத்துவம், ஆநந்த்வம் முதலிய குணங்கள் முக்கிய இயல்புகளாம்.

| | | | |
|---|---|---|---|
| ஸயத்வம் | விகாரமின்மை | ஞானத்வம் | தானே தோன்றுவது |
| அநந்த்வம் | எங்கும் நிறைந்திருத்தல் | அமலத்துவம் | தோஷமின்றி பிற தோஷம் போக்குதல் |
| ஆநந்த்வம் | அநுகூல ஞானத்வம் | மநோமயத்வம் | பரிசுத்த மனத்தால் அறியப்படும் பொருளாயிருத்தல் |

- இவையனைத்தும் "ஸ்வரூப நிரூபக தர்மங்கள்" எனக் கூறலாம்.
- சாண்டில்ய வித்தை(வில்வித்தை) எனும் பக்தியை "சாந்தோக்ய உபநிஷத்" உபதேசம் செய்கிறது.
- பக்தி நிலைகள் 1)பரபக்தி 2)பரஞானம் 3)பரமபக்தி
- பரமனை கூடியிருக்கும்போது தரிப்பும், கூடப்பெறாத போது தரியாமையும் உண்டாம்படியான நிலையிலுள்ள பக்தி - பரபக்தியாகும்.
- பெருமானைக் காணும்படியான நிலையிலுள்ள பக்தி - பரஞானம்
- பெருமான் கிட்டாவிடில் ஜீவனே அழியும் என கூறும்படி உள்ள பக்தி - பரமபக்தி (இதன் மூலம் கிடைப்பது வீடுபேறு)
- திவோதாஸனின் மகன் தைவோதாஸி என்ற ப்ரதர்த்தனன், அமரர்க்கும் அசுரர்க்கும் நடந்த போரில் அசுரரை அழித்தான்.
- பாவங்கள், 1)பூர்வாகம் (முன்பு செய்த பாவம்) 2)உத்தராகம் (பின்பு கவனமில்லாமல் செய்த பாவங்கள்) என இருவகைப்படும்.

- 1 பங்கு மண், 1 பங்கு தீ, 1 பங்கு நீர் எடுத்து, அதனை (½ பங்கு மண் ¼ பங்கு தீ ¼ நீர் ) , (½ பங்கு தீ, ¼ பங்கு மண்,¼ நீர்) (½ பங்கு நீர் ¼ பங்கு தீ ¼ மண்) என பிரித்து சேர்த்து கலத்தல் த்ரிவ்ருத்கரணம் எனப்படும். இது முறையே அண்டம், தேவன், மனிதன் உண்டாக்க தகுதியுடைய காரணப் பொருளாக அமைகிறது.
- நிலம், நீர், தீ, வாயு, விண் ஆகிய ஐந்தினையும் கலக்கும் கலவியை பஞ்சீகரணம் என்பர்.
- மஹத்தத்துவம், அஹங்கார தத்துவம், ஐம்பூதங்கள் ஆகிய ஏழு பொருள்களையும் கலக்கும் கலவியை ஸப்தீகரணம் என்பர்.
- தேவன், மனிதன் முதலியவர்களை படைப்பவர் -- தக்ஷர் முதலானோர்.
- தக்ஷர் முதலானோரை படைப்பது - பிரம்மன்
- அனைத்தையும் படைப்பவன் - நாராயணன்.
- "வருணாச்ரம தருமங்களால் ஆராதிக்கப்படுகின்றவன் நாரயணன்" - எனக் கூறியவர் -- குல்லூகப்பட்டர்.
- வ்ருத்ராசுரனை அழித்தவன், முப்பத்து முக்கோடி தேவதைகளை ஸஹாயமாய் கொண்டவன் - இந்திரன்.
- ஜனமேஜயருக்கு வைசம்பாயனர் கூறியது - மகாபாரதம்
- வைசம்பாயனருடன் உடனிருந்து கேட்டவர் - ரோமஹர்ஷனரின் குமாரர் உக்ரச்ரவஸ்
- நைமிசாரணியம் எனும் தலத்தில் யாகம் செய்த சௌனகர் முதலான ரிஷிகளுக்கு மகாபாரதத்தை உபதேசித்தவர் - உக்ரச்ரவஸ்
- மிக உயர்ந்த விஷயத்தில் தாழ்ந்தவன் ப்ரீதியுடன் செய்யும் ஸ்ம்ருதிஸந்ததியே - பக்தி.
- பரமபுருஷன் தானே செய்யும் சிருஷ்டி - சமட்டிசிருஷ்டி
- பரமபுருஷன், பிரமன் மூலமாய் செய்யும் சிருஷ்டி - வியட்டிசிருஷ்டி
- வ்யஷ்டிசிருஷ்டி செய்வதற்கு ஐம்பூதங்கள், கண் முதலான ஞானேந்திரியங்கள், வாக்கு முதலான கருமேந்திரியங்கள், மஹத்தத்துவம், அஹங்காரம், மனம் ஆகிய அனைத்தும் காரணமாக உள்ளன. இவை அபராப்ருக்ருதி எனப்படும்.
- ஜீவாத்மாக்களுக்கு பராப்ரக்ருதி என்று பெயர்.
- இவை இரண்டும் ஸவத்துக்கள். அதாவது இறைவனின் விருப்பத்திற்கிணங்க விநியோகம் செய்யத்தகுந்தவை.
- அதிஷ்டானம் - உண்மை : அத்யஸ்தம் - மாய தோற்றம் :
- நியத்ருத்வததை - தூண்டுபவனாயிருக்கும் தன்மை.
- நியாம்யத்தை - தூண்டப்படும் பொருளாயிருக்கும் தன்மை.
- "புராண ரத்தினம்" எனப்பட்ட நூல் - விஷ்ணு புராணம்.
- உண்மைப்பொருள்களில் மிகவும் சிறியது - பரமாணு.

- ஒன்று சேர்ந்த இரு பரமாணுக்கள் - த்வ்யணுகம் எனப்படும்
- ஒன்றாக கலந்த மூன்று பரமாணுக்கள் - த்ரஸரேணு எனப்படும்.
- இவ்வாறு வகைப்படுத்தி கூறியவர் - நையாயிகர்.
- எவன் பிறர் அறியாதவாறு எங்கும் பரந்துள்ளானோ அவன்பால் ஒரு பெருமை உண்டு. அப்பெருமை ஸ்வரூபப்ருஹத்வம் எனப்படும்.
- எவனுடைய எக்குணம் எங்கும் தொடர்புற்றிருக்கிறதோ அவனுடைய அக்குணத்திற்கு உள்ள பெருமையை குணப்ருஹத்வம் என்பர்.
- எவன் தன் சங்கல்பத்தினால் ஏனைய பொருள்களை (ஜீவன்) பெருமையுற்றதாக செய்கின்றானோ அவனுக்குள்ள அப்பெருமையை ப்ரும்ஹணத்வம் என்பர்.
- "தோஷம் சிறிதுமில்லாமல் ஞானம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் எனும் ஆறு குணங்களுள்ளவனுமான இறைவனை உணர்த்தும் பகவாந் எனும் சொல் ஏனைய பொருள்களில் அமுக்கியமாய் இருக்கிறது" - ஸ்ரீபராசரர்.
- இப்பிரபஞ்சத்தையே சரீரமாக கொண்ட ஆத்மா - புருஷோத்தமன்.
- மழைநீரை உணவாக கொள்ளும் பறவை - சாதகபட்சி.
- புலஸ்தியர், வசிஷ்டர் ஆகிய மஹான்களுடைய அருளால் மிக உயரிய உண்மைப் பொருளை உணர்ந்தவர் - ஸ்ரீ பராசரர்.
- பராசரரிடம் சந்தேகம் கேட்டறிந்தவர் - மைத்திரேயர்
- வால்மீகியிடம் "இக்ஷ்வாகு வம்சத்தில் திருஅவதாரம் செய்த ராமனே கலியாண குணங்கட்கு கடல்" எனக் கூறியவர் - **நாரதர்**
- "எம்பெருமான் திருநாமங்களை கூறுவது மிகச்சிறந்த தருமம். எனக்கு இஷ்டம்" எனக் கூறி விஷ்ணுசஹஸ்ரநாமத்தை தருமருக்கு உபதேசித்தவர் - பீஷ்மர்.
- தேஜஸ் - அனைவரையும் அழிப்பவனாயிருக்கும் தன்மை.
- ஜீவனுக்கும்(ஆத்மா), கை, கால் முதலிய உறுப்புகளோடு கூடிய "பிண்டத்திற்கும்" உள்ள தொடர்பு - சரீராத்மபாவம்.
- தூண்டும் பொருளையும், தூண்டப்படும் பொருளையும் ஒன்றாக கூறும் முறையில் "ஸர்வம் ப்ரஹ்ம்" எனும் வாக்கியம் அமைந்துள்ளது.
- "பிரபஞ்சம் சரீரம், பரஹ்மம் ஆத்மா" - எனக் கூறுவது உபநிஷத்துக்கள்.
- **பரமபுருஷனுக்குரிய செயல்களாவன :**

  1)படைத்தல்

  2)பிரவேசித்துப் படர்ந்திருத்தல்

  3)தரித்தல்

  4)தூண்டிநடத்தல்

  5)அது அது செய்யும் பணியை உவத்தல்

- இறைவனின் இயல்பு - இரு வகைப்படும். அவை 1)சொரூப நிலை(தன்னியல்பு) 2)தடத்தநிலை(தடத்தம் - அருகிலிருப்பது(அ)கரைக்கண் இருப்பது)
- சொரூப நிலையில் முதல்வன் சிவன் என்ற பெயரால் குறிக்கப்படுகிறான்.
- தடத்தம் என்பது தமிழில் "பொதுஇயல்பு" எனவும் குறிக்கப்படும்.
- பொதுவியல்பு நிலை மூன்று வகைப்படும். அவை 1)இலயநிலை 2)போகநிலை 3)அதிகாரநிலை.
- எல்லாப் பொருட்களிலும் கலந்து சக்திரூபமாய் இருக்கும் நிலை - இலயநிலை
- சக்திரூபமாய் நின்று உயிர்களை ஐந்தொழில்படுத்த முற்படும் நிலை - போகநிலை
- அவ்வத்தொழிலில் யாதெனும் ஒன்றன்பால்படுத்தி தொழிற்படுத்தும் நிலை - அதிகாரநிலை
- "ஸ்வேதரஸமஸ்தஸ்வது விலசஷணன்" -- தன்னையொழிந்த, சேதனாசேதனப் பொருட்கள் எல்லாவற்றிலும் வேறுபட்டவன்.
- "அந்தமிலாதி அம்பகவான்" எனக் கூறியது - ஆழ்வார்கள்.
- ஜீவன் அணுவாயிருப்பின், வீடுபேறு பெற்றிருந்தான் எனில், இறைவனுக்கு நிகரான ஞானப்பெருமை உடையவனாம். இது ஜீவனுக்கே உள்ள பெருமை.
- இன்பதுன்பங்களை கலந்து அனுபவிக்கும் ஜீவாத்மாக்கள் - "ஸம்ஸாரிசேதனர்கள்" என அழைக்கப்படுகின்றனர்.
- ஸ்வாந்திரன் - தன் விருப்பதிற்கேற்ப ஒன்றை செய்யவும், செய்யாதிருக்கவும் வல்லவன்.

## பஞ்சராத்திரம்

- எம்பெருமானால் இயற்றப்பட்டது. பல ஸம்ஹிதைகளை உடையது.
- "வேதஸமம்" என போற்றப்படுவது - பஞ்சராத்திரம்
- இதில் கூறப்படுவன :
  1) ஆலயம் அமைத்தல்
  2) பிம்பங்களை எழுந்தருளப் பண்ணுதல்
  3) பிரதிஷ்டை செய்தல்
  4) பூஜைகள் செய்தல்
  5) உத்ஸவங்கள்
  6) இதோடு உபநிஷத், சாஸ்திரங்களின் உண்மைகள்.

# சமயங்களின் வளர்ச்சிகள்

## 29.இந்தியப் பண்பாடு

| நூல்கள் | பொருள் /ஆசிரியர் |
|---|---|
| ரிக் சம்ஹிதைகள் | பாடல்களின் தொகுப்பு |
| சாம வேதம் | உச்சாடன நூல் |
| யஜுர் வேதம் | வேள்வி வழிபாட்டு நூல் |
| அதர்வண வேதம் | மந்திர நூல் |
| பிராமணங்கள் | வழிபாட்டு நூல் |
| ஆரண்யகங்கள் | வன நூல்கள் |
| உபநிஷத்துகள் | ஆசிரியர் அருகிலமர்ந்து ஞானம் பெறுதல் |
| ஸ்ருதி | வெளிப்பாடு |
| வேதாங்கம் | வேத உறுப்பு |
| விக்ரமாங்க சரிதம் | பில்ஹணர் |
| இராமசரிதா | சந்தியகாரா |
| கதவத்து | மொக்காலிபுத்த திசா |

- சிகா – ஓவியங்கள்
- கல்பா – சடங்குகள்
- வியாகர்னா – இலக்கணம்
- நிருத்தா – சொல்கூறு
- சந்தஸ் – இசை
- புராணங்களில் நடு நாடு என அழைக்கப்படுவது – சிந்து, கங்கைச் சமவெளி
- தக்காணமும், தென்னிந்தியாவும் சேர்ந்த பகுதி – தட்சிண பதம்
- சிந்துக் கங்கைச் சமவெளியின் நீளம் – சுமார் 3,200 கி.மீ.
- இந்தியாவின் நான்கு திசைகளிலும் மடங்களைத் தோற்றுவித்தவர் – சங்கரர்
- ஆரியர் வருகைக்கு முன்பு இந்தியாவில் ஆதிக்கம் செலுத்தவர்கள் – திராவிடர்கள்
- ஆரியர்களின் சமுதாய அமைப்பில் சூத்திரர்களாக இணைந்தவர்கள் – திராவிடர்கள்
- பண்பாடு என்ற சொல்லை உருவாக்கியவர் – டி.கே. சிதம்பரநாதர்
- இந்தியப் பண்பாடு – இறையுணர்வும், ஆன்மீக வேட்கையோடும் தொடர்புடையது.
- ‘வாழ்விற்குரிய உபநிடத கருத்துகளை வலியுறுத்துவதேப் பண்பாடு ‘ – ராமசாமி அய்யர்
- ஜம்புத்தீவு என அழைக்கப்படுவது – பாரத நாடு
- ‘இந்தியாவை பல இனங்களின் அருங்காட்சியகம்‘ – டாக்டர். ஸ்மித்
- உறுப்பு மாற்று அறுவைசிகிச்சைப் பற்றி கூறும் புராணம் – தமிழ் புராணம்
- ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்‘ என உரைத்தவர்– வள்ளலார்
- காலத்தின் கண்ணாடி என அழைக்கப்படுவது – இலக்கியங்கள்
- ஆற்றுப்படை இலக்கியங்கள் – மன்னர்களின் கொடைத் தன்மையை விளக்குகிறது

- 'யாதும் ஊரே , யாவரும் கேளிர்' – புறநானூறு (கணியன் பூங்குன்றனார்)
- 'திங்களோடும் செழும்பருதி தன்னோடும், விண்ணோடும் உடுக்களோடும் பொங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் ' – பாரதியார்
- முத்தமிழ் என்பது – இயல், இசை, நாடகம்
- 'சங்கத் தமிழ் மூன்றுந்தா' – என விநாயகரை போற்றி பாடியவர் – ஔவையார்
- பாலைப்பண் – பஞ்சுரம் முல்லைப் பண் – சாதாரி நெய்தல் பண் – செவ்வழி
- 'பாரதநாடு பழம்பெரும் நாடு' – பாரதியார்
- ஜி.யு. போப் மொழி பெயர்ந்த்த நூல்கள் – திருவாசகம், திருக்குறள், நாலடியார், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை
- ராமானுஜர் வாழ்ந்த காலம் – சோழர்காலம்
- தாழ்த்தப்பட்டோரை கோவிலுக்குள் சென்று வழிபடச்செய்தவர் – ராமானுஜர்
- நம்பியாண்டார் நம்பியின் ஊர் – திருநாரையூர்
- சைவ சித்தாந்தத்தை பரப்பியவர்கள் – சந்தனாச்சாரியார்கள்
- சோழர்காலத்துச் சமண நூல் – சீவகசிந்தாமணி
- சமண வளர்ச்சிக்கு பாடுபட்ட மன்னர்கள் – முதலாம் ராஜராஜன், முதலாம் லோத்துங்கன்
- நல்வழி, ஞானக்குறள் ஆகிய நூல்கனை எழுதியவர் – ஔவை
- நானோ பாக்கியானம் என்ற நூலை எழுதியவர் – புகழேந்திப்புலவர்
- ஏரெழுபது, இலக்குமி அந்தாதி, சரஸ்வதி அந்தாதி, சடகோபர் அந்தாதி – கம்பர்
- 'அன்பே சிவமும் இரண்டென்பர்' – திருமூலரின் திருமந்திரம்
- திருமறை என்பது – தம்மை அடைந்தவரை சிவமாக்குதல்
- பவத் கீதை உணர்த்துவது – தர்மம்
- இதில் இல்லாதது வேறெங்கும் சொல்லப்படவில்லை என பெயர்பெற்ற நூல் –மகாபாரதம்
- பகவத் கீதை உணர்த்தும் யோகங்கள் – 4 மார்க்கங்கள்
- குரு பூர்ணிமா கொண்டாடப்படுவது – வேத வியாசர் நினைவு
- கிரியை (சடங்குகள்) என்பது கரணம் எனப் பொருள் என்றவர் – தொல்காப்பியர்
- புத்த சமயம் திபெத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு -7-ம் நூற்றாண்டு
- இந்து சமயத்தின் 3 முக்கிய நெறிகள் - 1 ஞான மார்க்கம் (அறிவு நெறி) 2.கரும மார்க்கம் (கடமை நெறி) 3. பக்தி மார்க்கம் (அன்பு நெறி)
- ”பிறன்மனை நோக்காப் பேராண்மையும் சகோதரத்துவத்தையும் ” என்ற பாடல் உள்ள நூல் - இராமாயணம்
- தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும்” - மகாபாரதம்

- பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும் இணைக்கும் கலை - யோகா எனப்படும்
- "இம்மைக்கும் மறுமைக்கும் ஆனந்தம் தருவது உபநிஷத் - ஸ்கோப்பாளர் கூற்று
- "எங்கு எங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்" எனபாடியவர் - தாயுமானவர்

**சிவனின் பஞ்ச பூத வடிவங்கள்**

- திருவானைக்கா - நீர்
- காளஹத்தி - காற்று
- சிதம்பரம் - ஆகாயம்
- திருவண்ணாமலை - நெருப்பு
- காஞ்சி, திருவாரூர் - மண்.

# 30.சிந்து சமவெளி நாகரீகம் (ஹரப்பா பண்பாடு)

- கி.பி. 1826 ல் ஹரப்பாவிற்கு சென்று பழைய குடியிருப்புகளின் சிதைவினை கண்டவர் – சார்லஸ் மேசன்
- கி.பி. 1872 ல் ஹரப்பாவிற்கு சில பொருட்களை சேகரித்தவர் – அலக்சாண்டர் கன்னிங்ஹாம்
- மொகஞ்சதாரோவில் முதன்முதலில் (கி.பி 1922) ஆய்வு மேற்கொண்டவர் - சர் ஜான் மார்ஷல்
- மொகஞ்சதாரோவில் ஆய்வினை தொடர்ந்தவர்கள் - மக்கே, டேல்ஸ் மற்றும் வாட்ஸ்
- 'சிந்து சமவெளி மக்கள் – ஆரியருக்கு முற்பட்டவர்கள்' – ஜான் மார்ஷல்
- 'சிந்து நாகரீக மக்கள் சுமேரியர்கள்' – கார்டன் ஷில்டே
- 'சிந்து நாகரீக மக்கள் திராவிடர்கள்' – பானர்ஜி
- 'சிந்து சமவெளி மக்கள், பல இனத்தவர்' – டாக்டர். குகா
- மொகஞ்சதாரோ அமைந்துள்ள நதிக்கரை – சிந்து நதி
- ஹரப்பா அமைந்துள்ள நதிக்கரை – ராவி (சிந்துவின் துணை நதி)
- 'சிந்து சமவெளி நாகரீகத்தில் விதிமுறைகளின்படி தெருக்கள், வீதிகள் அமைந்திருந்தன' – கார்டன் ஷில்டே
- ஹரப்பா நாகரீகம் – செம்பு கால நாகரீக வகையை சார்ந்தது
- 1960 ல் தாபார் என்பவர் ஆராய்ச்சி செய்த இடம் – ராஜஸ்தானில் உள்ள காலிபங்கன்
- ரூபார் உள்ள இடம் – பஞ்சாப்
- குஜராத்தில் உள்ள லோத்தல் துறைமுகத்தை கண்டறிந்தவர் – எஸ்.ஆர் ராவ்
- மொகஞ்சதாரோ – லார்க்கானா மாவட்டம், 1922 – பானர்ஜி என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.
- ஹரப்பா – மாண்ட்கோமாரி மாவட்டம் – தயாராம் சஹானி என்பவரால் கண்டுபிடிக்கப் பட்டது.

- ஹரப்பா நாகரிகம் கண்டறியப்பட்ட ஆண்டு - கி.பி. 1921
- மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பா - நகர நாகரிகம் ஆகும்
- சிந்து மற்றும் ஹரப்பா நாகரிகம் - சால்கோலிதிக் காலம் எனப்படுகிறது.
- சிந்து சமவெளி நாகரிக காலம் - கி.மு. 3250 முதல் கி.மு.2750 வரை (சர் ஜான் மார்ஷல் கூற்று)
- சிந்து சமவெளி நாகரிக காலம் - கி.மு. 2500 முதல் கி.மு.1500 வரை (மார்டீமர் வீலர் கூற்று)
- சிந்து சமவெளி நாகரிக மக்கள் வணிக தொடர்பு கொண்ட நாடு - சுமேரியா, எகிப்து, பாபிலோனியா.
- மொகஞ்சதாரோ மற்றும் ஹரப்பாவிற்கு இடையில் உள்ள தொலைவு - 600 கிமீ.
- இறந்தவர்களின் நகரம் என அழைக்கப்படுவது - மொகஞ்சதாரோ
- மொகஞ்சதாரோ நகரின் உயரமான பகுதி - கோட்டை (சிட்டாடல்), தாழ்ந்த பகுதி- நகரம் , வெளிப்புற பகுதி - குடிசைகள்
- கோட்டை பகுதிகள் தானியக் களஞ்சியம், மக்கள் கூடும் நகர் மன்றம், பெருங்குளம் ஆகியவை இருந்தன.
- மொகஞ்சதாரோவில் காணப்படும் மிகப்பெரிய கட்டிட அமைப்பு - தானியக் களஞ்சியம்
- வீடுகள் சுட்ட செங்கல்களால் கட்டப்பட்டவை.
- முக்கிய தொழில் - விவசாயம்
- பொழுது போக்கு – தாய விளையாட்டு, காளை சண்டை, சேவல் சண்டை, வேட்டையாடுதல், இசை, நடனம்
- முதன் முதலில் நெற்பயிரை விளைவித்தவர்கள் - சிந்து சமவெளி மக்கள்.
- டெரகோட்டா எனப்படும் சுடுமண்பாண்ட தொழில் மக்களின் முக்கிய தொழிலாக திகழ்ந்தது.
- ஹரப்பாவின் மட்பாண்டங்கள் – சுமேரிய மட்பாண்டங்களை ஒத்திருந்தது
- சிந்து சமவெளி மக்கள் பயன்படுத்திய மட்பாண்டங்களின் நிறங்கள் – சிகப்பு, கருப்பு
- சிந்து சமவெளி மக்கள் வணிகத்திற்கு பயன்படுத்தியவை - சின்னங்கள் ஆகும் .
- உள்நாட்டு வணிகத்துக்கு பயன்படுத்தப்பட்டது – மாட்டுவண்டி
- சமூக வாழ்க்கை - 3 பிரிவுகள்
- சிந்து சமவெளி நாகரீக மக்களின் முக்கிய உணவு - கோதுமை, பார்லி
- குஜராத்தில் குடியேறிய மக்களின் உணவு – அரிசி
- மக்கள் பயன்படுத்திய எழுத்து - பட எழுத்து முறை (சித்திர எழுத்து).முதல் வரி வலமிருந்து இடமாகவும் இரண்டாம் வரி இடமிருந்து வலமாகவும் எழுதினர்
- சமய வழிபாட்டின் சின்னம் - அரசமரம்.
- வணங்கிய கடவுள் - பசுபதி என்ற சிவன், பெண்தெய்வம், திமில் காளை, புறா, தீ, விலங்குகள்

- மறு பிறவி நம்பிக்கை, இறந்தவர்களை புதைக்கும் பழக்கம் இருந்தது.
- விளையாட்டு பொருட்கள் செய்ய பயன்படுத்தியது - டெரகோட்டா எனப்படும் சுடுமண் கதை
- சிந்து சமவெளி நாகரீக மக்கள் பயன்படுத்திய முத்திரையில் பொறிக்கப்பட்டுள்ள உருவம் – காளை
- மைய அரசின் தலைமையிடமாக விளங்கியது – ஹரப்பா
- மாநில அரசின் தலைமையிடமாக விளங்கியது –மொகஞ்சதாரோ
- மொகஞ்சதாரோவில் முக்கிய வாணிகமாக நிகழ்ந்த தொழில் – நூற்பாடைகள்
- மக்கள் கண்ணாடியாக உபயோகித்த உலோகம் – வெண்கலம்
- மருத்துவத்தில் – வேப்பிலைக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்
- ‘சிந்து சமவெளி மக்களின் மொழி தமிழ் ‘ – ஹிராஸ்பாதிரியார்

## 31.வேத காலம்

- இந்தியாவில் வேதகாலம் தோன்றியது – ஆரியர்கள் காலம்
- வேதங்கள் உணர்த்தும் அரிய உண்மைகள் – அறிவு , கர்மம், வழிபாடு .
- இலக்கியங்கள் வகைப்பாடு – 1) சம்ஹிதைகள் 2) பிராமணங்கள் 3)ஆரண்யகங்கள் 4)உபநிடதங்கள் 5)ஸ்ருதி & ஸ்மிருதி 6) வேதங்கள்
- அறிவுக் கருவூலமாகத் திகழ்பவை – சம்ஹிதைகள்
- பழமையான சம்ஹிதைகள் – ரிக் வேத கால சம்ஹிதைகள்
- பிராமணங்கள் என்பது – வேத மந்திரங்களுக்கான விளக்கவுரையுடன் எழுதப்பட்டப் பகுதிகளாகும்.
- ஆரண்யகங்கள் என்பது – அமைதியாக காட்டிற்குச் சென்று கற்றுத் தெளிய வேண்டிய செய்தி என்று பொருள்
- அநுபூதி நெறிகள் மற்றும் தத்துவக் கருத்துக்கள் அடங்கிய பெட்டகம் எனப்படுவது – ஆரண்யகங்கள்
- உலக பந்த பாசங்களிலிருந்து விடுபட்டு, வீடுபேறு அடைய ஞானம் தேவை என உரைப்பது – உபநிடதங்கள் (எண்ணிக்கை = 108)
- செவி வழியே கேட்டுணரப் பெற்ற செய்தி – ஸ்ருதி ஆகும்.
- தர்மசூத்திரம் – ஆரியர்களின் நம்பிக்கைப் பற்றியது
- ச்ரௌத்த சூத்திரம் – யாகம் & சடங்குகள் செய்யும் முறை
- கிருஹ்ய சூத்திரம் – ஆரியர் வாழ்க்கை
- உயர்ந்த உள்ளங்களின் சிந்தனைத் தொகுப்புகள் – ஸ்மிருதிகள்

- சட்டம், சமுதாய முறையை விளக்குவது – தர்மசாத்திரங்கள்
- இதிகாசம், புராணம், சாத்திரம், சூத்திரம் ஆகியன – ஸ்மிருதிகள் ஆகும்.
- ஆரியர்கள் மத்திய ஆசியாவில் இருந்து வந்தவர்கள் (காலம் கி.மு.2000 முதல் கி.மு. 1500 )
- ஆரியர்கள் கைபர், போலன் கணவாய் வழியே இந்தியாவிற்கு வந்தார்கள்.
- ஆரியர்கள் முதலில் குடியேறிய பகுதி - பஞ்சாபில் உள்ள சப்தசிந்து.
- ஆரியர்கள் பின்னர் குடியேறிய பகுதி - கங்கை சமவெளி (ஆரியவர்த்தம்).
- ஆரிய நாகரிகம் - கிராம நாகரிகம் ஆகும்.

## முன் வேதகாலம் (ரிக்வேத காலம் )

- கிமு.2000 முதல் கிமு.1000 வரை
- முன் வேதகாலம் பற்றி அறிய உதவுவது - ரிக்வேதம்.
- கிராம வாழ்க்கை வாழ்ந்தனர்.
- அரசியல் அமைப்பின் அடிப்படை அலகு - குடும்பம் .
- வேத காலத்தின் அரசின் அடிப்படை அலகு – குடும்பம் / குலம்
- குடும்பத்தலைவன் – குலவன் / கிரஹபதி
- தந்தைவழி சொத்துரிமை பின்பற்றப்பட்டது.
- கிராமத் தலைவன் – கிராமணி
- பல கிராமங்களின் கூட்டமைப்பு – விஸ்
- பல விஸுக்களின் கூட்டமைப்பு – ஜனா
- அரசனின் அதிகார வரம்பை 'சமிதி' 'சபா' என்ற இரண்டு அவைகள் கட்டுப்படுத்தின.
- பொதுமக்கள் மன்றம் எனப்படுவது – சமிதி
- பிரபுக்கள் அவை அல்லது முதியோர் அவை – சபா
- முக்கியத் தொழில் – வேளாண்மை
- இரண்டாவது தொழில் – கால்நடை வளர்த்தல்
- பசுவை புனித தெய்வமாகக் கருதினர்
- செல்வ மதிப்பீடு / பண்டமாற்று அலகு – பசு
- பசுவின் உரிமையாளர் பெயர் – கோமத்.
- தந்தை வழி மரபு பின்பற்றப்பட்டது .
- குடும்ப தலைவனான தந்தை கிரகபதி என அழைக்கப்பட்டான்.
- பெண்கள் நிலை - மதிக்கத்தக்கதாக இருந்தது. (பின் வேதகாலத்தில் மங்க தொடங்கியது).
- கல்வியில் சிறந்த முன் வேதகால பெண்மணிகள் - லோபமுத்திரா, விஸ்வவாரா, கோஷா, சிகாதா, நிவாவாரி மற்றும் அபலா.
- வணிக தொடர்பு - மேற்கு ஆசியா, எகிப்து.

- வாணிபத்திற்கு பயன்படுத்திய நாணயம் - நிஷ்கா.
- ஏற்றுமதி பொருட்கள் - அலங்கார பொருட்கள், தந்தங்கள், சந்தனம்.
- இறக்குமதி பொருட்கள் - குதிரை, பேரிச்சம் பழம்
- சோமா என்ற செடியிலிருந்து தயாரிக்கப்பட்ட சோம பானமும், பார்லியிலிருந்து தயாரிக்கப்பட்ட சுரா பானாமும் போதை பொருட்களாக பயன்படுத்தப்பட்டன.
- பொழுதுபோக்கு - வேட்டையாடுதல், தேர் இழுத்தல், சதுரங்கள் ஆடுதல், ஆடல் பாடல்.
- பெண்கள் அணிந்த ஆடைகள் - (உள் ஆடை- வசாஸ் , மேல் ஆடை- அதி வசாஸ், இடுப்பில் அணியும் ஆடை -நிவி)
- இயற்கையை அக்னி, வாயு, வருணன், சூரியன் ஆகிய தெய்வங்களாக வணங்கினர்.
- உருவ வழிபாடு கிடையாது. குடும்பத் தலைவரே சமய குருவாக செயல்பட்டார்.
- விதவை மறுமணம் அனுமதிக்கப்பட்டது.

### பின் வேத காலம்

- கிமு.1000 முதல் கிமு 600 வரை
- சாம, யஜூர், அதர்வண வேதங்கள் பிராமணங்கள் , உபநிடதங்கள், ஆரண்யகங்கள் தவிர இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் தோன்றின.
- எண்வகை திருமண முறைகளைப் பற்றிக் குறிப்பிடும் இலக்கியம் – ஸ்மிருதி.
- அரசியல் நடவடிக்கை மையமாக திகழ்ந்த இடம் - கங்கை சமவெளி.
- யாகங்கள் நடத்தப்பட்டது.
- இராஜசூயம் - அரசன் உயர்நிலை அடைய நடத்தப்பட்ட யாகம்
- அசுவமேத யாகம் - அசுவம் (குதிரை) சென்ற இடம் எல்லாம் தன் கட்டுபாட்டிற்கு கொண்டு வர நடத்தப்பட்ட யாகம்.
- வாஜ்பேயம் - தேர்பந்தயம் (அரசனின் தேர் எப்போதும் வெற்றி )
- ஏக்ராட், சாம்ராட் ஆகிய பட்டங்களை சூடிக்கொண்டனர்.
- மக்களிடம் விதிக்கப்பட்ட வரி - பாலி, சுல்க், பாகா.
- வர்ணம் எனும் சாதிமுறை தோன்றியது.
- சாதிமுறை கடுமையாகப் பின்பற்றப்பட்டது.
- ரிக் வேதம் சாதிமுறையை பற்றிக் குறிப்பிடுவது – புருஷசூக்தம் என்ற பாடலில்.
- சாதிமுறை நான்கு பிரிவு கொண்டது.
- விரி (தேர்ந்தெடுத்தல்) எனும் சமஸ்கிருத மொழியிலிருந்து 'வர்ணம்' என்ற சொல் பிறந்தது.
- புருஷன் எனும் முதல் மனிதனின் உடலிலிருந்து கீழ்க்காணும் சாதிப்பிரிவுகள் தோன்றியதாக புருஷசூக்தம் பாடல் கூறுகிறது.

  பிராமணர் (தலையிலிருந்து தோன்றியவன்) -- குலகுரு, ஆசிரியர்

சத்ரியர் (தோளிலிருந்து) --- ஆட்சியாளர், போர்வீரர்

வைசியர் (தொடையிலிருந்து)--- வணிகர், விவசாயி

சூத்திரர் (பாதத்திலிருந்து) --- கீழ்பிரிவு மக்கள்

- **பின் வேதகால மனித வாழ்க்கையின் நான்கு நிலைகள்:**

  பிரமச்சரியம் -- மாணவபருவம்

  கிரஹஸ்தம் -- குடும்பஸ்தன்

  வனபிரஸ்தம் -- காட்டில் வசித்தல்

  சன்யாசம் -- முற்றும் துறந்த நிலை
- பின் வேதகாலத்தில் பெண்கள் நிலை: மங்கத்துவங்கியது. சீதனம் வழங்கும் முறை அறிமுகமாகியது.
- பின் வேதகாலத்தில் கல்வியில் சிறந்த பெண்கள் -- கார்கி, மைத்ரி
- கார்கி என்ற பெண்மணி ஜனக மகராஜாவால் கௌரவிக்கப்பட்டார்.
- தனுர்வேதம் என்பது -- போர்கலையை குறிக்கும்.
- முக்கிய தொழில் -- விவசாயம்.
- முக்கிய பொழுதுபோக்கு– தேர்ப்பந்தயம், குதிரைப் பந்தயம்.
- இரும்பு அதிகம் பயன்படுத்தப்பட்டது.
- வயலுக்கு உரம் இடப்பட்டது.
- பசுக்களின் எண்ணிக்கையினை பொறுத்து செல்வ நிலை மதிப்பிடப்பட்டது
- பழக்கத்திலிருந்த தங்க நாணயங்கள் -- நிஷ்கா, ஸ்வர்ணா, சதமானா
- கருமார் எனப்படும் செம்பு வேலை செய்பவர் ராஜஸ்தானிலுள்ள கேத்ரியிலிருந்து செம்பு பெற்றனர்.
- சாம்பல் வண்ணம் தீட்டப்பட்ட மட்பாண்டங்களை பயன்படுத்தினர்.
- பாபிலோனியாவுடன் வாணிகத்தொடர்பு இருந்தது.
- வணங்கிய தெய்வங்கள் -- ருத்ரன், பிரஜாபதி, பசுபதி, விஷ்ணு, கிருஷ்ணன்.
- முன்வேதகால கடவுள் – இந்திரன் முக்கியத்துவத்தை இழந்தான்.
- மோட்ச கருத்தில் நம்பிக்கை கொண்டிருந்தனர்.
- பலியிடும் முறை இருந்து வந்தது.

## காவியக் காலம்

- ராமாயணத்தை இயற்றியவர் - வால்மிகி.
- இராமாயணம் – ஏழு பகுதிகளையும், 24,000 செய்யுள்களையும் கொண்டது.
- இராமன் வனவாசம் சென்ற வனத்தின் பெயர் – தண்டகா வனம்.
- மகாபாரதத்தை இயற்றியவர் - வியாசர்

- உலகின் மிகப்பெரும் செய்யுள் நடை நூல் – மகாபாரதம் (ஒரு இலட்சம் செய்யுள் கொண்டது)
- உலகின் மிகச்சிறந்த தத்துவ நூல் – பகவத் கீதை
- குருகுலக் கல்வி முறை பின்பற்றப்பட்டது.
- முக்கியத் தொழில் – வேளாண்மை, ஆடு வளர்த்தல்.
- பொருளாதார வாழ்வின் அலகு – கிராமம்
- வணங்கிய கடவுள் – சிவன், திருமால், பிரம்மா, பார்வதி, கணேசர், இந்திரர், இராமன், கிருஷ்ணன் ஆகியோர்.

## அசோகரின் கல்வெட்டுக்கள்

- அசோகரின் **5–வது பாறைக்கல்வெட்டு** குறிப்பிடுவது – தர்ம மகாமாத்திரர்களைப் பற்றியது.
- **பாப்ரூ கல்வெட்டு –** புத்த சமயக் கோட்பாடுகளைக் கூறுகிறது.
- **கயாவிலுள்ள பராபர் குகைக் கல்வெட்டு –** அஜிவிகர் என்ற சமயத் துறவிகளுக்கு வழங்கப்பட்ட நன்கொடை பற்றிக் கூறுகிறது.

## கனிஷ்கர்

- மகத மன்னரை வென்று புத்தஞானி அசுவகோஷரை தன்னுடன் சேர்த்துக்கொண்டார்.
- புத்த சமயத்தை அசோகருக்கு இணையாக பரப்பியதால் இரண்டாம் அசோகர் எனப்பட்டார்.
- காஷ்மீரத்தில் உள்ள குந்தல்வனம் என்ற இடத்தில் நான்காவது புத்த மாநாட்டை கூட்டினார். தலைவர் -- அசுவகோஷர். மாநாட்டில் பங்குபெற்ற இதர உறுப்பினர்கள் -- வசுமித்திரர், நாகார்ஜுனர், பசவர்.
- நான்காவது புத்த மாநாட்டில் புத்தமதம் மகாயானம் (புத்தர் கடவுள்) ஹீனயானம் (மதத்தலைவர் கடவுள்) என இரு பிரிவாக பிரிந்தது.
- அசுவகோஷர் எழுதியது - புத்த சரிதம், சரிபுத்ரபிருகிருமா (சமஸ்கிருத கவிதைநூல்)
- 'காளிதாசரின் முன்னோடி' எனக்கருதப்படுபவர் – அசுவகோஷர்.
- வசுமித்திரர் எழுதியது -- மகாவிபாசம்
- நாகார்ஜுனர் எழுதியது -- மத்தியமிகாசூத்ரம்.
- கனிஷ்கர் ஆதரித்த புத்தசமயபிரிவு -- மகாயாணம் .(அசோகர் ஆதரித்த புத்தசமயபிரிவு-- ஹீனயாணம் )
- மகாயாணம் பெருவழி என்றும், ஹீனயாணம் குறுவழி என்றும் கருதப்படுகிறது.
- ஹீனயாணம் பாலி மொழியிலும், மகாயாணம் சமஸ்கிருத (அ) பிராக்ருத மொழியிலும் பரப்பப்பட்டது.
- ஹீனயானம் பரவிய நாடுகள் – இந்தியா, இலங்கை.
- மகாயானம் பரவிய நாடுகள் – இந்தியா, திபெத், சீனா, ஜப்பான்.
- மகாயானப் பிரிவின் தலைசிறந்த அறிஞர் – நாகார்ஜுனர்.

- ‘லலித விஸ்தாரம்‘ என்ற நூல் குறிப்பது – புத்தர் வாழ்க்கையை.
- மகாயான கொள்கையை விளக்கும் நூல் – சத்தர்ம புண்டரீகம் (நற்சமயத் தாமரை).
- குப்தர் காலத்தில் பதினெட்டு புராணங்கள் எழுதப்பட்டது.
- பிராமணீயம் (இந்து மதம்) உயரிய நிலையை அடைந்தது.
- கங்கைச் சமவெளியை ‘பிராமணர்களின் பூமி‘ என அழைத்தவர் – பாகியான்.
- பிருகத்சம்ஹிதா கூறும் சாதிகளின் எண்ணிக்கை – 4
- சமுத்திர குப்தர் நடத்திய யாகம் –அசுவமேத யாகம்
- வாயு புராணம், மச்சபுராணம் ஆகிய சிவபுராணங்கள் தோன்றிய காலம் – குப்தர் காலம்
- சமண மத இருப்பிடங்கள் – உதயகிரி, மதுரா
- குப்தர் கட்டிடங்கள் – கருங்கற்களால் ஆனவை.
- ஜான்சி அருகே தியோகராவில் உள்ள தசாவதாரக் கோயில், ஜான்பூர் கோயில், பித்தாரி கோயில் கட்டப்பட்டது.
- அஜந்தா, எல்லோரா, குகைகளில் ஓவியங்கள் வரையப்பட்டன.
- சுல்தான்கஞ்ச்–ல் உள்ள பிரம்மாண்டமான புத்தர் சிலை நிர்மானித்தவர்கள் – குப்தர்கள்.

## ஹர்ஷவர்த்தனர் (கி.பி.606-- கி.பி 647 )

- சமயசகிப்புத்தன்மை, வள்ளல் தன்மையுடையவர்.
- ஐந்தாண்டுக்கு ஒரு முறை நடைபெற்ற பிரயாகை கூட்டத்தில் தனது செல்வத்தைக் கொடையாக அளித்தார்.
- கி.பி 644-ல் யுவான்சுவாங் இந்தியாவிற்கு வருகை தந்தபோது அவரை கௌரவிக்க ஹர்ஷர் கன்னோசியில் 23 நாட்கள் புத்த மாநாட்டை கூட்டினார்.

## விஜயநகரப் பேரரசு: (கி.பி.1336 - 1565).

- இந்து தர்மத்தை நிலைநாட்ட குரு வித்யாரண்யர் ஆசியுடன் கி.பி.1336 - ல் துங்கபத்திரை நதிக்கரையில் ஹரிஹரர், புக்கர் விஜயநகர பேரரசை ஸ்தாபித்தனர்.
- தென்னிந்திய மரபின் இசையின் முன்னோடி என கருதப்படுபவர் – வித்யாரண்யர்
- விஜயநகரப்பேரரசு தோற்றுவிக்க காரணம் -- தெற்கில் இஸ்லாம் சமயம் பரவுவதைத் தடுக்க
- நூல்களை சரஸ்வதி பண்டாரம் என்ற பெயருடன் கோவில்கள் நிர்வகித்தன.
- அப்பையதீச்சிதர் எழுதியவை – அத்வைத தத்துவம் , சைவ சித்தாந்தம்
- வடமொழி இலக்கியத்தை அரசர்கள் பெரிதும் போற்றினர்.
- இந்து சமயத்தைப் பின்பற்றினர்.
- சிதம்பரத்திலுள்ள தில்லை கோவிந்தராஜ சுவாமிக்கு சிலை வடித்தவர் -- அச்சுதராயர்
- ஆரம்ப கால மன்னர்கள் சைவர்களாகவும், பிற்கால மன்னர்கள் வைணவர்களாகவும், இருந்தார்கள்.

- வைணவத்தின் இரு பிரிவுகள் இருந்தன. அவை வடகலை, தென்கலை.
- வடகலை பிரிவின் தலைவர் வேதாந்த தேசிகர்(சமஸ்கிருத வேதத்தை பின்பற்றினர்)
- தென்கலையின் தலைவர் மணவாளமாமுனிகள்(தமிழ் நூலுக்கு ஏற்றம் அளித்தனர்)
- அழகிய தேசிகர் எழுதியது -- சேது புராணம்.
- கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதியது -- கந்தபுராணம்.
- மகாபாரதம் வில்லிபுத்தூரார் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.
- ஹரிதாசர் எழுதியது -- இருசமய விளக்கம்.
- திருமலைநாதர் எழுதியது -- சிதம்பரபுராணம், சொக்கநாதர் உலா.
- நன்னூல் --- பவணந்தி முனிவர்.
- அரிச்சந்திர புராணம் -- நல்லூர் வீரகவிராயர்.

# 32.பத்தொன்பதாம் நுற்றாண்டில் சமுதாய சீர்திருத்தங்கள்

- இந்தியா மறுமலர்ச்சிக்கு நன்றி செலுத்த கடமைபட்டுள்ளது என்றவர் – பி. என். லூனியா

## இராஜாராம் மோகன்ராய்:

- மறுமலர்ச்சி என்பதன் பொருள் – புத்துயிர்ப்பு (அ) மறுபிறப்பு
- சமூக, சமய சீர்திருத்த இயக்கத்தின் முன்னோடி, புதிய உலகின் விடிவெள்ளி, மறுமலர்ச்சியின் தந்தை, புதிய இந்தியாவை நிறுவியவர் , இந்தியாவின் புத்துலக சிற்பி , புதிய மறுமலர்ச்சியை தொடங்கியவர் -இராஜாராம் மோகன்ராய்
- 1774 ல் வங்காளத்தில் ராதா நகர் என்ற ஊரில் பிறந்தார்.
- ஆகஸ்ட் 20, 1828- ல் பிரம்ம சமாஜம் தொடங்கியவர் -இராஜாராம் மோகன்ராய்
- பிரம்ம சமாஜம் என்பதன் பொருள் – இறைவன் சபை
- 1814 ல் ஆத்மிய சபையை நிறுவினார்.
- இவர் எழுதிய நூல்கள் - ஏசு கிறிஸ்துவின் கட்டளைகள், அமைதிக்கும் மகிழ்ச்சிக்கும் வழி.
- இராஜாராம் மோகன்ராய்க்கு ”இராஜா” பட்டம் வழங்கியவர் - இரண்டாம் அக்பர்
- பிரம்ம சமாஜ கோட்பாடு – ஒன்றே குலம் ஒருவனே தேவன்
- பிரம்மசமாஜம் கண்டித்தவை - உருவவழிபாடு, சமய சடங்குகள், தீண்டாமை, சதி
- பிரம்மசமாஜம் -- இந்து சமயத்திலும், வேதங்களிலும் உள்ள நம்பிக்கையை இழக்கவில்லை.
- 1829 -ல் ”சதி” எனும் உடன்கட்டை ஏறுதல் தடை சட்டத்தை வில்லியம் பெண்டிங் பிரபு கொண்டு வர காரணமானவர் -- இராஜாராம் மோகன் ராய் .
- 1872 -ல் பிரம்மசமாஜத்தின் தலைவர் - கேசவ சந்திரசென்
- குழந்தைத் திருமணம், பலதார மணம் ஆகியவற்றை ஒழிக்க பாடுப்பட்டவர்-- கேசவ சந்திரசென்

- இராஜாராம் மோகன்ராய்க்கு பிறகு பிரம்ம சமாஜத்தின் பணியை மேற்கொண்டவர்கள் - கேசவ சந்திரசென், தேவேந்திரநாத் தாகூர்.
- செய்தித்தாள் உலகின் முன்னோடி – இராஜாராம் மோகன்ராய்
- இராஜாராம் மோகன்ராய் தொடங்கிய பாரசீக மொழி பத்திரிகை – பிராதுல் அக்பர்
- இவர் தொடங்கிய பத்திரிக்கையின் பெயர் – சம்வாத் கௌமுதி
- மோகன்ராய் தான் முதன் முதலில் சமய ஒப்புமை ஆய்வை அறிவியல் முறையில் மேற்கொண்டவர் எனக் கூறியவர் – மானியர் வில்லியம்ஸ்
- இராஜாராம் மோகன்ராய் இறந்த இடம் – பிரிஸ்டல் (1833)

## மகரிஷி தேவேந்திர நாத் தாகூர்

- 1842 ல் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்.
- இவர் அறிமுகம் செய்த வழிபாட்டுமுறையின் பெயர் – பிரம்மோபாசனா (இக்கோட்பாடுகளை பரப்பிட தத்துவபோதினி சபா என் ற சபாவை நிறுவினார்).
- இவர் தொடங்கிய பத்திரிக்கையின் பெயர் – தத்துவ போதினி

## கேசவ சந்திர சென்

- 1857 ல் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்தார்.
- 1860ல் சங்கத் சபா என்பதை உருவாக்கினார்.
- இவருக்கு தேவேந்திரருடன் ஏற்பட்ட கருத்துவேறுபாடு ஏற்பட்டது. எனவே இவரை சார்ந்தோர் இந்திய பிரம்ம சமாஜத்தவர் என்றும், தேவேந்திரரை சார்ந்தவர் ஆதி பிரம்ம சமாஜத்தவர் என்றும் அழைக்கப்பட்டனர்.
- இவர் குழுவிலிருந்து பிரிந்த சிவநாத் சாஸ்திரி, ஆனந்த மோகன் ஆகியோர் 1878 ல் நிறுவிய சபையின் பெயர் – சாதாரண் பிரம்ம சமாஜம்

## ஆத்மாராம் பாண்டுரங்

- இவர் ஆரம்பித்த சபையின் பெயர் – பிராத்தனை சமாஜம்
- இவர் குழுவில் இருந்த இராணடே என்பவர் ஆரம்பித்த சங்கத்தின் பெயர் – தக்காண கல்வி சங்கம்

## தயானந்த சரஸ்வதி

- 1875- ல் ஆரிய சமாஜம் தொடங்கியவர் -தயானந்த சரஸ்வதி
- இவரின் இயற்பெயர் -- மூல்சங்கர்
- தயானந்த சரஸ்வதியின் குரு - வராஜ்னந்தர்
- தயானந்த சரஸ்வதி , வராஜ்னந்தரை சந்தித்த இடம் -- மதுரா

- தயானந்த சரஸ்வதியின் முழக்கம் - ”வேதங்களை நோக்கிச் செல்”, ”சுதேசம்”, ”இந்தியா இந்தியருக்கே”
- தயானந்த சரஸ்வதி எழுதிய நூல் - சத்யார்த்த பிரகாஷ் (வேதங்களைப் பற்றியது)
- மதம் மாறிய இந்துக்களை திரும்பவும் இந்து சமயத்திற்கு கொண்டு வர இவர் ஏற்படுத்திய இயக்கம் - சுத்தி இயக்கம்.
- தயானந்த சரஸ்வதியின் சிறப்புப் பெயர் - இந்து சமயத்தின் மார்டின் லூதர்
- சீடர்கள் - லாலா லஜபதிராய், லாலாஹன்ஸ்ராஜ், பண்டித குருதத்
- இவரின் கொள்கையை பின்பற்றியவர்கள் - பாலகங்காதர திலகர், கோபால கிருஷ்ண கோகலே.
- ஆரியசமாஜத்தின் குறிக்கோள் வாசகம் - ”வாய்மையே வெல்லும், பொய்மை அல்ல” என்று பொருள்படும் ”சத்யமேவ ஜெயதே, நா அன்ரிதம்”.
- சாரதா சட்டத்தை ஆதரித்த சமயம் – ஆரிய சமாஜம்
- ஆரிய சமாஜத்தின் வெளிநாட்டுக் கிளைகள் அமைந்துள்ள இடங்கள் –லண்டன் , நியூயார்க்
- தயானந்தர் ஆங்கில வேதக் கல்லூரியை நிறுவியவர் – லாலாஹன்ஸ்ராஜ்

## பிரம்மஞான சபை - (1875) (தியோசாபிகல் சொசைட்டி)

- தியோசாபி என்பது -- கடவுளைப் பற்றிய அறிவு ஆகும்.
- 1875-ல் ரஷ்யாவின் பிளாவட்ஸ்கி, அமெரிக்க கர்னல் ஆல்காட் ஆகியோரால் நியூயார்க்கில் தோற்றுவிக்கப்பட்டது
- பிரம்மஞானசபையின் தலைமையிடம் அமெரிக்காவிலிருந்து மாற்றப்பட்ட இடம் - அடையாறு
- பிரம்மஞானசபையில் அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த அன்னிபெசன்ட் அம்மையார் அங்கத்தினரான ஆண்டு - 1893
- அன்னிபெசன்ட் இந்தியா வந்த ஆண்டு - 1897
- மறைவியல் கல்விப் பள்ளியை நிறுவிய அமைப்பு- பிரமஞான சபை
- இந்தியர்கள் குழந்தைகள் அல்லர், அவர்களுக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தியவர் அன்னிபெசன்ட்
- அன்னிபெசன்ட் தொடங்கிய பத்திரிக்கை - நியூ இந்தியா
- பனாரசில் (காசி) மத்திய இந்துக் கல்லூரி தொடங்கியவர் -- அன்னிபெசன்ட்
- அன்னிபெசன்ட் தொடங்கிய இயக்கம் -- தன்னாட்சி இயக்கம் (1916). இவ்வியக்கத்தை மோதிலால் நேரு, சி.ஆர்.தாஸ். ஆகியோர் ஆதரித்தனர்.

## இராம கிருஷ்ணர்

- இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்கத்தா தட்சிணேசுவரத்தில் உள்ள காளி கோவில் பூசாரி.
- இராமகிருஷ்ணரின் கொள்கை - ”மனிதருக்கு செய்யும் தொண்டே இறைவனுக்கு செய்வதாகும்”
- இராமகிருஷ்ணரின் சீடர் -- விவேகானந்தர் ஆவார்.
- இந்திய வானில் தோன்றிய விடிவெள்ளி என அழைக்கப்படுபவர் – இராம கிருஷ்ணர்

- இராம கிருஷ்ணரின் சீடர் – சாரதா தேவி
- இளம் வயதில் **கதாதரீ** என அழைக்கப்பட்டார்
- கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்பது இவரது கருத்து
- ***இறைவனும் மனிதனும் கலந்த வியக்கத்தகு கலவை*** என இவரைப் பற்றிக் கூறியவர் – விவேகானந்தர்

## விவேகானந்தர்

- இயற்பெயர் - நரேந்திரநாத் தத்தா
- ஆரம்பத்தில் பிரம்மசமாஜ உறுப்பினர்
- இவர் ராமகிருஷ்ண இயக்கத்தை தொடங்கிய ஆண்டு - 1896
- "உண்மைக்காக எதையும் துறக்கலாம் ஆனால் எதற்காகவும் உண்மையை துறக்காதே" - விவேகானந்தரின் பொன் மொழிகள்
- விவேகானந்தரின் கொள்கை -- "ஏழைகளுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் செய்யும் பணியே கடவுளுக்குச் செய்யும் மிகப்பெரிய பணியாகும்".
- அமெரிக்காவில் சிக்காகோ உலகச் சமய மாநாடு நடைபெற்ற ஆண்டு--1893 இம்மாநாட்டில் விவேகானந்தர் " இவ்வுலகச் சகோதர, சகோதரிகளே" என உரையைத் தொடங்கினார்.
- சுவாமி விவேகானந்தரால் இராமகிருஷ்ண மடம் ஏற்படுத்தப்பட்ட இடம் -- பாராநகரில் ஒரு மடமும் (1887), கொல்கத்தா அருகே உள்ள பேலூரில் ஒரு மடமும் (1899) நிறுவப்பட்டது.
- இராமகிருஷ்ண மடத்தின் கொள்கை -- "மனித இனத்திற்கு சேவை செய்வதே"
- நிஷ்காமகர்மம் - பற்றற்ற செயல் (அ) பிரதிபலன் பாராது செயலாற்றுதல்
- பிரஹ்ம பிரபஞ்சங்களுக்கு உள்ள தொடர்பு - உலகாத்மபாவம்
- இந்து சமயப்படி மனிதனின் ஆசிரம கர்மா என்பது - பிரம்மசர்யம், கிரகஸ்தம், வனப்பிரஸ்தம், சன்னியாசம் ஆகியன.
- உபநிஷத் என்பதன் பொருள் - ஈடுபாட்டுடன் நெருங்கி அமர்தல்
- இன உணர்வு மற்றும் உணர்வு என்பது - தருமி ஞானம் (அ) தர்மபூத ஞானம்
- மனிதன் விடுதலை பெற பகவத்கீதை தெரிவிக்கும் 3 வழிமுறைகள் - ஞான மார்க்கம், பக்தி மார்க்கம், கர்ம மார்க்கங்கள்.
- மனித மதிப்பீடுகளின் வரிசை - காமம், தருமம், அருத்தம், மோட்சம்
- வாழ்க்கையின் எதிர்மறை (அ) இருண்ட பகுதி மீது கவனம் செலுத்துவது - **சோர்வு வாதம்**
- தென்திசை கயிலை எனப்படுவது - திருக்காளத்தி, திருச்சிராப்பள்ளி, திரிகோணமலை